# மேனிலை இரண்டாம் ஆண்டு

# தமிழ்

## வகுப்பு

## XII

**HIGHER SECONDARY COURSE**

**SECOND LANGUAGE - TAMIL**

**Second Year**

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2015**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab
*To be printed in quality paper - 80gsm map litho (snow-white)*

© Government of Kerala • Department of Education • 2015

*மாணவச் செல்வங்களே!*

**மொ**ழி என்பது மனிதனை ஒருங்கிணைக்கச் செய்யும் கருவியாக மட்டுமன்றி மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் திகழ்கிறது. மொழியின் இனிமையும் ஆற்றலும் அதனைப் பயன்படுத்துவோரின் தன்மையைப் பொறுத்தே அமையும். மொழி வாயிலாகப் பண் பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றைக் கற்று, காலத்திற்கு ஏற்ப அவற்றைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும். காலச்சூழலுக்கு ஏற்ப மொழியில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. அவற்றை அறிந்து, மொழி அமைப்பினை நன்கு புரிந்து, அதனைக் கையாளும் திறனை மாணவர்கள் பெற வேண்டும். அத்துடன் வாழ்வியல் மதிப்பீடுகளையும் புரிந்துகொண்டு அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற முயலவேண்டும். இந்நோக்கில் கற்றல் அடைவுகளுக்கு ஏற்பப் பாடப்பகுதிகளும் செயல்பாடு களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை நன்கு கற்று மாணவர்கள் பயனடைய வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகள்,

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Team

## Std XII - TAMIL - Second Language

### Members

Allipathumma K., HSST, GHSS, Kumily, Idukki.

Dr. Jeeva Latha S., HSST, Govt. Tamil HSS, Devikulam, Munnar, Idukki.

Dr. Jeya Krishnan P., HOD, Dept. of Tamil, University of Kerala.

Dr. Kamala Selvaraj, Principal, Grace College of Education, Padanthalumoodu.

Dr. Karunanidhi M., HSST, Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.

Dr. Kumar S., HSST, Govt. CPM HSS, Peermedu, Idukki.

Dr. Manickaraj K., Asst. Prof., University College, Tvpm.

Manokaran N., Asst. Prof., Govt. College, Chittur, Palakkad.

Mohanraj E., HSST, St.Sebastian's HSS, Cheenthalar.

Narayana Perumal K., HSST(Rtd.), Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.

Singh M.B., HSA (Rtd.), Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.

Dr. Vijayan A., Asst. Prof., Govt. College, Chittur, Palakkad.

Dr. Vishnukumaran T., Asst. Prof., Dravidian University, Kuppam, Andra Pradhesh.

### Experts

Dr. Gomathy Nayagam E., Guest Lecturer, University of Madras, Chennai.

Dr. Karthikeyan A., Prof.(Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Nainar M., Reader (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman T., Prof., PILC, Pondicherry.

Dr. Rajaram S., Prof. (Rtd.), Tamil University, Thanjavur.

Dr. Ratnasabapathy P., Prof.(Rtd.), Chennai.

Dr. Sethupandian T., Prof. (Rtd.), M.K. University, Madurai.

Dr. Veerappan P., Prof. (Rtd.), NCERT, Mysore.

### Artists

Nandhakumar, Artist, Parishakal, Palakkad.

Rakesh Nair, Artist, Neyyardam.

### *Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas D., Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


**அலகு 1 வயலும் வாழ்வும்** 7 - 30

- ஏறுபூட்டி ........ 8
- நம்ம நிலம் ........ 18
- பசும் பூமி ........ 26

**அலகு 2 கலையும் பண்பாடும்** 31 - 66

- நாட்டார் பண்பாடு ........ 32
- செவ்விலக்கியப் பண்பாடு ........ 44
- கூத்துக்கலை ........ 54

**அலகு 3 அறிவியல் தமிழ்** 67 - 94

- பழந்தமிழ் ........ 68
- இளந்தமிழ் ........ 74
- வளர்தமிழ் ........ 86

**அலகு 4 என்றும் நலமுடன்** 95 - 116

- நலம் நாடி ........ 96
- சுவரிருந்தால் ........ 102
- ஆடுவோம் பாடுவோம் ........ 108

**அலகு 5 சமூகச் சீர்திருத்தம்** 117- 140

- சுவடுகள் ........ 118
- புத்துணர்வு ........ 126
- எழுச்சி ........ 130

**சொல்லகராதி** 141

KAAANaCHANA

அலகு 1

# வயலும் வாழ்வும்

உழவர்களே இவ்வுலகத்தின் ஆணிவேராக இருக்கிறார்கள். வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடே ஏற்றம் பெறுகிறது. அவ்வகையில் வேளாண்மைக்கு இலக்கியத்திலும் முக்கிய இடமுண்டு. சங்ககாலம் தொட்டு இன்றுவரையுள்ள இலக்கியங்களில் வேளாண்மை பற்றிய செய்திகள் பரவலாக இடம்பெற்றுள்ளன.

முன்னோர் வழிவந்த இயற்கை விவசாய முறை இன்று இயந்திரங்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சி பரம்பரை விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. உழவுத் தொழிலில் ஈடுபடாதவர்களும் அத்தொழிலின் தேவையையும் மேன்மையையும் அறிந்திருக்க வேண்டும். இவ்வலகு ஏறு பூட்டி, நம்ம நிலம், பசும் பூமி என்றமைந்து விவசாயத்தின் நிலையை உணர்த்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- வேளாண் தொழிலின் மேன்மை அறிகிறார்கள்; அது குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- வேளாண் தொடர்பான படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்து விமரிசனக்குறிப்பு எழுது கிறார்கள்.
- சுற்றுப்புறத்தூய்மை, மாசுக்கட்டுப்பாடு போன்றவை பற்றி விழிப்புணர்வு பெறுகிறார்கள். அவற்றை எழுத்து வடிவில் சுட்டிக்காட்டுகிறார்கள்.
- வேளாண் தொடர்பான பாடல்கள், பழமொழிகள், செய்திகள் போன்ற வற்றையும் படங்களையும் தொகுத்து வேளாண் மலர் தயாரித்து வெளியிடுகிறார்கள்.

# ஏறு பூட்டி



## உழவு

- சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
  உழந்தும் உழவே தலை.

- உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃ்து ஆற்றாது
  எழுவாரை எல்லாம் பொறுத்து.

- உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
  தொழுதுண்டு பின்செல் பவர்.

- பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
  அலகுடை நீழ லவர்.

- இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
  கைசெய்தூண் மாலை யவர்.

- உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
  விட்டேம்என் பார்க்கும் நிலை.

- தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
  வேண்டாது சாலப் படும்.

- ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
  நீரினும் நன்றதன் காப்பு.

- செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
  இல்லாளின் ஊடி விடும்.

- இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
  நிலமென்னும் நல்லாள் நகும்.

– **திருக்குறள்**

**பசித்தவர்கள் பக்கம்**

நேசம் விதைத்த காட்டில்
நெருப்பு முளைத்தாலும்
பிடுங்கி எறிந்துவிட்டு
உழுது விதை விதைப்பேன்.
தத்துவங்கள் வீழட்டும்
தேசங்கள் சிதறட்டும்
உலகம் எதையும் பிதற்றட்டும்
பசித்தவர்கள் பக்கமே என்றும்
நான் இருப்பேன்.

– **கவிஞர் சமயவேல்**

**திருவள்ளுவர்**



இரண்டே அடிகளில் மிகப் பெரிய வாழ்வியல் உண்மைகளைகளை வெளிப்படுத்தியவர் வள்ளுவர். சாதி சமயங்களைக் கடந்து உலகத்திற்கான பல்லுயிர் சிந்தனையோடு குறள்கள் படைத்தவர். திருக்குறளுக்கு முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என வேறுபெயர்களும் உண்டு.

**செயல்பாடுகள்**

- உழவின் பெருமையை வள்ளுவர் வழி நின்று விளக்கிச் சிறு கட்டுரை எழுதுங்கள்.
- “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்....” என்னும் குறட்பாக் கருத்தினை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- வேளாண்மை தொடர்பான பழமொழிகளைத் திரட்டுங்கள்.

# மண்நேசம்

**வி**டிந்து வெகு நேரமாகியும் நடந்த விஷயம் அவர்களுக்குத் தெரியாது.

பன்னிரண்டு ஜோடி உழவு மாடுகள் கட்டிக் கிடக்கும் அந்தப் பெரியமாட்டுத் தொழுவமே தஞ்சமென்று கிடந்து, அவற்றைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பிலிருக்கும் பாக்குவெட்டிப் பாட்டையா, வழக்கம் போலத் தலைக்கோழி கூப்பிடும் நேரத்துக்கு எழுந்து, ஊருணிக் கரைக்குப் போய் வெளிக்கு இருந்துவிட்டு, படப்படிக்குச் சென்று ரெண்டு கட்டுக் கூளம் முறித்துக் கொண்டு வரும் நேரத்துக்குள் அது நடந்திருக்கிறது.

எப்போதும் போல ரெண்டாங்கோழி கூப்பிட்டதும் தொழு வேலைக்கு வரும் அந்தப் பன்னிரண்டு ஏர் உழவுக்காரர்களும் தொழுவுக்குள்ள காலெடுத்து வைத்ததும் திடுக்கிட்டுப் பார்த்து அவர்கள் கேட்டபோது “என்னமோப்பா எனக்கு ஒன்னும் தெரியாது” என்று சொல்லி விட்டார். நேரம் பளபளவென்று விடிந்தது. தொழுவுக்கு முன்னால் ஒரு பெரிய கூட்டமே கூடிவிட்டது. முதலாளி வீட்டுக்குப் போய் வெளியே கேட்டு வாசல் திறக்கும் வரையிலும் காத்துக் கிடந்து, பாட்டையா கேட்ட போது தான் விவரமே தெரியவந்தது.



மைனர் முதலாளி பன்னிரண்டு ஜோடி மாடுகளையும் ராவோடு ராவாக வந்து படுத்துக்கிடந்த மேலப்பா ளையம் வியாபாரிகளுக்குப் பத்தி விட்டுவிட்டு, அவர்களோடயே திருநெல்வெலிக்குப் போயிருக்கி றாராம் என்று.

கேட்டதும் பாட்டையாவுக்கு அதிர்ச்சி. மனத்துக்குள் வருத்தம். அப்போது அங்கு அவரைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த சிலர் “என்னடா எழவு! இந்த மனுசனுக்குத் தெரியாமலா இவ்வளவு பெரிய காரியம் நடந்திருக்கு! அப்படின்னா இவர எந்த அளவுக்கு இந்த வீட்டுல வச்சிருக்காகன்னு பாருங்களேன்! வெறும் வயித்துக் கஞ்சிக்குக் கெடக்கிற மனுசன்னு நினைச்சுட்டாங்களா?” என்று ஆத்திரப்பட்டனர்.

பாட்டையா சிந்தித்துக் கொண்டே இருந்தார். மீண்டும் தொழுப் பக்கம் போகும் மனநிலையில் இல்லை அவர். அங்கு அவருக்கு வேலையும் கிடையாது. எனவே ஊர் மடத்தைப் பார்த்துப் போய் உட்கார்ந்தார் அவர்.

பாட்டையாவுக்குச் சொந்த ஊர் கிழக்கே பாக்குவெட்டிக் கிராமம். அந்த ஊருக்கு வந்து நாற்பது வருஷத்துக்கு மேலாகிறது. அப்போது நல்ல பிராயம் அவர். கலியாணம் முடிக்காத மனுசன். அவர் அவ்வூருக்கு வேலை தேடி வரும்போது, அவரது உடல் வாக்கையும், பேச்சுத்திறனையும் பார்த்த இந்த மைனர் முதலாளியின் தகப்பனார் – மூனாப் பீனா முதலாளி அவரை வேலைக்கு டபக் கென்று இழுத்துப் போட்டுக் கொண்டார். வீட்டிடமாகச் சாப்பாடு. சம்பளம் சாவடி என்று அப்போதைக்கு எதுவும் பேசிக்கொள்ளவில்லை. போகப்போக அவர் விசுவாசத்தைக் கண்டு வீட்டிலுள்ள ஒரு நபராகவே ஏற்றுக்கொண்டார். விவசாயத்தில் இவர் நல்ல கோளாரான ஆள். கைராசிக்கார மனுஷனும் கூட, இவர் வந்து கலப்பை தொட்ட பிறகே, எட்டேர் நடந்த இடம் பன்னிரண்டு ஏராக உயர்ந்தது என்பது மு.பி. முதலாளியின் கணக்கு. சந்தோஷம். அதனால் இவருக்கு அவரிடத்தில் பிரியம் ஜாஸ்தி. இவரது ஆலோசனை இல்லாமல் முதலாளி எந்தக் காரியத்துக்கும் வலது காலை எடுத்து வைப்பதில்லை.

பாட்டையா இப்போது தளர்ந்த பருவம். ரெண்டு வருஷமாகத்தான் அவர் கலப்பை பிடிக்கப் போகவில்லை. பன்னிரண்டு ஜோடி மாடுகளையும் பார்த்துக் கொண்டு தொழுவிலேயே இருந்து கொள்ளும்படி முதலாளி சொல்லியிருந்தார். ஆனாலும் பாடிய வாயும், ஆடிய காலும் சும்மா கிடக்குமா? காட்டுக்கும் வீட்டுக்குமாக அவரது கால்கள் சாரட்டுப் போட்டபடியே இருக்கும். ஒவ்வொரு நாளும் கரிசலுக்குப் போய் அவர் கண்பட்டால்தான் அவருக்கு ராத்திரிக்குக் கண்ணடையும்.

ஆறுமாதங்களுக்கு முன்னால் மு.பி. முதலாளி திடீரென்று கண்ணை மூடிவிட்டார். என்றைக்கு மைனர் வந்து ஆட்சிக்

### போராளிகள்

திருமலைராயனின் மந்திரி ஒருவருடன் காளமேகம் நடந்து சென்றுகொண்டிருந்தார். களத்துமேட்டிற்கு அருகே ஒரு கொல்லையில் சில உழவர்கள் கூளங்களைக் குவித்து அடுக்கிப் படப்பாக வேய்ந்து கொண்டிருந்தார்கள். (கூளம் என்பது, வைக்கோல், பழுத்த நெல்தாள், அறுத்து அடித்து நெல்லைப் பிரித்தபின் வைக்கோல் ஆகும்)

மந்திரியாரும் காளமேகமும் வருவதைக் கண்டு படப்பை விட்டுக் கீழிறங்கி நின்று வணங்கினார்கள் அந்த ஆட்கள். அவர்களிடம் நலன் விசாரித்துவிட்டுப் போய் வேலையைப் பாருங்கள் என்று கூறி மந்திரி விடை பெற்றார்.

கட்டில் ஏறினாரோ, அன்றையிலிருந்தே, அனுபவத்தில் பழுத்த பாட்டையாவின் சொல்லுக்கு அவ்வீட்டில் மரியாதை இல்லாமல் போய்விட்டது. உண்மையாக உழைக்கிற அந்தப் பன்னிரண்டு ஏர் உழவுக்காரர்களின் யோசனையும் எடுபடவில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் திடீர் திடீரென்று தன்னிச்சையாக முடிவெடுப்பதும், அதனால் முட்டிவிட்டுக் குனிவதும் மைனருக்கு வாடிக்கையாகிப் போயின. அந்த வளர்ச்சியின் முற்றிய பருவம்தான் திடீரென்று பன்னிரண்டு ஜோடி உழவு மாடுகளையும் தொழுவை விட்டு வெளியேற்றிய கதை.

பொழுது மூணுக்கு மேலாகியும் திருநெல்வெலி போயிருந்த மைனர் முதலாளி வந்தபாடில்லை. பாட்டையாவும் அந்த உழவுக்காரர்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேலைக்காரர்கள் கூலி கொத்து வாங்க வேண்டிய நேரம். வயிற்றுப் பிரச்சினை.

பாட்டையா இப்போது மாட்டுத் தொழுப்பக்கம் போய் மூணுநாளுக்கு மேலாச்சு. வேலையில்லாததால் சாப்பாட்டுக்காக அவர் மைனர் வீட்டுப்பக்கம் லாந்தவும் இல்லை. மைனர் வீட்டு ஆட்களும் பாட்டையாவைக் காணோம் என்று தேடி வந்ததாகவும் இல்லை. அவரோடு சேர்ந்து உழுத அவ்வுழவுக்காரர்கள் வீடுகளிலேயே நாளுக்கு ஒருவர் வீட்டில் புகல் கழிந்து வந்தது அவருக்கு.

நாலாவது நாள் ஊருக்கு வந்தார் மைனர் முதலாளி. புத்தம் புதிய உழவுக்கார் ஒன்றும் அவரோடு வந்திருந்தது. அது அவ்வூருக்கு முதல் முதலாக வரும் உழவுக்கார். சட்டிக் கலப்பை, பல்கலப்பை, டக்கர் சகிதமாக வந்து இறங்கி இருந்தது. படப்படிக் கொட்டாரத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருந்த அக் காரை ஊர் ஜனங்கள் வந்து அதிசயமாகப் பார்த்த வண்ணமிருந்தார்கள். மைனருக்கு ரொம்ப ரொம்பப் பெருமையாக இருந்தது. பெருமிதத்தோடு அந்தக் கூட்டத்திற்கு முன்னால் நின்ற மைனர் விவரித்தார். "உழவுமாடுகளை வித்திட்டு இந்த உழவுக்காரை நான் எதுக்கு வாங்கினேன்னு தெரியுமா? ஏர் மாடுகள வச்சு நம்மளால மாரடிக்க முடியலே. கூளம், பருத்திவிதை, புண்ணாக்கு, தவிடு அது இதுன்னு செலவு அத்துக்கிட்டுப் போகுது. பன்னிரண்டு ஏர் உழவுக்காரர்களுக்கும் கூலி கொத்து அளந்து

காளமேகம் சொன்னார். நாம் தான் அவர்களுக்கு முதலில் வணக்கம் சொல்லியிருக்க வேண்டும். நாட்டையும் மக்களையும் காக்கும் வீரர்கள். அவர்கள் உண்மையான போராளிகள் என்று பாராட்டினார். இது மந்திரிக்குப் புதிராய் இருந்தது. புலவர் ஐயா அவர்கள் போர் வீரர்கள் அல்ல, உழவர்கள் என்றார்.

போர் வீரர்களைவிட உழவர்களான ஏர் வீரர்களே சிறந்தவர்கள். போர் வீரர்கள் எதிரிகளின் படையை அழிக்கலாம். ஆனால் எதையும் படைப்பதில்லை. இவர்கள் நமக்கெல்லாம் அன்னம் படைக்கிறார்கள். உண்மையில் இவர்களும் போராளிகளே என்றார் காளமேகம்.

போராளிகளா? என்றார் மந்திரி.

ஆமாம் நாம் வரும்போது அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

முடியல. மத்தியானக் கஞ்சி வேற ஊத்த வேண்டியதிருக்கு. ரெண்டு வேள காப்பி. நல்லது பொல்லாததுக்குச் சாப்பாடு. வருஷத்துக்கு ரெண்டு தடவ கோடி. இத்தனைக்கும் மேலா இந்த மாடுகளைப் பார்க்க மெனக்கட்ட ஆள் ஒன்று. இதெல்லாம் வச்சு உழுதவன் கணக்குப் பார்த்தாத் தார்க்குச்சிகூட மிஞ்சுற மாதிரித் தெரியலே! அதனால்தான் இந்த யோசன... உழவுக்காரரை வச்சு நம்ம நிலத்தை யும் உழுதுக்கிறலாம். பணத்து ஏர்க்கும் போய்க்கிறலாம். டக்கர வச்சு நம்ம வீட்டுக்கூளம் குப்பைகளையும் அடிச்சுக்கிறலாம். வாடகைக்கும் போய்க்கிறலாம். என்ன நான் சொல்றது?"

மைனருக்கு முன்னால் நின்ற எவருமே எதுவும் பேசவில்லை. அவர் வீட்டு உழவுக்காரர்களும் அங்கே இருந்தார்கள். பாட்டையாவும் ஒரு ஓரமாக நின்றுகொண்டிருந்தார்.

கரிசல் காட்டில், அந்த அருங்கோடையில் உழவடிப்பதைத் தவிர வேறு வேலை ஒன்றும் கிடையாது. அந்தப் பன்னிரண்டு ஏர் உழவுக் காரர்களும் மைனர் வீட்டுக்குப் போய், மிச்சம், சொச்சம் கூலியைக் கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டார்கள். மறுநாள் முந்திய நாள் ராத்திரி கூடிப் பேசி ஆலோசித்து வைத்திருந்தபடி தூத்துக்குடிப் பக்கம் பிழைப்புக்காகப் போனார்கள். வயதான அந்த நேரத்திலும் பாக்குவெட்டிப் பாட்டையா தவக் தவக் கென்று அவர்களுக்குப் பின்னாலே பயணமானார். பஞ்சமா பஞ்சத்திலேயும் வந்தவர்களை வெள்ளை வீசி வரவேற்க அங்கு ஏராளமான உப்பளங்கள் இருக்கின்றன. இது போக ஸ்பிக், அனல் மின்சாரம் துறைமுகம் என்று வேறு இருக்கவே இருக்கு, ஆடையும் கோடையும் அவர்களைத் தாங்க.

பாட்டையாவும் இப்போது காட்டுக்குப் போகிற காலமல்லவா? அவரை எந்த வேலைக்கும் போகச் சொல்லவில்லை, அவரைக் கூட்டிக்கொண்டு போனவர்கள். உதவிக்கு ஆள் இல்லாத வீட்டுக்காரர்களுக்கு அவர் சோறாக்கி வைத்துக் கொண்டிருந்தார். தூத்துக்குடியில் மூணுவேளையும் நெல்லுச் சோறு. நெல்லுச் சோற்றைத் தின்றுத் தின்று அது பாட்டையாவுக்கு முகத்திலடிச்சுப் போச்சு. பாட்டையா பிறந்த நாளிலிருந்து நேற்று வரை கம்மங்கஞ்சியையும், கரிசல் மண்ணையும் சேர்த்துக் கரைத்துக்

போர் செய்து கொண்டிருந்தார்கள் அல்லவா?

அது வெறும் வைக்கோல் போர்

வைக்கோல் மட்டும் என்ன? அது நமது யானைப் படைக்குச் சமம். சாமானியமாய்க் கருத வேண்டா

மந்திரிக்குப் புரியவில்லை. வைக்கோலும் போர் யானையும் எப்படி ஒன்றாகும்? என்று கேட்டார் மந்திரி

காளமேகம் கவி பாடினார்

**வாரிக் களத்தடிக்கும், வந்தபின்பு கோட்டைபுகும்**
**போரில் சிறந்து பொலிவாகும் - சீருற்ற செக்கோல்**
**மேனித் திருமலைரா யன்வரையில்**
**வைக்கோலும் மால்யானை யாம்.**

காளமேகம் விளக்கினார்:

குடித்துக் கொண்டிருந்தவர். இப்போது அவர் கம்மங் கஞ்சிக்கு ஏங்கிக் கிடக்கிறார்.

தூத்துக்குடி உப்பளத்து வாசம் பாட்டையாவுக்கு எங்கேயோ ஒரு பாலைவனத்தில் கொண்டு படுக்க வைத்திருப்பது போன்ற ஒரு நெருடலான உணர்வை உண்டுபண்ணியிருந்தது. அந்தக் கட்டாந்தரையில் அவர் கட்டை மட்டுமே கிடந்ததே தவிர உயிரும், மூச்சும் கரிசல் காட்டையே சுற்றிச் சுற்றி வந்தன. ஒவ்வொரு காலகட்டத்திலும் இப்படியிப்படியெல்லாம் நினைப்புகள் வந்து மோதி வாட்டும். இந்நேரம் கரிசலில் விதைப்புகள் நடக்கும். இப்போது ஓடி ஓடிக் களை எடுத்துக் கொண்டிருப் பார்கள். இது பயிரடிப்பு நேரம்... இப்போது கம்மம் பயிர் பொதி தள்ளி இருக்கும். தும்பைப் பூ நிறத்துல வெள்ளை வேட்டிகள விரிச்சு வச்சது மாதிரி கொத்தமல்லி பூப்பூத்து நிக்கும்... சோளப் பயிர் ஒரு ஆள் ஒயரத்துக்கு கொக்காங் கொக்கான்னு வளர்ந்திருக்கும். பருத்திச் செடியும், காட்டு மொளகாச் செடியும் செல்லப்பிள்ளைக மாதிரி குதியாட்டம் போட்டுக்கிட்டு இருக்கும். இன்னைக்குத் தைப் பொங்கல். பனியில் நனைஞ் சுக்கிட்டு காப்புக் கட்டி இருப்பாக. மறுநாள் மாட்டுப்பொங்கல். எல்லா மாடுகளும் தெக்கு வீட்டு மொதலாளி கண்மாயில நிற்கும். ஊர் குதூகலமா இருக்கும். தை கடைசி. கதிர் காய் பொறுக்குகிற நேரம். மல்லிக்காய் பிடுங்கி களத்துக்கு வந்திருக்கும். ராத்திரிப் பகலா களத்துச் சோலி நடக்கும். மூடை மூடையா வெள்ளாம வீடு போய்ச் சேரும். ஊரெங்கும் வெள்ளாம மணக்கும். இந்தக் கண் கொள்ளாக் காட்சிகளயெல்லாம் பாக்கக் குடுத்து வைக்காம நான் இந்தக் கடற்கரையிலே வந்து கெடக்கேன். குருடன் போல..

ஒரு நாள் என்ன நினைத்தாரோ, அங்கிருந்து எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு திடீரென்று அந்தக் கரிசல் கிராமத்திற்குப் புறப்பட்டு வந்தார் பாட்டையா.

அந்த வருஷம் பொருத்தமாகப் பருவ மழை பெய்திருந்ததால் அவர் நினைத்தது போலவே வெள்ளாமை சக்கைபோடு போட்டுக்கொண்டிருந்தது. களத்துச் சோலிகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. களத்து மேட்டில் லாந்தி லாந்திப் பார்த்தார் பாட்டையா. மைனரையோ அவர் வீட்டு வேலைக்காரர்களையோ அங்குக் காணோம். அங்கிருந்த யாரிடமும் எதுவும் கேட்டுக்

போர்க்களத்தில் யானைகள் தம் துதிக்கையால் பகைவரின் காலாட்படை வீரர்களை வாரி எடுத்துத் தரையில் மோதிக் கொல்லும். பின் அவை பகை மன்னர்களின் கோட்டைகளைத் தகர்த்து உள்ளே புகும். இவையே போர் யானைகளின் செயல்.

நுனியில் நெல்லைத் தாங்கியிருக்கும் நெற்கதிர்கள் அறுவடை செய்வோரால் வாரி அணைத்துக் கொண்டு வரப்பட்டுக் களத்தில் அடிக்கப்படும். போர் போராகக் கோட்டைக்குள் சீராக வைக்கப்படும்.

இதுவே வைக்கோலின் தன்மை. இவ்வாறாக வைக்கோலும் யானையும் ஒரே குணம் கொண்டதாகக் காணப்படுகிறது.

அறிவாற்றல் துலங்க காளமேகம் சிலேடையாய்ப் பாடிய திறன் கண்டு மந்திரி பெரிதும் பாராட்டினார்.

கொள்ளவில்லை. காடு கரைகளுக்குப் போயிருக்கலாமோ? கண்மாய்க் கரை வழியாக மைனர் வீட்டு மந்தைப் பிஞ்சைக்குப் போனார் அவர். படப்படிக் கொட்டாரத்தில் உழவுக்கார் நின்று கொண்டிருந்தது.

அது ஒரே எடுப்பிலுள்ள நூறு குறுக்கம் கரிசல். மந்தைப் பிஞ்சையில் கால் பட்டதும் குனிந்து கும்பிட்டு, கொஞ்சம் கரிசல் மண்ணை எடுத்து வாயில் போட்டு நெற்றியிலும் வைத்துக் கொண்டார் பாட்டையா. மேலாப் பொழியிலிருந்து வடக்கு முகமாக நடந்தார் அவர். ஒவ்வொரு முழு நீளத்தில் கம்மங்கதிர்கள் முற்றிக் காய்ந்து இருந்தன. பந்து பந்தாக வெடித்துப் பிதுங்கிப் போய்க் கிடந்தன பருத்திகள். சோளக் கதிர்கள் பூமித்தாயைப் பார்த்தபடி கொங்காணி போட்டு நின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் காட்டு மிளகாய்ப்பழம் செக்கச் செவேலென்று தெரிந்தன. பாட்டையா வந்திருப்பதைப் பார்த்து, பக்கத்துப் பிஞ்சைக்காரர் ஒருவர் வந்தார். இருவரும் சுகசேமங்களை விசாரித்துக்கொண்டார்கள். பின் அந்த மனிதர் சொன்னார். "பாட்டையா இந்த வருசம் கரிசல்ல வெள்ளாம எடுத்து முடியல. விழுந்த பிள்ளையைக் கூடத் தூக்கிவிட நேரமில்லாம வேல நடக்கு. ஆனா ஒங்க மைனர் வீட்டுப் பிஞ்சைகள்ல இன்னும் கத்திவைக்கல. ஒரு பிடி தானியம்கூட வீட்டுக்குப் போகலே. அவர் தான் என்ன செய்வார்? கூலிக்கு ஆள் கிடைக்கமாட்டேங்குது. அவுக அவுக சோலி அவுகளுக்குச் சரியா இருக்கு. வெளியூர்கள்ல போயும் ஆள் கூப்பிட்டுப் பார்த்துட்டு வந்தாச்சு; அங்கேயும் இதே நிலமதான். மைனர் ரொம்பக் கவலப்பட்டுக் கெடக்காரு."

"மைனர் வீட்டுக் காடுக எல்லாம் இப்படித்தான் இருக்கும்" என்று எண்ணியபடியே அனிச்சையாக வானத்தை அண்ணாந்து பார்த்தார் பாட்டையா. அன்று பொழுது முகம் சரியாகவே தெரியவில்லை. கருமேகங்கள் திட்டுதிட்டாகத் தெரிந்தன. இப்படித்தான் அஞ்சாறு வருஷத்துக்கு முன்னால் தை, மாசியில் திடீரென்று ஒரு மழை வந்து வெள்ளாம எடுக்க முடியாமல் பலத்த சேதாரத்தை உண்டு பண்ணியது அவர் நினைவுக்கு வந்தது. மனம் பதறினார் அவர்.

### நெல் வகைகள்



நெற்பயிர் புல் வகையைச் சேர்ந்த தாவரமாகும். இப்பயிரின் விதையின் மேலுறை உமி என அழைக்கப்படுகிறது. உமி நீக்கப்பட்ட விதை அரிசி. அரிசிக்கு முளைக்கும் திறன் கிடையாது. இந்தியாவில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட நெல் வகைகள் இருந்தன. வாடன் சம்பா, முடுவு முழுங்கி, குள்ளக்கார், நவரை, குழி வெடிச்சான், அன்னமழகி, மாப்பிளைச் சம்பா, சீரகச் சம்பா, விஷ்ணுபோகம், கிச்சடிச் சம்பா, பனங்காட்டு குடவாழை, கல்லுண்டை, இலுப்பைப்பூச்சம்பா, காட்டுயானம், நெய் கிச்சி போன்றவை சில தமிழகப் பாரம்பரிய நெல் வகைகளாகும்.

அந்த பிஞ்சையையே பார்த்துக்கொண்டிருந்த அவர், தெற்கு முகமாகப் பார்வையைத் திருப்பினார். அப்போது அந்த மந்தைப் பிஞ்சைக்கு மைனர் முதலாளியும் அவர் சம்சாரமும் வந்து கொண்டிப்பது தெரிந்தது. அவர்களை எதிர்கொண்டு வரவேற்று வணங்கிய பாட்டையா, "என்ன தம்பி, வெள்ளாம இப்படிக் காட்டுல கெடக்குது, காலா காலத்துல வீடுபோய்ச் சேர வேண்டாமா?" என்றார் மனமுருக.

"................................"

எல்லா விஷயமும் எனக்குத் தெரியும் தம்பி. நீங்க உத்தரவு குடுத்தீங்கன்னா நான் தூத்துக்குடி போய் நம்ம ஆட்களயெல்லம் குடும்பத்தோட கொண்டாந்திடுவேன். அவுக வந்து கை வச்சாங்கன்னா ஒரு வாரம் பத்து நாளைல எல்லாத்தையும் ஒப்படி பண்ணி முடிச்சிடலாம்.

பாட்டையாவின் பேச்சைக் கேட்டுப் புல்லரித்துப் போன முதலாளி, அவரது இரு கைகளையும் அழுந்தப் பற்றிக் கொண்டு உள்ளம் நெகிழ்ந்துபோனார். அவரது மனைவியின் மனநிலையும் அப்படியே! அப்போது அவள் சொன்னாள்: "பாட்டையா செலவுக்குப் பணம் நான் தர்றேன். நீங்க போயி நம்ம...."

"பணம் மட்டும்போதாது அம்மணி; ஒரு கை கம்மங் கஞ்சியும் வேணும்; இருந்தா ஊத்து; வயிறு குளிரக் குடிச்சிட்டுப் போறேன்" பாட்டையா வேண்டினார்.

மூவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

**– அ. முத்தானந்தம்**

**அ. முத்தானந்தம்**

சூரங்குடி அ. முத்தானந்தம் என்பது முழுப் பெயர். மண் வாசனை வீசும் கதைகளால் வாழ்வின் அவலங்களைச் சுட்டிக்காட்டுபவர். கரிசல் காட்டில் ஒரு அத்தையும் மாமாவும், நல்லம்மா, சூல் ஆடு என்பன இவரது படைப்புகள்.

## செயல்பாடுகள்

- பாட்டையா கதாபாத்திரத்தைத் திறனாய்வு செய்து குறிப்பு எழுதுங்கள்.
- மண்நேசம் கதையின் மையக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு கவிதை எழுதுங்கள்.
- கதையில் வரும் வட்டாரவழக்குச் சொற்களைக் கண்டறிந்து வட்டாரவழக்கு அகராதி தயாரியுங்கள்.
- வேளாண்துறையில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உழவர்களுக்கு மகிழ்வைத் தருகின்றது / தரவில்லை எனும் தலைப்பில் வழக்காடுமன்றக் குறிப்புகள் தயாரியுங்கள்.

# பயிர்த்தொழில் பாடல்கள்

**த**மிழ்நாட்டுக் கழனிகளில் நெல்லும் கரும்பும் வாழையும் மட்டும் விளையவில்லை; செந்தமிழ்க் கவிதைகளும் விளைகின்றன. உழுதொழில் செய்கின்ற மக்கள் பலவகையான இனிய பாடல்களைப் பாடுகின்றனர்.

அடிமடை நன்செய்
முதல்மடை வாய்க்கால்
அறுபதுகாணி அகலம்
எழுபதுகாணி நிகளம்
சேறு புரட்டியல்லே
சிறுமணி நாத்துவிட்டேன்.

குத்து முத்துச் சம்பா
குடமல்லிச் சம்பா
மல்லிகைச் சம்பா
மணமுள்ள சம்பா
சிறுநெல்லு சம்பா
சீரகச் சம்பா

சங்குபோல் நெல்விளையும்!
சமுத்திரம்போல் போர் ஏறும்!
முத்துப்போல் நெல்விளையும்
மூவுலகும் போர் ஏறும்!
காலாலே மடை தள்ளி
கழனி எல்லாம் நீர் பாய்ச்சி,
சோற்றால் மடையடைப்போம்!

### ஏர் எழுபது

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில்புகழ்சால் இயலிசை நாடகம்நடக்கும்
சீர்நடக்கும் திறம்நடக்கும் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே.

**கம்பர்**

### கம்பர்

'கல்வியிற் பெரியவர் கம்பர்'. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'. என்றெல்லாம் வழங்கும் சிறப்புத் தொடர்கள் கம்பர் கவித்திறனுக்கு எடுத்துக்காட்டு. தமிழுக்குக் கதி எனவும் கம்பர் புகழப்பட்டார். இவர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தமிழில் இவர் படைத்த இராமாயணம் உலகப் புகழ்வாய்ந்தது. இவரது இன்னொரு நூல் 'ஏர் எழுபது'.

### செயல்பாடுகள்

- வேளாண்மை தொடர்பான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து எழுதுங்கள்.
- நாட்டுப்புறப் பாடல்களின் தனித்தன்மைகளைக் கண்டறிந்து குறிப்பு எழுதுங்கள்.
- கம்பரின் கவிநயச் சிறப்பை 'ஏர் எழுபது' வழி நின்று பாராட்டி எழுதுக.

# நம்ம நிலம்



## நம்ம நிலம்

நம்ம நிலத்தில்
நம்ம விவசாயத்தை நாம்
நல்ல முறையில் தான்
செய்து கொண்டிருந்தோம்.

கோடையிலும்கூட
கொண்டிக் காவல் போட்டு
நாம் நல்ல நிலத்தைப்
பாதுகாத்துப் பராமரித்திருக்கிறோம்.

ஐப்பசி மாசம் பிறக்கும்
மழை தப்பாமல் பெய்யும்.
ஓடை நிரம்பி

நிலம்மெல்லாம் பரசி வரும்
வெள்ளம்.
நிலம்
வஞ்சகம் இல்லாமல் விளைந்தது.

களம்
களை கட்டியது.

குலுக்கைகள் நிரம்பின.
வீடு நெறைய மூடைகள்.
கப்பல் கப்பலாக
வந்து இறங்கின
உப்பு உரங்கள்.

வெளிநாட்டு விதைகளை
அவர்கள்
நம் கையில் திணித்தார்கள்.

பூச்சிகளைக் கொல்லும் விஷமும்
களைகளைக் கொல்லும் விஷமும்
அழகு அழகான புட்டிகளில்
உரக்கடைகளை அலங்கரித்தன.

விஷ மருந்துகளும்
உப்பு உரங்களும்
நம்ம நிலத்தைக் கெடுத்து
நம்ம நிலத்தைப் புண்ணாக்கி
நம்ம நிலத்தைக் குற்றுயிர் ஆக்கிவிட்டன.

மாடுகளையும்
ஆடுகளையும்

### நெல் சேமிக்கும் முறைகள்



அறுவடை செய்யப்பட்ட நெல்லைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப் பண்டைக்காலங்களில் பெரிய மண்பானைகள், பத்தாயம் அல்லது குதிர் (குலுக்கை) என்னும் மரப்பலகைகளால் செய்யப்பட்ட அமைப்பு மற்றும் செங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட நெற் களஞ்சியங்கள் போன்றவை இருந்தன. இன்று தொழில்நுட்ப முறையில் நெல் பாதுகாக்கும் வசதிகள் வந்துவிட்டன.

கூளம் இல்லாமல்
விற்றுத் தொலைத்தோம்.

கலப்பைகள்
அடுப்புக்குப் போய்விட்டன.

நம்ம நிலம்
வலிகளைப் பொறுத்துக் கொண்டு
ஊமையாய் அழுது கொண்டிருக்கிறது.



நாம்
நம்ம நாட்டு விதைகளைத்
தேடித் தேடிக்
கண்டுபிடிக்க வேண்டும்.

நம்ம பாட்டன் காலத்து விவசாயத்தை
நாம் பழுதுபார்த்து
செழுமைப்படுத்த வேண்டும்.

நாம் நம்முடைய
மூதாதையர் விவசாயத்துக்கு
திரும்ப வேண்டிய காலம் இது.

**– மு. சுயம்புலிங்கம்**

**மு. சுயம்புலிங்கம்**



இவர் தூத்துக்குடியைச் சார்ந்தவர். கரிசல்காட்டுப் படைப்பாளிகளில் ஒருவர். இவரது கவிதைத் தொகுப்பு 'நிறம் அழிந்த வண்ணத்துப் பூச்சிகள்', 'தீட்டுக்கறை படிந்த பூ அழிந்த சேலைகள்', சிறுகதைத் தொகுப்புகள், ஒரு பனங்காட்டு கிராமம், ஊர்க்கூட்டம்.

## செயல்பாடுகள்

- இரசாயன உரங்களால் ஏற்படும் பாதிப்புகளை விவசாயிகளுக்கு உணர்த்தும் வண்ணம் விழிப்புணர்வு முகாம் நடத்தி அறிக்கை தயார் செய்யுங்கள்.
- இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதுங்கள்.

# நம்ம ஊர்த் தேங்காய்க்கும் மரியாதை வேண்டும்

**ம**துரை மாவட்டம் சோழவந்தானை அடுத்த குருவித் துறையைச் சேர்ந்தவர் து. பாண்டியராஜன். தென்னை வணிகத்தில் முன்னோடியான இவருடன் ஒரு நேர்காணல்.

**தென்னை விவசாயத்தில் உங்கள் குடும்பம் எவ்வளவு காலமாக ஈடுபட்டிருக்கிறது? ஆரம்பக்கால அனுப வங்களைச் சொல்லுங்கள்.**

**அ**டிப்படையில் எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம்தான். தென்னையோடு நாங்கள் கடந்த 45 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறோம். மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியில் எங்களுக்கொரு கௌரவமான அடையாளத்தைத் தந்தது தென்னைதான். தொடக்கத்தில் தென்னை விவசாயம் செய்து வந்த நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதனை நேரடியாக நாங்களே விற்கிற வியாபாரத்தையும் தொடங்கினோம். இன்று இந்தியா முழுவதும் எங்கள் தேங்காய் எங்களாலேயே விற்பனை செய்யப்படுகிற அளவுக்கு உயர்ந்துள்ளோம். இந்தப் பகுதியில் உள்ள பத்துப் பதினைந்து பெரிய வியாபாரிகளில் நாங்களும் முக்கிய வியாபாரியாக இருக்கிறோம். இன்றும் இப்போதும் எங்களின் உயிர் மூச்சாக இருப்பது தேங்காய்தான்.



**துவக்க காலத்தில் இந்தத் தொழிலில் சந்தித்த சிரமங்கள் பற்றிச் சொல்லுங்கள்....**

**எ**ங்கள் சொந்தக் கிராமம் சோழவந்தானுக்கு அருகிலிருக்கும் குருவித்துறை. எங்கள் தாத்தா மாயத்தேவரும் எங்கள் அப்பத்தா வீரம்மாளும் தான் இந்தத் தொழிலின் மூலகர்த்தாக்கள். அவர்களையடுத்து எங்கள் தகப்பனார் துரைப் பாண்டியன் அந்தத் தென்னை விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். அந்தக் காலத்தில் எங்களுக்கு இருந்தது வெறும் நாலரை ஏக்கர் நிலமும், கமலைக் கிணறும் ஒரு சின்னக் குடிசை வீடும்தான். எங்கள் அப்பா தென்னை மரங்களைக்

குத்தகைக்கு எடுத்துத் தொழில் செய்துவந்தார். அதன் பின்னர்ச் சின்னச் சின்ன நிலங்களை விலை கொடுத்து வாங்குமளவுக்குச் சிறிது முன்னேறி அந்த நிலங்களைப் பண்படுத்தித் தென்னைக் கன்றுகளை நட்டு, அவற்றைக் குழந்தையைப் போலக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துப் பராமரித்து இயற்கையோடு கடுமையாகப் போராடியவர் அவர். அதன் பின்னர்த் தென்னந்தோப்புகளை வாங்கினார்.

**பயிரிடும் முறை**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களில் வயலும் வயல் சார்ந்த இடமும் மருதநிலம் எனப்படும். அங்கு உழவர்கள் குடியிருப்புகள் அமைந்திருக்கும். உழவுத் தொழிலே அம்மக்களின் முக்கியத் தொழில். உழவர்கள் பெரிய எருதுகளை நுகத்தில் பூட்டி உழுவர். உழுவதற்காகப் பயன்படுத்தும் கலப்பை பெண் யானையின் வாயைப்போல் இருக்கும். அதில் பொருத்தப்பட்டிருக்கும் கொழு உடும்பின் முகம் போன்று கூர்மையாக இருக்கும். அக் கொழுவானது நிலத்தில் முழுவதுமாக மறையும்படி ஆழமாக உழுவது வழக்கம். உழுதபின் விதை விதைக்கப்படும். விதைகள் முளைத்தபின் சேறு நிறைந்த வயலை சமப்பட மிதித்து உழவர்கள் நாற்றுமுடியை நடுவர். பின்னர் களைக்கொட்டால்

**வடமாநிலங்களில் தென்னை விவசாயம் இல்லையா?**

**பெ**ரும்பாலும் இல்லை. இப்போது சிறிது சிறிதாகப் பயிர் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பத்தில் நாங்கள் பட்ட சிரமங்களை இப்போது அங்கே புதிதாகத் தென்னை விவசாயம் செய்பவர்கள் சந்திக்கிறார்கள். காய் வெட்ட ஆளே இல்லாத நிலைமைதான் அங்கேயும் இருக்கிறது.

**இப்போது தென்னை விவசாயத்தில் என்னென்ன நெருக்கடிகள் வந்துள்ளன?**

**அ**ந்தக் காலத்தில் ஒரு தேங்காய்க்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் லாபம் வந்தது. இன்று பைசாக் கணக்கில்கூட லாபமில்லாத தொழிலாக மாறிவிட்டது. காரணம் வியாபாரிகள் அதிகரித்து விட்டார்கள். போட்டி அதிகமாகிவிட்டது. அந்தளவுக்கு இது எளிமையான தொழிலாக இருக்கிறது. என்னுடைய பத்தாவது வயதிலிருந்து நான் தென்னைக் காவலுக்குப் போவேன். அன்று தேங்காய் வெட்டும் தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று கேட்டு வாசலில் வந்து நிற்பதைப் பார்த்திருக்கிறேன். இன்றோ நிலைமை தலைகீழாகப் போய்விட்டது. நாங்கள் அவர்களைத் தேடிப் போய் அவர்களின் வீட்டுவாசலில் வேலைக்கு வரச் சொல்லி நிற்கிறோம். அந்த அளவுக்கு இந்தத் தொழிலுக்கு வர யாருக்கும் ஆர்வம் இல்லாத நிலை வந்து விட்டது. இன்றைய விலைவாசியோடு ஒப்பிடும்போது இது இன்னமும் அதிகரிக்க வேண்டும்தான். ஆனால், அன்று எங்கள் தேங்காய் என்ன விலைக்கு விற்றதோ அதே விலைக்குத்தான்

இன்றும் விற்கிறது என்கிறபோதுதான் எங்களால் சமாளிக்க முடியாத நிலைமை வருகிறது. ஒரு கிலோ கொய்யாப்பழம் இன்று நாற்பத்தைந்து ரூபாய்க்கு விற்கிறது. ஒரு எலுமிச்சம்பழம் விலை இரண்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை வந்துவிட்டது. அதைவிடக் குறைந்த விலையில் தேங்காய் விற்றால் எங்களுக்கு எப்படிக் கட்டும்?

**இன்றைக்கு நிலவுகிற தண்ணீர்த் தட்டுப்பாட்டை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?**

**தே**ங்காய் விவசாயத்திற்கு நிறைய தண்ணீர் அவசியம் தேவை. நிலத்தடி நீர் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்ட இந்தக் காலத்தில் தென்னை விவசாயம்தான் அதிகப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. மரங்கள் சாவது இன்று சாதாரணமாகி விட்டது. இதைத் தடுக்கத்தான் சொட்டு நீர்ப்பாசன முறையைக் கண்டுபிடித்தார்கள். அரசு ஏராளமான மானியம் இதற்காகத் தருகிறது. அந்த மானியம் சாதாரண விவசாயிகளுக்கு வந்துசேர்வதில்லை என்பதுதான் சோகம். பெரிய விவசாயிகளுக்கு மட்டும்தான் சொட்டுநீர்ப் பாசன வசதிகள் போய்ச் சேர்கின்றன. சிறிய விவசாயிகளுக்கு இன்னும் அது எட்டாத விசயம்தான்.

**உங்கள் தோப்புகளில் சொட்டுநீர்ப் பாசன வசதியை ஏற்படுத்திவிட்டீர்களா?**

**எ**ங்களுக்கே இவர்கள் இன்னும் முழுமையாக விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை. தவிரவும் மானியத்தை நாடிப்போனால் கையிலிருந்து செலவு செய்துவிட்டு மானியத்துக்காக ஆறுமாதங்களுக்கு மேல் இழுத்தடிக்கிற நிலைமையும் இருக்கிறது. ஏராளமான ஆவணங்கள், அரசு சார்ந்த நடைமுறைகள் வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு இவை எல்லாம் பெரும் சிக்கல்களாக இருக்கின்றன. தவிரவும் மானியத்தில் வழங்கப்படும் சொட்டுநீர்க் குழாய்கள் தரமற்றனவாக இருக்கின்றன. இதனாலேயே நாங்கள் சொந்தச் செலவிலேயே சொட்டுநீர்ப் பாசனமுறையை அமைத்துக் கொண்டோம். அதையும் இன்னும் முழுமையாகச் செய்யவில்லை. எல்லாப் பெரிய விவசாயிகளும் கைப்பணத்தில்தான் இதைச் செய்துள்ளனர்.

களைகளைக் களைந்து பயிர் விளைவிப்பர். உரிய காலத்தில் விளைந்த பயிர்கள் பாரம் தாங்க முடியாமல் வளைந்து நிற்கும். அறுவடைப் பருவம் வந்ததும் பெரிய ஆரவாரத்துடன் விளைந்து நிற்கும் நெற்கதிர்களின் திரண்ட அடிப்பகுதியை அறுத்து அறுவடை செய்வர். அறுவடை செய்யப்பட்ட கதிர்களைக் களங்கள் நிறையும்படி போராகக் குவித்து வைப்பர். பின்னர் அவற்றைத் தரையில் பரப்பிக் கடாவை நடக்கவிட்டுப் போரடிப்பர். நெல்லின்கண் உள்ள துகள் அறும்படி வைக்கோல், தூசு முதலியவை நீக்கப்படும். நென்மணிகள் உலர்ந்தபின் கோடைக்காற்றில் தூற்றி அவற்றைக் குவித்து வைப்பர். அக் காட்சியானது பொன்னிற மேருமலையைப் போல் தோற்றமளிக்கும்.
(இச்செய்தி, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெறுகின்றது. (வரிகள் 196 – 241)

### நம் தேவைக்கு ஏற்பத் தேங்காய் விளைச்சல் இருக்கிறதா?

**தே**வைக்கும் கூடுதலாகவே விளைகிறது. அதனால் தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் நடக்கிறது. தேங்காயெண்ணெய் நம் தேவைபோக சிறிதளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

### தேங்காய் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் நமக்கு எப்படி இருக்கின்றன?

**மி**கமிகக் குறைவான ஏற்றுமதிதான் நடக்கிறது. பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, ஆப்பிரிக்காவின் உகாண்டா போன்ற இடங்களிலெல்லாம் காய்க்கின்ற காய்கள் அளவில் பெரிதாக இருக்கும். அவற்றில் எண்ணெய் வளம் அதிகமாக இருக்கிறது. அவற்றைக் குறைந்த விலைக்கு அவர்கள் தருகிறார்கள். நமது உற்பத்திச் செலவு மற்றும் பல்வேறு குளறுபடிகளின் காரணமாக நம்மால் அந்த விலைக்குத் தரமுடியவில்லை.

### தேங்காய் வெட்ட இயந்திரங்களெல்லாம் வந்ததே?

**இ**துவரைக் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா எந்திரங்களும் தோல்விதான். இதற்கான ஆராய்ச்சியில் அரசு முழுக்கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும். அதோடு தேங்காயை உரிக்கிற இயந்திரமும் வடிவமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. எனது ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் ஜப்பானில் இருக்கிறார். நான் இருபது வருடங்களாக அவரிடம் இதற்கான ஓர் இயந்திரத்தை வடிவமைக்கும்படி கேட்டுக்கொண்டே இருக்கிறேன். இந்தோனேசியாவில் தேங்காய் பறிக்க குரங்குகளுக்குப் பயிற்சியளிக்கிறார்கள் என்கிறார்கள். இந்தக் குரங்கு ஒன்றின் விலை மூன்று இலட்ச ரூபாயாம். எனக்கு இதன் தொடர்பான குறுந்தகட்டை அனுப்பிவைத்தார்கள். நம் நாட்டில் விலங்குச் சட்டங்கள் இதற்கு அனுமதிக்குமா எனத் தெரியவில்லை. தவிரவும், நமது உணவு ஒத்துக் கொள்ளாமல் அந்தக் குரங்கின் உயிருக்கு ஏதாவது ஆனதென்றால் பெரிய நட்டம் வருமே.

**தமிழ் மலையாள மாதங்கள்**

| | | |
|---|---|---|
| சித்திரை | - | மேடம் |
| வைகாசி | - | இடவம் |
| ஆனி | - | மிதுனம் |
| ஆடி | - | கர்க்கடகம் |
| ஆவணி | - | சிங்ஙம் |
| புரட்டாசி | - | கன்னி |
| ஐப்பசி | - | துலாம் |
| கார்த்திகை | - | விருச்சிகம் |
| மார்கழி | - | தனு |
| தை | - | மகரம் |
| மாசி | - | கும்பம் |
| பங்குனி | - | மீனம் |

**இயந்திரம் வந்தால் கூலியாட்களின் வேலை பாதிக்கப்படாதா?**



கூலி ஆட்களே இல்லை என்பதால்தானே இந்தச் சிரமம்? இன்றைய இளைஞர்கள் இந்த வேலைக்கு வருவதில்லை என்பதுதான் நிலைமை. அவர்களுக்கு நாங்கள் எதிரிகளில்லையே. தேங்காய்த் தொழிலை எப்படியாவது காப்பாற்ற வேண்டாமா? திருப்பூரில் எத்தனை ஆலைகளைப் புதிதாகத் துவங்கினாலும் அங்கே வேலைக்கு ஆட்கள் போய்க் குவிந்து கொண்டே இருக்கிறார்களே. அதுபோலவா எங்கள் நிலை இருக்கிறது?

**அரசு சார்பில் இதற்கெல்லாம் என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

அரசு சார்பில் தேங்காய் வாரியம் ஒன்று இருக்கிறது. தலைமைப் பொறுப்பிற்கு விவசாயக் குடும்பத்திலிருந்து ஐ.ஏ.எஸ். படித்த ஒருவரை நியமித்தால் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். அப்படிப்பட்ட ஒருவரால்தான் எங்கள் பாடுகளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். எங்கள் தேவைகளையெல்லாம் அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்ல முடியும் என்று நம்புகிறோம். எங்களுக்கு எந்த மானியமும் தேவையில்லை. இடைத்தரகர்கள் இல்லாமல் அரசே விலை நிர்ணயம் செய்யுமானால் அதுவே போதுமானதாக இருக்கும். கேரளத்தில் ரப்பர், கொப்பரைத் தேங்காய்க்கெல்லாம் நல்ல விலை கொடுத்து அரசே கொள்முதல் செய்கிறது. அங்கே பத்து மரங்கள் வைத்திருப்பவர்கள்கூட நல்ல பலனடைகிறார்கள். அது போல நமது மாநில அரசும் செய்ய வேண்டும். பல்வேறு விஷயங்களில் நல்ல திட்டங்களை அமல்படுத்திவருகிற நமது மாநில அரசு எங்கள் வாழ்விலும் ஒளியேற்ற வேண்டும் என்பதே எங்களது அன்பான வேண்டுகோள்.

**நன்றி : செம்மலர் மாத இதழ்**

**செயல்பாடுகள்**

- தென்னை விவசாயத்தின் மேம்பாட்டிற்கான உங்கள் பரிந்துரைகளை அரசிடம் ஒப்படைக்க ஒரு அறிக்கை தயார் செய்யுங்கள்.
- தென்னை விவசாயம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டிப் பத்திரிகைச் செய்தி தயாரியுங்கள்.



## சுற்றுச்சூழலைக் காக்கும் இயற்கை வேளாண்மை

இவ்வுலகம் இனியது; இதிலுள்ள வான் இனிமையுடைத்து; காற்றும் இனிது; தீ இனிது; நீர் இனிது; நிலம் இனிது; என இவ்வுலகின் ஒவ்வொரு அங்கத்தையும் இனியதாக அடுக்கிக்கொண்டே போவான் பாரதி. இது அவன் வாழ்ந்த காலத்து நிலை.

அப்படியொரு அருமையான உலகத்தை அறிவியல் என்ற பெயரால், கூடிக்கொண்டேயிருக்கும் மக்கள் தொகையால், அவரவர் வாழ்கின்ற நிலைக்குத் தக்கபடி எவ்வளவுக்கு எவ்வளவு சிதைக்க முடியுமோ, அந்த அளவுக்குச் சிதைத்து விட்டோம். இயற்கையைச் சிதைத்தால் இன்னல்தான் விளையும் என்ற பட்டறிவுகள் பல ஏற்பட்ட பின்னும்கூடச் சிதைத்துக்கொண்டேயிருக்கிறோம்.

அறிவியல் வளர்ச்சியால் ஆலைகள் வந்தன. சாலையெங்கும் வாகனங்கள் நிறைந்தன. குளிரூட்டிகள் பெருகின. இன்னும் மாசு

பெருக்குவன எண்ணற்றவை பெருகின. காடுகள் அழிக்கப்பட்டன. இரசாயன உரங்கள் புழக்கத்திற்கு வந்தன. நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டது. ஆக, காற்று கெட்டது. உலக வெப்பம் உச்சந்தலையைச் சுட்டெரிக்கத் தொடங்கியது. மண்வளம் போனது. நீர்வளம் போனது; உருகும் பனிப்பாறைகளாய்க் கடல்நீர் கூடுகிறது. ஒட்டு மொத்தத்தில் மண்ணுயிர்களுக்கு அழிவுநிலை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

சிதைவுற்றுக்கொண்டிருக்கும் இந்தப் பூமியை மீண்டும் பசுமை நிறைந்த உலகமாக உருவாக்கு வதில், இப்போது மீட்டெடுக்கப்பட்டு வரும் இயற்கை வழி வேளாண்மைக்கு, நம் மரபுவழி வேளாண்மைக்குத் தனிப்பெரும் பங்குண்டு. நிலவளம் காத்து, நீர்வளம் பெருக்கி, மரவளம் கூட்டி, உயர்நலம் காக்கும் நோக்கங்களைக் கொண்டதுதான் இயற்கை வேளாண்மை.

'ஓய்வு என்பது உழைக்கும் மனிதனுக்கு மட்டுமல்ல; உணவு தரும் மண்ணுக்கும் வேண்டும்' என்ற உயரிய கோட்பாட்டைக் கொண்டது இயற்கை வேளாண்மை. அந்த வகையில் ஆடிப்பட்டம் தேடி விதைத்தால் தைத்திருநாளில் அறுவடை முடியும். அதைத் தொடர்ந்து, மரம் தழைக்கப் பெய்யும் மாசி மழையிலும் சித்திரையில் பெய்யும் கோடை மழையிலும் ஆழ உழுது நிலத்தை ஆறப்போடுதல் என்பது நம்மரபு வழி வேளாண்மை. மறுபடியும் வரும் ஆடிவரை நிலத்திற்கு ஓய்வு கொடுத்தாலே ஓர் உரம் கொடுப்பதற்குச் சமம்.

### அறுவடை

சோழநாடு வயல்வளம் மிக்க நாடு. எனவேதான் சோழநாடு சோறுடைத்து என்றார்கள். இவ்வளத்திற்குக் காரணம் அந்நாட்டில் ஓய்வின்றி ஓடும் காவிரி ஆறுதான். தங்களுக்கு வாழ்வளித்த காவிரியை உழவர் பெருமக்கள் கடவுளுக்கும் மேலாகக் கருதினர். உழத்தியர்கள், அவர்கள் தம் உடல் வளைந்து குனிந்து நின்று அரிவாளின் வாயால் முற்றி விளைந்த நெல்லை அரிவர். இவ்வாறு அரிந்து திரட்டிய கதிர்களைக் களத்திற்குக் கொண்டுவந்து தரையில் அடித்து நெல்மணிகளாகக் குவிப்பர். நெல் முழுதும் உதிராத கதிர்களைப் போராகக் குவிப்பர். அதிலுள்ள நெற்களை உதிர்ப்பதற்காக அவற்றை வட்டமாகப் பரப்பி மாடுகளை சுற்றிவரச் செய்வர். அதற்கு சூட்டடித்தல் என்று பெயர்.

இத்தோடு, ஓராண்டுக்குச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் எரு, மழைவெள்ளத்தில் அடித்து வரப்பட்டு ஏரி, குளங்களில் நிறைந்திருக்கும் வண்டல் மண் ஆகியவவையும் தவறாமல் நிலத்தில் கொண்டுசேர்க்கப்படும்போது மண்வளக்காப்பு உறுதி செய்யப்படுகிறது.

இப்படி ஆழ உழுதலும் இயற்கை உரமிடலும் தொடர்ந்து நடைபெறும்போது, பெய்யும் மழை அந்தந்த இடத்திலேயே உறிஞ்சப்பட்டு, உள்வாங்கப்பட்டு ஒரு பயிரின் விதைப்பு முதல் அறுவடை வரையிலான பாசன நீராக மாறுகிறது. காடுகளிலும் மலைகளிலும் பெய்து, வெள்ளமாக ஓடிவந்து பெருகும் ஊருணித் தண்ணீர் மனிதப் பயன்பாட்டுக்கும் குளத்து நீர் கால்நடைப் பயன்பாட்டுக்கும் ஏரி, கண்மாய் நீர் வேளாண்மைக்கும் பயன்பட்டு வந்தது நாம் அறிந்த செய்தி. ஆனால் மடிப்பாலோடு நிறுத்திக் கொள்ளாமல், பூமித் தாயின் உடம்பைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துக் குழாய்களைச் செருகிக் குருதியையும் குடித்த கதை, எந்திரத்தனம் என்னும் அரக்கக் குணம் நம்மை ஆட்கொண்டுவிட்டபின் தானே!



ஆலமரக்காடு, அரசமரக்காடு, இச்சி மரத்தோட்டம், இலுப்பை மரத்தோட்டம் என்று இடங்களை அடையாளப்படுத்தும் அளவுக்கு வேம்பு, புங்கன், புளி, பனை, நாவல், வேலமரம் என விதவிதமான மரங்களைக் கொண்டவையாகத்தானே நம் வேளாண் நிலங்கள் அமைந்திருந்தன? அது மட்டுமா? ஊருணிக் கரையைச் சுற்றிலும் கண்மாய்க் கரையைச் சுற்றிலும் ஓங்கி வளர்ந்து, உயிரினங்களின் உணவிடமாகவும் உறைவிடமாகவும் விளங்கிய மரங்கள் நம் முன்னோர்கள் காலத்தில் நிறைந்திருந்ததை நாம் மறுக்க முடியுமா?

இவை மட்டுமா? இந்த மரங்கள் இலைதழைகளை உதிர்த்துத் தாம் பிறந்த மண்ணை மேம்படுத்தின; மழையைத் தருவித்தன; அந்த மழையை மண்ணுக்குள் இருத்தி வைத்தன. மண்ணரிப்பைத் தடுத்தன; நஞ்சை உண்டு அமுதை ஈந்தன. ஆம், கெட்டகாற்றை எடுத்துக்கொண்டு தூய காற்றை வழங்கின.

இப்படி இயற்கையோடு இணைந்து மழையைக் கொண்டு மட்டுமே விளையக்கூடிய கம்பு, இராகி, சாமை, தினை, வரகு, குதிரைவாலி, சோளம், துவரை, மொச்சை, பாசிப்பயறு, உளுத்தம் பயறு, கொள்ளு, தட்டைப்பயறு, காய்கனிகள் போன்றவற்றை எந்த நச்சுக் கலப்புமின்றி விளைவித்து, நேரத்திற்கு ஓர் உணவு, நாளுக்கோர் உணவு எனக் கொடுத்து மனிதனை நோய்நொடியின்றி வாழவைத்தது இயற்கை வேளாண்மை.

இப்படி இயற்கைவழி வேளாண்மையில் மண்வளம் பாதுகாக்கப்பட்டது. நீர்வளம் பேணப்பட்டது. உலகவெப்பம் கட்டுப்படுத்தப்பட்டது. அதனால் கால நிலைகளில் கோளாறு

ஏற்படவில்லை. நில நடுக்கம் வருமோ என்ற அச்சம் இல்லை. எந்த நேரத்தில் என்ன நிகழுமோ என்ற பரபரப்பு இல்லை. பருவமழை சரியாகப் பொழிந்தது. பயிர்கள் சீராக விளைந்தன. உயிரினங்கள் உளைச்சலின்றி வாழ்ந்தன.

உதிர்ந்த நெல்மணிகளை மலையெனக் குவிப்பர். அள்ள அள்ளக் குறையாத அந்நெற்குவியலைக் குதிர்களில் கொட்டி வைப்பர். குதிர்கள் நிறைந்து எஞ்சிய செந்நெல் எங்கும் சிதறிக் கிடக்கும். வரம்பு கட்டப்பட்ட ஒருவேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல்விளையும் வளமிக்கது சோழநாட்டு வயல்கள். இவ்வளத்திற்குக் காரணம் காவிரியாறுதான்.
(இச்செய்தி பொருநராற்றுப்படை என்னும் சங்க இலக்கியப் பாட்டில் இடம்பெற்றுள்ளது
(அடி 232 – 248)

எடுக்க எடுக்கக் குறையும் எந்த இயற்கை வளத்தையும் குறைக்காமல், அந்த வளங்களை மேம்படுத்தி உயிர்களுக்கு உணவளிக்கும் மானாவாரி வேளாண்மையே இயற்கை வழி வேளாண்மை. இந்த முறையை முன்னெடுத்துச் சென்றால், முழுமையாகச் செயல்படுத்த உழவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால் காய்கனி, தானியம், பயறுவகைகள் என உணவையே மருந்தாகக் கொண்டு உடல் நலத்துடன் வாழலாம்; நாளுக்கோர் நோய் தொற்ற, மருந்தையே உணவாகக் கொண்டு வாழ்ந்து வரும் அவல நிலையைப் போக்கலாம். இயற்கை வளங்களையும் காக்கலாம்.

பச்சை மரங்களைக்கொண்டு வெப்பத்தைக் குறைக்கலாம். தூய்மை நிறைந்த காற்றைப் பெறலாம். கானகம் வழங்கும் உயிர் மழையைப் பெறலாம். இந்த மண்ணைப் பசுமையான உலகமாகப் பார்க்கலாம். அப்போதுதான் பாரதி பாடியது போல இவ்வுலகின் ஒவ்வொரு அங்கமும் நிகழ்வும் இனிமையாகத் தெரியும்; இனிமையாக அமையும்.

“இயற்கைவளப் பயன்பாடு அளவோடு இருந்தால் வாழலாம் வளமோடு” என்ற பசுமை மொழியைக் கருத்தில் கொண்டு இயற்கையைச் சிதைக்காத வேளாண்மைக்கு உயிர் கொடுப்போம்; உலகுக்கு உணவளிப்போம்; உயிர்களுக்கெல்லாம் நலமான வாழ்வளிப்போம்!

**– நன்றி : பசுமைத்தாயகம்**
**சுற்றுச்சூழல் இதழ்**

**செயல்பாடுகள்**

- உங்கள் பகுதியிலுள்ள இயற்கை வேளாண்மை குறித்துச் சிறு கட்டுரை எழுதுங்கள்.
- ‘தமிழ் இலக்கியங்களும் வேளாண்மையும்’ என்னும் தலைப்பில் தொலைக்காட்சி உரை ஒன்று தயார் செய்யுங்கள்.

## பொங்கலோ பொங்கல்!



சம்பா செத்த வயலில்
அடர்ந்து கொட்டும் பனியில்
சில்லிடுகிறது நிலம்.

சுழன்று எரியும்
போகியின் நெருப்பில்
உழவர்கள்
கருகும் நாற்றம்.

பிழிந்த கரும்பின்
கழிவுகளில்
எறும்பின் கால்களால்
ஊர்ந்து வருகிறது
தை.

பசியில் குழிந்து
எலி வளைகளாகின்றன
விவசாயக் கண்கள்.

அடிமாடுகள் சுமந்து
விரையும் வாகனத்தின் அடியில்
அதிர்கிறது
வயல்களைக் கிழிக்கும் சாலை.

உடைந்து கிடக்கும்
மண்பானையில்
அள்ளமுடியாமல்
சிதறிக் கிடக்கின்றன
என்
சொல்லரிசிகள்.

**– கவிஞர் பழநிபாரதி**

**பழநிபாரதி**



காரைக்குடியில் பிறந்தவர். திரைப்படப் பாடலாசிரியர். தன் தனி மொழியால் திரை உலகின் கவனத்தை ஈர்த்தவர். தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றவர். புறாக்கள் மறைந்த இரவு, தண்ணீரில் விழுந்த வெயில், காதலின் பின் கதவு எனப் பல தொகுப்புகள் வெளியிட்டுள்ளார்.

### செயல்பாடுகள்

- வேளாண்மை தொடர்பான பாடல்கள், பழமொழிகள், செய்திகள் போன்றவற்றையும், படங்களையும் தொகுத்து வேளாண் மலர் தயாரித்து வெளியிடுங்கள்.
- இன்றைய வேளாண் சூழலுக்குப் பயன்படும் தொழில் நுட்பம் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

அலகு 2

# கலையும் பண்பாடும்

கலைகள் மனிதனின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு. தான் இரசித்ததைப் பிறரும் இரசித்து மகிழும் வண்ணம் பல்வேறு வடிவங்களில் கலைகள் வெளிப்படுகின்றன. கற்களை உரசி நெருப்பினை மூட்டிய மனிதன் உளிகளைத் தீட்டிச் சிலைகளை உருவாக்கினான். ஆடியும் பாடியும் கூடி வாழ்ந்த மனிதகுலம் கலை உணர்வுகளால் ஒற்றுமை உணர்வை வளர்த்தது. கலைகள் வாழும் சூழலுக்கேற்ப, பழக்கவழக்கங்களுக்கேற்பப் பல்வேறு வடிவெடுத்தன. கலைகளோடு பண்பாடும் வளர்ந்தது. படிப்பறிவற்ற பாமர மனமும் வாய்மொழிகளால் பாடல்கள், கதைகள், கதைப்பபாடல்கள் எனக் கலைகளை வளர்த்தது.

தமிழர் தமக்கென்ற ஒரு பண்பாட்டுச் சிறப்பை உலகெலாம் வியக்கும் வண்ணம் கொண்டிருந்தனர். சங்க இலக்கியங்களின் இயல்பும் கலையும், பண்பாடும் இன்றளவும் எண்ணி நோக்கின் அவை ஒப்பற்ற ஓர் உன்னத இடத்தில் இருப்பதை உணரலாம். சமூக உணர்வோடு ஒன்றுகூடிப் பக்தியாலும், இரசனையாலும் நிகழ்த்திய கூத்துக்களே இன்றைய திரைப்பட உலகிற்கு முன்னோடி. அவற்றை எல்லாம் மாணவர்கள் உணரும் நோக்கிலே இவ்வலகு நாட்டார் பண்பாடு, செவ்விலக்கியப் பண்பாடு, கூத்துக்கலை என முப்பிரிவுகளாய் அமைக்கப்பட்டுள்ளது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக் கூறுகளை அறிந்து வெளியிடுகிறார்கள்.
- செவ்விலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டினை உணர்ந்து தங்கள் படைப்புகளில் பதிக்கிறார்கள்.
- கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகுக்கிறார்கள்.
- நாடகங்கள், குறும்படங்கள் போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள்; வெளியிடுகிறார்கள்.

# நாட்டார் பண்பாடு



## வாய்மொழி இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாடும்

மக்களின் சிந்தனைகளையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி உணர்ந்துகொள்ளப் பெரிதும் பயன்படுவன நாட்டுப்புறப் பாடல்களாகும். எல்லா நாடுகளிலும் வாய்மொழியாகப் பாடல்கள் உள்ளன. அமெரிக்கர்கள் இவற்றைத் தொகுத்து ஆய்வதில் முன்னணியில் உள்ளனர். மொழியாய்வின் ஓர் உறுப்பாக இருந்து இன்று இது தனித்துறையாக வளர்ந்துள்ளது. புலவர்களின் செயற்கைக் கூறுகளின்றி மக்களின் உண்மையான பண்பாட்டு நிலைகளை விளக்குவனவாக இவை மிளிர்கின்றன. செய்யுளுக் குரிய எதுகை, மோனை, உவமை, கற்பனை என்னும் கூறுகளும் இவற்றில் உண்டு எனினும், உண்மைகளைக் குழந்தை போல் அப்பட்டமாக வெளியிடுவது இவற்றின் பண்பாம். நாட்டுப்பாடல்,

கிராமிய நாடகம் ஆகியவற்றைக் கொண்ட திருவிழா நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்களைக் கவர்ந்து இழுக்கும். இந்த விழா என்னும் திறந்த வாசல் வழியாகத் தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும் என்றார் தாகூர். மக்கள் வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இயற்கை மணம் வீசும் இப்பாடல்கள் மக்களின் சமூக, பொருளாதார, சமய வரலாற்றை அறியவும், உயர்ந்த நோக்கங்களையும் பழக்க வழக்கங் களையும் இன்பதுன்ப உணர்ச்சிகளையும், ஆசைக் கனவுகளையும் வெற்றி தோல்விகளையும் உணர்ந்து போற்றவும் பயன்படுகின்றன. வாழ்வின் அனைத்து நிலைகளையும் இவை சுட்டி நிற்கின்றன. ஏற்றமிறைப்பார், நாற்று நடுவார், களை பறிப்பார் போன்ற தொழிலாளர்கள் பாடும் பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி, காதல் பாடல்கள், பூசாரிப் பாடல்கள், கடவுள் வணக்கப் பாடல்கள், விளை யாட்டுப் பாடல்கள், பஞ்சம் கொள்ளை போன்றவை குறித்தவை, நாடோடி வீரர்கள் பற்றிய வரலாற்றுப் பாடல்கள் என இவற்றைப் பாகுபடுத்தி அறியலாம்.

**தாலாட்டு** : வாய்மொழிப் பாடல்களில் தாலாட்டுப் பாடல் முதலிடம் வகிப்பதாகும். பிள்ளைப் பேற்றினைப் போற்றும் மாந்தர் மனத்தினைத் திறந்து காட்டும் இவை எதுகை, மோனை, ஓசை நயம் கொண்டு நிலவும். அந்தந்த வட்டாரத்தின் சிறப்பியல்பையும், சமூக நிலையையும் இவை காத்து நிற்கும். நாட்டுக்கோட்டை நகரத்தார் பாடல்களில் செல்வ வளம் செழித்துக் காணப்படும். ஏழை மக்களின் தாலாட்டில் தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய உணர்வுகளும் ஆசைக் கனவுகளும் நிரம்பியுள்ளன. பிறந்த இடத்துப் பெருமை இழைந்தோடுவதைக் காணலாம். மாமனின் வளமும் அவனளிக்கும் சீரின் பெருமையும் இழைந்தோடுவதனையும் காணலாம்.

### வேங்கையும் வாகையும்

ஒரு சொல் ஒன்றிற்குமேற்பட்ட பொருள்களைத் தருவதை எல்லா மொழிகளிலும் காணலாம். இவ்வாறு வரும்சொற்கள் எந்தப் பொருளில் வருகிறது என்பதில் தடுமாற்றம் ஏற்படுவதுண்டு.

வேங்கை என்பதற்கு இரு பொருள் உண்டு. ஒன்று மரம்; பிறிதொன்று புலி. மரத்தைக் குறிக்க வேண்டுமானால் பாயா வேங்கை என்பர். புலியைக் குறிக்கவேண்டுமானால் பூவா வேங்கை என்பர். மரம் பாயாது. புலி பூக்காது. இப்படி அடைமொழி சேர்த்துச் சொல்லும்போது பொருள் தடுமாற்றம் நீங்கிவிடுகிறது. வாகையும் அப்படித்தான். அச் சொல் மரத்தையும் குறிக்கும்; வெற்றி என்பதையும் குறிக்கும். சூடாத வாகை என்றால் அது மரம். வாடாத வாகை என்றால் அது வெற்றியைக் குறிக்கும். மரத்தைச் சூடுவதில்லை; வெற்றி வாடுவதில்லை.

ஏலக்காய் காய்க்கும் இலைநாலு பிஞ்சிறங்கும்
சாதிக்காய் காய்க்கும் உன்தாய்மாமன் வாசலிலே

என்னும் பாடலிலே பிறந்த இடத்துச் செல்வப் பெருமையைக் காணலாம். குழந்தைகளைத் தெய்வங்கள் துணைநின்று காக்க வேண்டும் என்ற உணர்ச்சியையும் காணலாம்.

"தொட்டிலுக்குக் கீழாக என்கண்ணே - உனக்குத்
துணையிருப்பாள் மீனாட்சி
கட்டிலுக்குக் கீழாக - என் கண்ணே
காத்திருப்பார் சொக்கலிங்கம்
பாண்டிப் படிமுத்து - கண்ணே நீ
பஞ்சவர்கள் ஆண்டமுத்து
ஆயிரம் முத்தினிலே
ஆராய்ந்தெடுத்த முத்து
தொண்ணூறு முத்தினிலே - கண்ணேநீ
துழாவி எடுத்த முத்து' '



என்பது சான்று. குழந்தைப் பேற்றினை எத்துணைப் பெருமையாகப் பாராட்டுகின்றனர் என்பதற்குப் பின்வரும் பகுதிகள் சான்றாகும்.

**பிள்ளைப்பேறு** : பிள்ளைப்பேறு வேண்டுவார் எத்தனையோ வகைகளில் முயல்கின்றனர். தான தருமங்கள் செய்கின்றனர். கோயில்கட்குத் தொண்டு செய்கின்றனர். நோன்புகள் நோற்கின்றனர். அதுபற்றிய பாடல் வருமாறு:

**கண்டகண்ட கோயிலெல்லாம் கையெடுத்துக்**
**கும்பிடுவார்**
**காணாத கோயிலுக்குக் காணிக்கை அனுப்பிடுவார்**
**இலையிலே சாதமுண்டால் என்னதவம்**
**என்றுசொல்லித்**
**தரையை அவர்மெழுகிச் சாதங்கள் உண்டிடுவார்**

**சாலைகள் போட்டுவைப்பார் சத்திரங்கள் கட்டிவைப்பார்**
**நல்லதண்ணீர்க் கிணறுகளும் நடைவாவி கட்டி வைத்தார்**
**தேசபர தேசிகட்குத் திருமடங்கள் கட்டிவைத்தார்**
**குளங்களை வெட்டிவைத்தார் கோபுரங்கள்**
**கட்டிவைத்தார்**

**காதல் :** நாட்டுப் புறங்களில் வயதுவந்த ஆடவரும் பெண்டிரும் கூடித் தொழில் செய்வர்; மாமன் மகன் அத்தை மகள் இவர்கள் உரிமையோடு பழகுவர்; அவர்கட்குள் காதல் அரும்புவதுண்டு. செல்வம் சமூகநிலை காரணமாக மறுப்பதும் உண்டு. இத்தகு காதல் உணர்ச்சிகளை நாட்டுப்பாடலில் காணலாம். காதல் தோல்வி, காதலின் தெய்வீகம் ஆகியவை இப் பாடல்களில் ஒளிவிடுகின்றன.

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயாகியர் என் கணவனை**
**யானாகியர்நின் நெஞ்சு நேர்பவளே**

என்னும் சங்க இலக்கியக் கருத்தும்,

**செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சு போனாலும்**
**செத்த இடத்தினிலே செங்கழுநீர்ப் பூ பூப்பேன்**
**மாண்டு மடிஞ்சாலும் வைகுந்தம் போனாலும்**
**பஞ்சணை மெத்தையிலே படுக்கைமலர் நானாவேன்**

என்னும் பாடல் கருத்தும் ஒத்துள்ளமையைக் காணலாம்.

**தெய்வ வணக்கம் :** நாட்டுப்புறச் சமூகம் கோயிலால் ஒன்றுபட்டு நிற்கும். கிராம தேவதைக்கு நடத்தும் திருவிழா சிறந்த சமூக நிகழ்ச்சியாகும். தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடக் கோயில்கள் உதவும். தேவதைகளை வேண்டிப் பாடும் பாடல்கள், பூசாரிப்பாட்டு போன்றவை அவர்களின் சமய வாழ்வை விளக்குவனவாகும். அவர்கட்குச் சைவம் வைணவம் சமணம் என வேறுபாடு இல்லை. இச் சமயப் பொதுமை உணர்ச்சியே நம் சமூகத்தின் சிறப்பு. ஏற்றப்பாட்டொன்றில் இதனைக் காணலாம்.

**பிள்ளையாரே வாரீர்! பெருமாளே வாரீர்!**
**பெருமாளே வாரீர்! சிவனாரே வாரீர்!**
**சிவனும் பெருமாளும் சேர்ந்து ரதமேற!**
**குருவும் பெருமாளும் கூடி ரதமேற**
**அரியும் சிவனாரும் பெரிய ரதமேற**
**இனியருகர் கோயில் வலம்வருவோம் வாங்க**

### திருமணப்பாடல்

சித்திரை மாதத்திலே
சீர்பாகம் தேதியிலே
ஞாயிறு திங்களின்பின்
நல்ல புதன்கிழமை

கல்யாணம் என்று சொல்லி
கடலேறிப் பாக்குமிட்டார்
முகூர்த்தம் நடக்குதுன்னு
முடிமன்னர்க்குப் பாக்குமிட்டார்
ஐம்பத்தாறு அரசர்க்கும்
அருமையாச் சீட்டெழுதி
திட்டமுடன் நடக்கவுள்ள
திருமணத்தைச் சொல்லிவிட்டார்

வாழைமரம் நட்டு
வாசல் அலங்கரித்து
பாக்குமரம் நட்டு
பந்தல் அலங்கரித்து -

**அருமையான அறிவுரைகள் :** நல்வாழ்வுக்கு வேண்டிய பொன் மொழிகளைத் தாங்கிய நாட்டுப் பாடல்கள் பல உண்டு. இவை நம் மாந்தரின் பண்பாட்டு விளக்கங்களாக விளங்குகின்றன. அடக்கமும் அமைதியுமே பெண்ணுக்கு அணிகள் என்பதனைப் பாடல்கள் விளக்கக் காணலாம்.

அடக்கம், மெய்மை, கணவன்மீது அன்பு, இல்லக் கடமை, பக்தி, துப்புரவு, அறம், அருள் முதலிய பண்புகளைப் பெண்ணுக்கு வற்புறுத்தும் பாடல் ஒன்று வருமாறு:



தட்டாரைத் தானழைத்துத்
தாலி சமையும் என்றார்

அரிசிபோல் மாங்கல்யம்
ஆயிழைக்குச் சமையும் என்றார்

உளுந்துபோல் மாங்கல்யம்
உத்தமிக்குச் சமையும் என்றார்

தாலி சமைக்கவென்று
தாம்பூலம் தான் கொடுத்தார்.

**ஆக்கவேணாம் அரியவேணாம் அறிவிருந்தா போதுமடி**
**புருவத்திலே மையை வச்சுப் பொய்யொண்ணும் பேசாதேடி**
**பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பரிகாசம்பண்ணாதேடி**
**கல்லானாலும் கணவனடி புல்லானாலும் புருசனடி**
**காலையிலே எழுந்திரிச்சு வாசலுக்குச் சாணிபோடு**
**சட்டிப்பானை லொட்டுலொசுக்கு சகலத்தையும் கழுவிவையி**
**வெள்ளிசெவ்வாக் கிழமையிலே வீடுபூரா மெழுகணுண்டி**
**ஆடிஅமா வாசையிலே ஆண்டவனைக் கும்பிடணும்**
**லெட்சுமி வீடுதங்கணுண்ணா எச்சிலை வீட்டில் துப்பாதேடி**
**மச்சான் கொழுந்தன் மாருக்கெல்லாம் மரியாதை கொடுக்கணுண்டி**
**மாமிமாமா ரெண்டுபேரையும் மேன்மையாக நடத்தணுண்டி**
**தருமந்தலை காக்குமடி தயவைக் கைவிடாதேடி**

**பல்வகை** : மேலும் விளையாட்டு, தொழில், பஞ்சம், கொள்ளை போன்ற பலவற்றையும் பற்றிய பாடல்கள் உண்டு. மாமியார் நாத்தனார் கொடுமை, கங்காணிகளின் கொடுமை, நாடோடி வீரர்கள் போன்ற பொருள் பற்றியனவும் உண்டு. சுருக்கமாகச் சொன்னால் செயற்கை மணம் இன்றி இயற்கையெழிலோடு சமூகத்தைக் காட்டி நிற்கும் வண்ணமலர்கள் நாட்டுப் பாடல்கள் எனலாம்.

**-முனைவர் அ. தட்சிணாமூர்த்தி**

**முனைவர் அ. தட்சிணாமூர்த்தி**



தஞ்சை மாவட்டம், பூண்டி புஷ்பம் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர். மதுரை செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகவும் பணிபுரிந்துள்ளார். பல்வேறு தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இக்கட்டுரை இவர் எழுதிய 'தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது

**செயல்பாடுகள்**

- வாய்மொழி இலக்கியங்கள் வழி அறிந்த நம்பிக்கைகளைக் கலந்துரையாடித் தொகுத்து எழுதுங்கள்.
- பண்டைய மக்களின் வாழ்வியல் கூறுகளை இலக்கியச் சான்றுகளின் வழி நின்று தொகுத்து எழுதுங்கள்.

# மதுரை நகரின் அழகு

தேங்காய் தண்ணீரிலே மோதும் – துய்ய
சிறு மல்லிகைப்பூ சொரியுந் திசைமதுரைக் கோட்டை
மாங்காய் காய்த்துக் குலையுதிரும் – நல்ல
மங்கையர்கள் பந்தடிக்கும் மணிமதுரை வீதி
வெள்ளானை விளையாடும் மதுரை – நல்ல
வெண்கதலிக்குலை நெருங்கு மிக மதுரைக் கோட்டை
வெள்ளமிர்தம் சொரியும் திசை மதுரை – நீண்ட
வீதிகளெல்லாம் கதம்ப வாசமது வீசும்.
மந்தாரை முல்லை யிருவாட்சி – செண்பக
மலர்சொரிந்து தேனொழுகு மணிமதுரைக் கோட்டை
நந்தாதி மதிமணி மேடை வீதி – நல்ல
நவமணிகள் குவிந்திருக்கும் நல்மதுரைக் கோட்டை
வாழைக்குலை சாய்ந்திடு மதுரை – நகரில்
மந்திகள் பிலாக்கனிகை மத்தளங்கள் கொட்டும்
தாழைதனில் மயில் தோகையாடும் – வண்டு
தான் கீதம் பாடி மலர்வாசத்தைத் தேடும்
எழுபத்திரண்டு கொத்தளமாம் – கிணற்றில்
எழிலான் கடல் குதித்துத் திரிந்து விளையாடும்
வழுதி சேரதிசயங்களனைத்தும் – வாயால்
வழுத்த முடியாது மனமகிழ்ந்து பார்த்திருந்தான்



**–கான்சாகிபு கதைப்பாடல்**

**கதைப்பாடல்**

கதையைப் பாடலாகப் பாடும் வழக்கம் பண்டைய மக்களின் இயல்பு. தம்மிடையே சிறந்த தலைவர்கள், அரசர்கள், வீரர்கள் போன்றோர்களை வாழ்த்தி வாழ்க்கை வரலாறாகப் பாடுவார்கள். புராணக்கதைளும் பாடல்பொருளாக அமையும். கற்பனை சிறந்து விளங்கும் அல்லிஅரசாணி, கான்சாகிபு கதைப்பாடல், நல்லதங்காள் கதை, மருது பாண்டியர், சின்னமலை போன்றவை புகழ்பெற்ற வாய்மொழிக் கதைப்பாடல்களாகும்


**செயல்பாடுகள்**

- மதுரை நகரின் செழுமையை வருணித்துச் சுற்றுலாக் கட்டுரை எழுதுங்கள்.
- கான்சாகிபினைக் குறித்து வரலாற்றுக் குறிப்பு எழுதுங்கள்.
- கதைப்பாடல்கள் வழி அறியலாகும் பழங்காலப் பண்பாட்டுச் செய்திகளைச் சேகரித்துத் தொகுத்து எழுதுங்கள்.

# பேராசையின் பரிசு

ஒரு சிற்றூரில் அண்ணனும் தம்பியுமாக இருவர் இருந்தனர். இருவருக்கும் திருமணமாகி இருந்தது. அவர்களுக்கு நிலபுலன்கள் இருந்தன. அண்ணன் தன்னுடைய தந்திரப் போக்கைப் பயன்படுத்தித் தம்பியை ஏமாற்றி எல்லா நிலங்களையும் தன்னுடைய பெயருக்கு மாற்றிக்கொண்டான். தம்பி மிகவும் பாடுபட்டுத் தன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தான்.

அவர்கள் இருவருக்கும் சொந்தமாக ஒரு நாயும் ஓர் ஆட்டுக் குட்டியும் இருந்தன. அவற்றுள் ஆட்டுக்குட்டியைத் தம்பிக்குக் கொடுத்து விட்டு நாயை அண்ணன் எடுத்துக்கொண்டான். அண்ணனை விடவும் அவன் மனைவி பேராசை மிக்கவள். எல்லாம் தனக்குத்தான் இருக்க வேண்டும் என்று விரும்புவாள். தம்பி வாழ்க்கையில் சிரமப் படுவதைக் கண்டு அண்ணன் சிறிதும் கவலைப்படவே இல்லை. அவனுடைய மனைவி மிகவும் மகிழ்ந்தாள்.



தம்பியின் ஆடு அண்ணனுடைய தோட்டத்துக்குள் சில சமயம் சென்று விடும். அதைக் கண்டு மிகவும் கோபம்கொண்டு அண்ணனுடைய மனைவி தம்பியிடம் சண்டைக்குப் போவாள். தம்பி தான் ஏழை என்பதினால் மிகவும் பணிந்து போவான். அவன் பணியப் பணிய அண்ணனுடைய மனைவி கூடுதலாகச் சண்டைபோடுவாள்.

சண்டையைக் கண்டு தம்பியினுடைய மனைவி மிகவும் வருந்துவாள். அவள் மிகவும் மானவுணர்வு கொண்டவள். தங்களுடைய ஆட்டுக்குட்டிதான் இத்தகைய சண்டைக்குக் காரணம் என்பதை நினைத்து, அதை எங்காவது துரத்தி விடவேண்டும் என்று முடிவு செய்தாள். உண்மையில் ஆட்டுக் குட்டியை அவளும் அவளுடைய கணவனும் மிகவும் விரும்பினர். ஆட்டுக்குட்டியும் அவர்களை விட்டுப் பிரியாது எங்குச் சென்றாலும் திரும்பி அவர்களிடம் வந்துவிடும்.

அண்ணனுடைய மனைவி படுத்தும் பாட்டைப் பொறுக்க முடியாமல் ஆட்டுக்குட்டியைப் பிரியத் துணிந்தனர். பக்கத்து ஊரில் ஒரு பெரிய செல்வந்தர் வாழ்ந்தார். அவருக்குப் பல ஏக்கர் செழிப்பான நிலங்கள் இருந்தன. அவற்றில் பயிர் பச்சைகள் நன்கு வளர்ந்திருந்தன.

அந்த நிலத்தில் ஆட்டுக்குட்டியை விட்டுவிட்டால் அது பயிரைத் தின்னும். அதைக் கண்டதும் செல்வந்தரின் ஆட்கள் ஆட்டுக்குட்டியைப் பிடித்துச் சென்று விடுவார்கள். ஆகையினால் அது திரும்பித் தன்னிடம் வராது என்று கருதினான். அவன் நினைத்தபடி ஆட்டுக்குட்டியைச் செல்வந்தர் நிலத்தில் விட்டுவிட்டுத் திரும்பினான்.

ஆட்டுக்குட்டி பயிரை நன்றாக மேய்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட காவல்காரர்கள் கடுங் கோபத்தோடு ஓடி வந்தனர். ஆட்டுக்குட்டி அவர்களைக்கண்டு அஞ்சியது. ஆனால் ஓடவில்லை. அதைப் பிடித்துக்கொண்டனர். ஆட்டுக்குட்டியின் பணிவையும் அன்பையும் கண்டு மகிழ்ந்து இரங்கிய காவலர் ஆட்டுக்குட்டியைத் தங்கள் தலைவரான நிலச் சொந்தக்காரரிடம் கொண்டு சென்றனர்.

செல்வந்தருக்கு ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் இரக்கவுணர்வு பிறந்தது. அதற்கு இரைபோடச் சொன்னார். அது எதையும் தின்னவில்லை. தண்ணீரும் குடிக்க மறுத்தது. ஆட்டுக்குட்டியின் போக்குச் செல்வந்தருக்கு வியப்பாக இருந்தது. உண்மையில் அது தன்னை அன்போடு வளர்த்தவர்களிடம் திருப்பிச் செல்ல விரும்பியது. செல்வந்தர் இந்த ஆட்டுக்குட்டியை மிகவும் விரும்பினார். அதைச் சும்மா அனுப்ப அவருடைய அன்பு மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

### திசைப்பெயர்ப் புணர்ச்சி

ஒரு திசைப்பெயரோடு இன்னொரு திசைப்பெயரோ வேறு பெயரோ இணைவதைத் திசைப்பெயர்ப் புணர்ச்சி என்பர்.

திசைப்பெயர் முன் திசைப்பெயரோ பிறபெயரோ சேர்ந்தால் நிலைமொழியாய் உள்ள திசைப் பெயரின் இறுதியாக உள்ள க், கு ஆகிய இரண்டும் கெடும்.

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

தெற்கு என்னும் திசைப்பெயரும் பிறபெயரும் புணர்ந்தால், கு கெட்டு ற், ன் – ஆகத் திரிந்து வரும்.

தெற்கு + மேற்கு = தென்மேற்கு

(இங்கு உயிர்மெய் **கு** கெட்டு **ற**கர மெய் **ன**கர மெய்யாயிற்று)

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

(ஈற்றில் வந்த உயிர்மெய்யும் அதன் அயலில் நின்ற **க**கர மெய்யும் கெட்டது)

மேற்கு + காற்று = மேல்காற்று
(இங்கு உயிர்மெய் கெட்டு **ற**கரம் **ல**கரமாக மாறிற்று.)
கிழக்கு + நாடு = கீழ்நாடு என்றும் வரும்.

ஆட்டுக்குட்டியை வீட்டுக்கு அனுப்புவதாக வாக்களித்தார். அது மிகவும் மனம் களித்து மெ, மெ என்று கத்தியது. இரண்டு

தொம்பாக்களை ஆட்டுக்குட்டியிடம் செல்வந்தர் காட்டி அதற்கு எந்தத் தொம்பா வேண்டும் என்று கேட்டார். இரண்டு தொம்பாக்களில் ஒன்று நீர்த்தொம்பா, மற்றது பணத்தொம்பா.

ஆட்டுக்குட்டி பணத்தொம்பாவைக் காட்டி அது வேண்டும் என்றது. உடனே அதற்குள் ஆட்டுக்குட்டியைத் தூக்கி விட்டனர். அங்கு நிரம்பப் பணம் இருந்தது. அதைக் கண்டதும் ஆட்டுக்குட்டி மிக மகிழ்ந்து பணத்தைத் தன்னால் இயன்ற மட்டும் உண்டது. அதன் வயிறு முட்டிக் கனத்தது.

### பண்புப்பெயர்ப் புணர்ச்சி

பண்புப் பெயர்கள் நிலைமொழியாக நின்று வரும்மொழிச் சொற்களோடு புணர்ந்து அடையும் மாற்றங்களைப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி என்பர்.

நிலைமொழியாக வரும் வெண்மை, தன்மை போன்ற பண்புப்பெயர்கள் வருமொழியுடன் புணரும்போது பல நிலைகளில் மாற்றம் பெறும்.

எல்லா இடங்களிலும் இறுதியாக வரும் மை கெடும். மேலும் சில மாற்றங்கள் உண்டாகும்.

எ.கா.

1. நிலைமொழி இறுதியிலுள்ள மை கெடும்.

   சிறுமை + பொருள் = சிறுபொருள்
   வெண்மை + குடை = வெண்குடை

   (இங்கு நிலைமொழி ஈற்று மை கெட்டு வந்தது.)

2. நிலைமொழி நடுவில் நின்ற உகரம் **இ**கரமாக மாறும்.

செல்வருடைய ஆட்கள் அதைத் தூக்கி வெளியே விட்டனர். அதனால் நடக்க முடியவில்லை. தான் வீட்டுக்குச் செல்ல வேண்டுமானால் பல்லக்கு வேண்டும் என்று கேட்டது. உடனே செல்வந்தர் ஒரு பல்லக்குக் கொண்டுவருமாறு ஆணை இட்டார். ஆட்கள் பல்லக்குக் கொண்டு வந்தனர்.

அதில் ஆட்டுக்குட்டியை ஏற்றினர். பின் நால்வர் சுமந்து சென்றனர். பல்லக்கு தங்கள் வீட்டை நோக்கி வருவதைக் கண்ட தம்பியும் அவன் மனைவியும் திகைத்தனர். ஆட்டுக்குட்டியைப் பிரிந்த நாளிலிருந்து அவர்களால் எதையும் சாப்பிடமுடியவில்லை. பசி வருத்தமும் மன வருத்தமும் அவர்களை மிகவும் வாட்டி வதைத்தன. ஆட்டுக்குட்டி எப்படியாவது தங்களிடம் வந்துவிட வேண்டும் என்று விரும்பினர்.

ஆட்டுக்குட்டி பல்லக்கில் வருவதைக் கண்ட தம்பியும் அவன் மனைவியும் திகைப்பும் வியப்பும் அடைந்தனர். செல்வந்தரின் ஆட்கள் அதை இறக்கி உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். வீட்டுக்குள் வந்ததும் ஆட்டுக்குட்டி தனக்கு ஒரு தனி அறை கேட்டது. அது கொடுக்கப்பட்டது.

தனி அறைக்குள் சென்றதும் ஆட்டுக்குட்டி வாய் வழியாகவும் காது வழியாகவும் பணத்தைக் கொட்டியது.

அறை நிரம்பப் பணமாகக் கொட்டிக் கிடந்தது. அதை அளந்து காணத் தம்பியும் மனைவியும் விரும்பினர்.

அவர்கள் வீட்டில் அளப்பதற்கு மரக்கால் இல்லை. ஆகையினால் அண்ணன் வீட்டுக்குப்போய் மரக்கால் வாங்கத் தம்பி சென்றான். அண்ணனின் மனைவிக்கு ஐயம் ஏற்பட்டது. ஒன்றுமில்லாத ஏழையாக இருந்த தம்பி எதை அளக்க மரக்கால் கேட்கிறான் என்று அறிய விரும்பினாள். ஆகையினால் மரக்காலின் அடிப்பகுதியில் யாருக்கும் தெரியாமல் புளியை ஒட்டி மரக்காலைக் கொடுத்து அனுப்பினாள்.

தம்பி பணத்தை அளந்து கணக்குப் பார்த்த பின்னர் மரக்காலைத் திருப்பிக் கொடுத்தான். அண்ணனுடைய மனைவி தான் ஒட்டி அனுப்பிய புளியின் மேல் ஒரு பணம் ஒட்டியிருப்பதைக் கண்டு வியப்படைந்தாள். ஒன்றுமே இல்லாத ஏழையான தம்பிக்கு மரக்கால் கொண்டு அளக்கும் அளவுக்கு எப்படிப் பணம் வந்தது என்று வியந்தாள். அதை அறியத் துடித்தாள்.

தங்களுக்கும் மிகுதியாகப் பணம் கிடைக்க வேண்டும் என்ற பேராசை கொண்டாள். எப்படியாவது தம்பியிடமிருந்து பணம் கிடைத்த இரகசியத்தை அறிந்துவிட வேண்டும் என்று தன் கணவனை அவனிடம் அனுப்பினாள்.

இதுவரைப் பகையாக இருந்த அண்ணன் பற்றுடன் தன் வீடு தேடி வருவதைக் கண்ட தம்பி, அவனை அன்புடன் வரவேற்றான். கபடமில்லாத தம்பி தனக்குப் பணம் கிடைத்த வரலாற்றை மிக விளக்கமாக அண்ணனிடம் கூறினான். அதைக் கேட்டதும் அவனுக்குத் தானும் அவ்வாறு பணம் பெறவேண்டுமென்ற பேராசை ஏற்பட்டது.

வீட்டுக்கு வந்து தன் மனைவியுடன் இது பற்றிக் கலந்து ஆலோசித்தான். அவள் இதைக் கேட்டுப் பொறாமையால் நெஞ்சம் துடித்தாள். பரம ஏழையாக இருந்த தம்பி பெரிய பணக்காரன் ஆகிவிட்டதை அவளால் தாங்க முடியவில்லை.

பெருமை + அண்ணன் = பெரியண்ணன்

நெடுமை + அன் = நெடியன்

(இங்கு இறுதி மை கெட்டது. மேலும். நிலைமொழி நடுவில் உகரம் பெற்று வரும் ரு, டு ஆகிய எழுத்துகள் **இ**கரமாக மாறி ரி, டி என வந்துள்ளன.

3. நிலைமொழி முதலிலுள்ள குற்றெழுத்து நெட்டெழுத்தாகும்.

முதுமை + ஊர் = மூதூர்

அருமை + உயிர் = ஆருயிர்

(இங்கு மை கெட்டது. மேலும் மொழி முதல் நின்ற உகரம் **அ**கரம் ஆகிய குற்றெழுத்துகள் **ஊ**காரம் **ஆ**காரம் என்னும் நெட்டெழுத்துகளாக மாறின.

4. நிலைமொழி முதலிலுள்ள **அ**கரம் **ஐ**காரமாகும்.

பசுமை + தமிழ் = பைந்தமிழ்

இங்கு இறுதி மை கெட்டது. மேலும் ப என்னும் முதலெழுத்திலுள்ள

எப்படியாவது அவனை விடவும் கூடுதல் பணத்தைத் திரட்டி விடவேண்டும் என்று இருவரும் திட்டமிட்டனர். தம்பி ஆட்டுக்குட்டியை அனுப்பியது போன்று அவர்கள் நாயை அனுப்பத் தீர்மானித்தனர்.

அகரம் **ஐ**காரமாக மாறி பை என வந்துள்ளது.

5. நடுவில் நின்ற மெய்யெழுத்து இரட்டித்து வரும்.

சிறுமை + ஊர் = சிற்றூர்

இங்கு இறுதி மை கெட்டது. மேலும் இடையே நின்ற ற் என்னும் மெய்யெழுத்து ற்று என இரட்டித்தது.

6. மை என்ற எழுத்துக்கு முன்னே நின்ற ஒரு மெய்யெழுத்து வேறொரு மெய்யாக மாறும்.

வெம்மை + நீர் = வெந்நீர்

இங்கு மை கெட்டது. மேலும் ம் என்னும் மெய் ந் என்னும் மெய்யாக மாறியது.

7. வல்லெழுத்துக்கு இனமான மெய்யெழுத்து மிகுந்து வரும்.

கருமை + குதிரை = கருங்குதிரை இங்கு இறுதி 'மை' கெட்டது. மேலும் வருமொழி முதலில் வருகின்ற 'க்' கின் இனமான 'ங்' மிகுந்தது.

அடுத்தநாள் காலையில் நாயைப் பக்கத்து ஊர் செல்வந்தரின் வயலுக்குள் துரத்தினர். நாய் வயலுக்குள் அங்கும் இங்கும் சாடிக் குதித்துப் புரண்டது. அதை அங்கு வேலை செய்தவர்கள் கண்டு கோபங்கொண்டனர். பின் நாயைப் பிடித்துச் செல்வந்தரிடம் கொண்டு போயினர். அவர் அதைக் கட்டி வைக்குமாறு ஆணையிட்டார்.

நாய்க்குப் பசியெடுப்பதுவரை காத்திருந்து அதன் கண்காண நீர்த்தொம்பாவுக்குள் சில பருக்கைச் சோற்றைச் செல்வந்தர் போடச் சொன்னார். பணத்தொம்பா பக்கத்திலிருந்தது. நாயைக் கட்டவிழ்த்து விட்டதும் பணத்தொம்பாவை எட்டிப் பாராது நீர்த்தொம்பாவுக்குள் குதித்தது. சோற்றுப் பருக்கை தொம்பாவின் அடியில் இருந்ததினால் முதலில் மேலிருந்த நீரை நாய் குடித்தது. வயிறு வீங்கத் தண்ணீர் குடித்ததினால் அதனால் வெளியில் குதிக்க முடியவில்லை.

செல்வந்தர் நாயைத் தண்ணீர்த் தொம்பாவுக்குள் இருந்து வெளியில் எடுத்துத் துரத்தும்படி கூறினார். வேலையாட்கள் அவ்வாறு செய்தனர். அது நடக்க முடியாத நிலையில் தள்ளாடித் தள்ளாடித் தன் வீட்டை நோக்கி நடந்து சென்றது.

நாய் நிரம்பப் பணத்துடன் வரும் என்ற பேராவலில் அண்ணன் பல்லக்குடன் காத்திருந்தான். நாய் பெருவயிற்றுடன் வருவதைக் கண்டதும் அதைப் பல்லக்கில் ஏற்றி மேள வாத்தியம் முழங்க வீட்டுக்கு வந்தான். அவனுடைய மனைவி தங்கள் வீட்டில் பணம் குவியப்போகிறது என்ற மகிழ்ச்சியில் தலைகால் புரியாமல் அங்கும் இங்கும் நடந்தாள்.

நாயை மிகவும் மரியாதையாக வீட்டின் உள் அறையில் கொண்டு விட்டனர். சிறிது நேரத்தில் வீட்டுக்குள் இருந்து தண்ணீர் பாய்ந்து வந்தது. அண்ணனும் மனைவியும் எட்டிப் பார்த்தனர். நாயானது குடித்த தண்ணீரையெல்லாம் சிறுநீராகப் போக்கிக்கொண்டிருந்தது.



அதைக் கண்டதும் அவர்களுக்கு வாய் அடைத்துப்போனது. பணம் பெறப் பேராசைப்பட்டது, பாழாய்ப் போனதை எண்ணி மனம் வருந்தினர். தம்பிக்குச் செய்த அநியாயம் நாயின் சிறுநீராக வீட்டை நனைப்பதைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டனர். தம்பியும் அவனுடைய மனைவியும் அவர்களுக்கு ஆறுதல் கூறி அமைதிப் படுத்தினர்.

**-நாட்டார் கதைகள்**

**செயல்பாடுகள்**

- நாட்டுப்புறக் கதைகள் நற்குணங்களைப் போதிக்கின்றன என்பதைப் பேராசையின் பரிசுக் கதை எப்படி உணர்த்துகிறது? கலந்துரையாடிக் குறிப்புகள் எழுதுங்கள்.
- பாமர மக்களின் இயல்பான சிந்தனைகள் கதைகள் மூலம் வெளிப்படுகின்றன என்பதைச் சிறுகட்டுரையாக எழுதுங்கள்.

# செவ்விலக்கியப் பண்பாடு



## சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு

**ச**ங்க இலக்கியச் சிறப்பியல்புகளுள், நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு, ஒன்றே உலகம் என்ற உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி என்ற அமெரிக்க அரசியல் அறிஞர் எழுதி வெளியிட்ட 'ஒரே உலகம்' என்னும் நூலை மக்கள் இனிதாய் வரவேற்றனர். அந்நூலில் அவர் எழுதியுள்ளனவாகிய வருங் காலத்தில் நம் சிந்தனை உலகாங்குப் பரந்திருத்தல் வேண்டும் என்னும் முதற்சொற்கள், இன்றைய இருபதாம் நூற்றாண்டில், ஏனையோர்க்குப் பெருமகிழ்வு அளிப்பது பற்றித் தமிழராகிய நாம் சிறு புன்முறுவல் அரும்பி நிற்கின்றோம். ஏன்? இந்த இருபது

நூற்றாண்டுகட்கு முன்னமே தானே தமிழறிஞர் இதனை இனிதுணர்ந்திருந்தனர். உணர்ந்ததனை உயர்ந்த சொல் வடிவில் உரைத்துமுள்ளனர்.

**‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’**

**‘பெரிதே உலகம், பேணுநர் பலரே’**

**‘எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே’**

**“யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு”**

என்றெல்லாம் சங்ககால நூல்கள் யாண்டும் வலியுறுத்தி யுரைத்தல் காண்க.

இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது?

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்த**



அதன் பயனாகவும் மொழி பெயர் தேயங்கட்கும் கடல் கடந்து வேற்று நாடுகட்கும் சென்றதன் பயனாகவும், மூவேந்தருடன் குறுநில மன்னர்க்கும், பிற நாட்டு மன்னர்க்கும் உண்டாய தொடர்பின் பயனாகவுமே, அவர் இத்தகைய பரந்து விரிந்த மனப்பான்மையையும், நோக்கங் களையும் பயின்றறிந்து வளர்த்துக்கொண்டாராதல் வேண்டும்.


மேலே எடுத்துக் காட்டிய ஒருலக மனப்பான்மையும், அதற்கு அடிப்படையான பரந்த நோக்கமும், நமது பண்பின் மற்றொரு சிறப்பியல்பிற்குக் காரணமாயின. இது கண்ணோட்டம் எனப்படும். பொறை எனலும் பொருந்தும். நம் தொகை நூல்கள்

பல்வேறு சமயக் கோட்பாடுகளையும், அரசியல் தத்துவக் கொள்கைகளையும், தம்முள் முரண்படும் பழக்க வழக்கங்களை யும் காட்டுவன. இச் செய்யுட்களை இயற்றியவர் ஒரு குலத்தார் அல்லர், ஓர் இனத்தார் அல்லர், ஓர் இடத்தார் அல்லர், அந்தணர் சிலர், அரசர் பலர், வணிகர் பலர், வேளாளர் பலர். இரவலரும் உளர், புரவலரும் உளர். ஆண் பாலாரும் உளர், பெண் பாலாரும் உளர். ஐந்திணைத் தலைமக்களும் உளர், நிலை மக்களும் உளர். வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டவர் உள்ளனர். வெவ்வேறு வாழ்க்கை நிலை கொண்டவர் உள்ளனர். கூடல், உறையூர், கருவூர் முதலான பேரூர்களில் பிறங்கியவர் உளர். அரிசில், ஆலங்குடி முதலாக, வெள்ளூர் வேம்பற்றூர் ஈறாக, சிற்றூர்களில் திகழ்ந்தவரும் உளர்.

1800 ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ்நாட்டுச் சமயவாதிகள் தத்தம் கொடிகளை நிறுவி, தத்தம் சமயங்களைப் பரப்பிய முறையைக் காணப் பெறின், இக்கால மக்கள் என்ன கூறுவர்? தமிழ்நாட்டுச் சமய வரலாறு நம் மக்களின் ஒப்பற்ற பெருந்தன்மைக்குச் சான்றாய் விளங்குகின்றது. இப்பெருந்தன்மைக்கு அணிகலன்களாகவே நம் இலக்கியத்தில் பற்பல சமயங்களில் நூல்கள் அமைந்துள்ளன.

இவ்வாறே, பக்தியில் கலித்த செய்யுட்கள் தமிழில் அரும்பி மலர்ந்தது போல், வேறு எம்மொழியிலும் மலர்ந்தில. அளவிலும் சுவையிலும், தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல், பிற இலக்கியங்களில் இல்லை. எனவே மொழிநூல் முறையில் எத்துணை வழுவுடையதாய் இருப்பினும் ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது, ஒரு புடைஒக்குமெனின், தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும்.

## பண்டைத் தமிழர் திருமணம்



உழுந்து தலைப்பெய்க் கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை, தொடரிக்
கனைஇருள் அகன்ற கவின்பெரு காலைக்

தமிழருடைய நீதி நூல் தொகுதிகளும் நீதி மொழிகளும் நீதிக் கருத்துகளும் சங்க இலக்கியத்தைப் பயின்று வருவோர் கருத்தைக் கவர்கின்றன.

போரும் தூதும் வணிகமும் விளங்கும் நாட்டில், நீதியும் ஒருங்கே விளங்கும். நேர்மை, நடுவு நிலைமை, உண்மை, வீரம் போன்ற நல்லியல்புகள், போரிலும் வாணிகத்திலும் தலைசிறந்து நிற்றல் ஒருதலை. இரக்கம், அன்பு என்பன, செல்வமும் வீரமும் உடையவர்பால் சுரக்கும் இரு பண்புகளாம். எனவே, நீதி நூல்கள் நம் இலக்கியத்தின் பெரும் பகுதியாய் விளங்குவதற்கு, நம் முன்னோரின் வாழ்க்கை அமைப்பு முறையே காரணமாய் இருந்து என்பதில் சிறிதும் ஐயமில்லை. நீதிநூல் தொகைகளைத் தவிர, பிற இலக்கியங் களிலும், தமிழனின் நீதிநெறி முறைகளும், அன்புடைமையும் காணப் படுகின்றன. அகப்பொருள் துறைச் செய்யுள்களே யாயினும், இயற்கை அழகை எடுத்துக்கூறும் பொழுது, தமிழ்ப் புலவர் நீதியை அடிப்படைக் கருத்தாகக் காட்டத் தவறார். மலர்கள் நறுமணங் கமழுதற்கும், ஆற்றிடை நீர் தெளிவுற்றிருப்பதற்கும், இன்னும் இவை போன்ற இயற்கை நலங்கள் எல்லாம் சிறப்பதற்கும், மன்னன் செங்கோன்மையே காரணம் என்பர் சங்கநூற் புலவர் பெருமக்கள்.

நிறையும் நீதியும் நம் மக்கள்பால் நிறைந்து நிலவுதற்குக் கல்வியறிவே அடிப்படைக் காரணமாய் இருந்தது. செல்வத்தையோ செல்வரையோ தமிழர் பெரிது போற்றிலர். சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம் எனவும், பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள எனவும், முற்காலம் தொட்டுப் பிற்காலம் மட்டும் அவர் கருத்து அதுவே. அவர் அறிந்து போற்றிய செல்வம் அருட்செல்வம், செவிச்செல்வம், கல்விச் செல்வம், ஆண்மைச் செல்வம், பெருந்தன்மைச் செல்வம், ஈகைச் செல்வம் என்பனவே. உள்ளவாறு பெருமிதம் கொள்ளுதற்கும் இவையே காரணம் என்பர்.

கோள்கால் நீங்கிய கொடுவெண்
திங்கள்
கேடில் விழுப்புகழ் நீள்தலை
வந்தென
உச்சிக் குடத்தர், புத்தகன்
மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம்
பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை
தரத்தரப்
புதல்வற் பயந்த சிதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆக
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்இருங் கதுப்பின் நெல்லொடு
தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் கம்மையர் ஞெரேரேனப்
புகுதந்து
பேர்இற் கிழத்தி ஆக எனத் தமர்குர
ஓர்இற் கூடிய உடன்புணர் கங்குல்

**அகநானூறு - 86**

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

என்பார் முதற்பாவலர் திருவள்ளுவர்.

இலக்கியம் வளர்ந்தெழுவதற்கு நிலைக்களனாக உதவும் பொருள்கள், மக்களும் இயற்கையுமே, இவ்விரு பகுதிகளையும் பிரித்து, இயற்கையை விடுத்து மக்களைப் பற்றியும், அல்லது மக்களை விடுத்து இயற்கையைப் பற்றியும் புலவர் பாடுவரேல், அவ்விலக்கியம் குறைவுள்ள இலக்கியமாகவே விளங்கும். தமிழ்ப் புலவரோ, தம் புலமைத் திறனைக் காட்டுவதற்கு, முதற் பொருளாக மக்களையும், துணைப்பொருளாக இயற்கையையும் எடுத்துக்கொண்டனர். இயற்கையைத்தானும் தமிழ்ப் புலவர் கையாண்ட முறையில், வேறு எம்மொழிப் புலவரும் கையாண்டிலர். தமிழரின் இயற்கை ஈடுபாட்டைப் பற்றி ஆராயுந் தோறும், எந்நாளும் புதிய கருத்துகளையும், வியத்தற்குரிய உண்மைகளையும் கண்டு வருகின்றேன்.

உள்ளதை உள்ளவாறே கூறுதல் சங்க காலத்துத் தமிழர் பண்பின் வேறொரு சிறந்த இயல்பாகும். தமிழ்நாட்டுச் சங்க இலக்கியத் திற்கும், இந்தோ ஐரோப்பிய மொழிகளின் இலக்கியத்திற்கும் உள்ள பெரியதொரு வேற்றுமையாதெனின் இந்தோ ஐரோப்பிய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் கற்பனையில் மலிந்து வாழ்க் கையுடன் ஒட்டிய வரம்பைக் கடந்து செல்லும் இயல்புடையன.



இவ்வாறு சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பல்வேறு முறைகளில் ஆய்ந்து செல்வதற்கு இட முண்டு. பண்டைக்கால இலக்கியத் தெய்வங் களை எடுத்து நோக்கும்பொழுது - நம் முன்னோர் கொண்டொழுகிய வாழ்க்கைய மைப்பின் சிறப் பியல்புகளை ஆராயும்பொழுது - அவர்களது இயற்கையீடுபாடு, அழகொடு இரண்டறக் கலத்தல், தூய கொள்கைகள், வாழ்க்கையின் மேலான குறிக்கோள், நீதியும் ஒழுக்கமும் ஒருங்கமைந்த உயர்ந்த அரசியல் அமைப்பு முறைகள், இவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது இற்றை ஞான்று தமிழர் என அழைக்கப்பெறும் நாம், உண்மையில் நம்முன்னோரின் வழித்தோன்றல்கள்தாமோ என்னும் ஐயம், என்னையும்

அறியாமலே என் உள்ளத்தில் உதிக்கின்றது.



தமிழறிஞர் தமிழை அன்புடன் தனித்தமிழ், செந்தமிழ், முத்தமிழ், தீந்தமிழ், தேன் தமிழ், தண்டமிழ், வண்டமிழ், கோதில் தமிழ், தீதில் தமிழ் என்றெல்லாம் போற்றுகின்றனர். அவ்வன்பிற் பிறரும் பங்கு பெற்று, உலகம் பெருவாழ்வு அடையுமாறு நாமனைவரும் ஒருங்கு சேர்ந்து உழைப்பதே, இவ் வழகிய மொழியை நமக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனுக்கு, நாம் காட்டும் நன்றித் தொண்டாகும்.

**–தனிநாயக அடிகள்**

**தனிநாயக அடிகள்**



இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்த தமிழ் அறிஞர். மலேயா பல்கலைக்கழக இந்தியவியல் துறையில் பேராசிரியராக இருந்தவர். உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர். தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றை உலகமெங்கும் ஆராய்வதற்குத் துணையாகும் வகையில் Tamil Culture என்னும் ஆய்விதழை நடத்தியவர்.

**செயல்பாடுகள்**

- ‘தமிழர் பண்பாடு’ என்னும் தலைப்பில் பள்ளியின் கலை விழாவில் பேசிட உரை ஒன்று தயார் செய்யுங்கள்.
- ‘சங்க இலக்கியத்தில் பண்பாடு’ எனும் கட்டுரையின் அடிப்படையில் வினாடிவினாப் போட்டி ஒன்றை நடத்திட வினாக்கள் தயார் செய்யுங்கள்.
- தமிழின் சிறப்பினை உணர்த்தும் பாடல்களைச் சேகரித்துத் தொகுப்பாக்குங்கள்.

# வேலன் வெறியாட்டு

மக்களுக்கு இரு நிலைகளில் நோய் வரலாம். ஒன்று உடல் நோய். இன்னொன்று மனநோய். உடல்நோய் சுற்றுச்சூழலால் ஏற்படுவது. மனநோய் தெய்வம் அல்லது தீய சக்திகளின் தீண்டுதலால் ஏற்படுவது என்பது பழங்கால நம்பிக்கை. மனநோய் பாதிக்கப் பட்டவர்கள் உணவு உடை உறக்கம் பற்றிக் கவலைப்படுவதில்லை. இவர்கள் நல்ல ஆடை அணிகலன்கள் அணிவதில்லை. சரியான நேரத்தில் உணவு உண்பதில்லை. இரவெல்லாம் தூக்கமின்றி விழித்திருப்பர். எதிலும் ஆர்வம் காட்டுவதில்லை. மொத்தத்தில் ஒரு நடைப்பிணமாகவே காட்சியளிப்பர். காதல்வயப்பட்டவர்கள் இந்நிலையில் இருப்பதைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. தெய்வதோஷம் நீங்கி, இந் நோயினின்றும் காப்பாற்றும் பொருட்டு அக்காலத்தில் நடத்தப்பட்ட ஒரு சடங்குதான் வேலன் வெறியாட்டு. இத்தகைய நோய் வேலன் அல்லது முருகன் வருத்துவதால் உண்டாவதாக ஒரு நம்பிக்கை இருந்தது. எனவே வேலனுக்கு எடுக்கப்படும் இச்சடங்கு வேலன் வெறியாட்டு எனப்பட்டது. வெறியாட்டு என்பதற்கு ஆடுவது என்பது பொருள். வேலன் வெறியாட்டு நடத்துவதற்காகவே அக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் இருந்தனர். இச்சடங்கை நடத்துபவனும் வேலன் என்றே அறியப்பட்டான். பெரும்பாலும் இவன் முதியவனாகவே இருப்பான். வேலனை அழைத்து வெறியாடச் செய்து முருகப்பெருமானுக்குப் பலி தருவதே இச்சடங்கின் முக்கிய நோக்கம்.



இரவு நேரம் இவ்வெறியாட்டு நடைபெறும். இதற்காக நிலத்தைத் திருத்தி வெறியாட்டுக் களம் ஒன்று அமைக்கப்படும். அதில் தூய்மையான வெண்மணலை விரிப்பர். பின்னர் களம் முழுவதும் உதிரிப் பூக்களை தூவுவர். களத்தின் நடுவே முருகவேளின் ஆயுதமாகிய ஒளிபொருந்திய நீண்ட வேல் ஒன்று நட்டு வைக்கப்படும். அதற்கு ஒரு மாலை அணிவிக்கப்படும். தான் கொண்டு வந்திருந்த கடப்பாமாலையை வெறியாடும் வேலன் அணிந்துகொள்வான். பின்னர் மிக்க இளமையுடைய ஆட்டுக் குட்டி ஒன்று அறுக்கப்பட்டுப் பலியாக வைக்கப்படும். அதன்

குருதியில் பிசைந்த தினைமாவும் படைக்கப்படும். தொடர்ந்து துடி முதலான இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டும் பலவாறு பாடிக்கொண்டும் பூக்களைக் களத்தில் தூவிக்கொண்டிருப்பான் வேலன். திடீரென முருகப்பெருமான் தன்மேல் ஏறியதாக அவன் அசைந்து அசைந்து ஆடத் தொடங்குவான். பின்னர் இவ்வாட்டம் வெறிபிடிக்கத் தொடங்கும். இரவு முழுவதும் இவ்வெறியாட்டம் நடைபெறுவதுண்டு. இவ்வாறு வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துவதால் நோய் நீங்கும் என்பது நம்பிக்கை.

**செயல்பாடுகள்**

- ✍ வேலன் வெறியாட்டு உணர்த்தும் பழங்காலச் செய்திகள் போன்ற தற்காலச் செய்திகளை சிறு குறிப்புகளாக எழுதுங்கள்.
- ✍ வெளிச்சப்பாடு என்னும் கேரள மக்களின் நம்பிக்கையுடன் வேலன் வெறியாட்டினை ஒப்பிட்டு எழுதுங்கள்.

## நடுகல்

**த**மிழர்கள் வீரம் மிக்கவர்கள் எனவேதான் பாட்டுக்கொரு புலவன் பாரதியும் தமிழகத்தைப் பாடும்போது ‘வீரம் செறிந்த தமிழ்நாடு’ எனப் போற்றிப் புகழ்ந்தார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்தை வீரயுகக் காலம் என்று குறிப்பிட்டனர் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள். தமிழர்களின் வீரத்தின் வெளிப்பாடுகளாக அமைந்தவை சங்க இலக்கியப் புறப்பாடல்கள். வீரர்களைப் போற்றுவதும் புகழ் வதும் வாழ்த்துவதும் வணங்கு வதும் பண்டைத் தமிழர் பண் பாடாகவே இருந்தது.



அக்காலத்தில் நாட்டுக்காகப் போராடுவது என்பது ஒரு நித்திய நிகழ்ச்சியாகவே நடந்துள்ளது. மேலும் அன்னிய நாட்டைச் சார்ந்தவர்கள் ஒரு நாட்டுக்குள் புகுந்து அன்றைய மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்கிய ஆடுமாடுகளைக் கவர்ந்து செல்வதும் வழக்கமாக இருந்துள்ளது.

சில நேரங்களில் வனவிலங்குகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களை அச்சப்படுத்துவதும் துன்புறுத்துவதும் உண்டு. இதுபோன்ற சூழ்நிலைகளில் வீரம் மிகுந்தவர்கள் நாட்டுமக்களையும் ஆடுமாடுகளையும் காப்பாற்றும் பொருட்டுப் பகைநாட்டுப் படைகளையும் திருடர்களையும் விலங்குகளையும் எதிர்த்துப் போராடுவர். இவ்வாறாகப் போர் முதலான ஏதேனும் வீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக ஒரு பெரிய கல்லை நாட்டி வழிபடுவது அன்றைய மரபு. வீரர்களின் நினைவாக நாட்டப்படும் இக்கல் 'நடுகல்' என அறியப்பட்டது. தமிழகத்தின் எல்லைப்பகுதிகளில் இத்தகைய ஏராளமான நடுகற்களைக் கண்டெடுத்துள்ளனர்.

**பதினொரு வகைக் கூத்துகள்**

1. அல்லியம்
2. மல்
3. துடி
4. குடை
5. குடி
6. பேடு
7. மரக்கால்
8. பாவை
9. கடையல்
10. பாண்டரங்கம்
11. கொடுகொட்டி

-சிலப்பதிகாரம்
அரங்கேற்றுக்காதை

இவ்வாறு எடுக்கப்படும் நடுகற்களில் வீரனின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் இடக்கையில் வில்லும் வலக்கையில் வாளும் தாங்கிய நிலையில் இவ்வுருவம் செதுக்கப்பட்டிருக்கும். உருவத்தின் ஒரு பக்கத்தில் வீரனின் பெயர், அவன் புரிந்த வீரச்செயல் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கும். நடுகற்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டனர் பண்டைத் தமிழ் மக்கள்.

நடுகல்லின் மேல் புடவையால் செய்யப்பட்ட பந்தல் அமைத்து தூயநீரினால் நடுகல்லை நீராட்டுவர். சிவந்த பூக்களையும் தழையையும் விரவித் தொடுத்துக் கட்டிய மாலையையும், வேங்கை மரத்தின் பூக்களால் தொடுத்த மாலையையும் கல்லுக்கு அணிவிப்பர். அழகான மயில் பீலியைக் கல்லின் உச்சியில் சூட்டுவர். நடுகல்லைச் சுற்றி வேலிபோல் கேடயங்களை நிறுத்திவைப்பதும் உண்டு. அவற்றைத் தாங்குவதற்காக வேல்களை ஊன்றிவைப்பர். பின்னர் பலவிதமான மணப்பொருட்களைப் புகைப்பர். ஒரு சிறிய கலத்தில் நாரால் அரிக்கப்பட்ட கள்ளை நிறைத்துக் கல்லின் முன்னால் படைப்பதுண்டு. பலியும் கொடுக்கப்படும். பின்னர் எல்லோரும் கூடிநின்று கைவணங்கி நடுகல்லில் தெய்வமாக நின்றவனை வழிபடுவர். இவ்வாறாக நடுகல் வழிபாடு நடத்தப்பட்ட செய்திகளைச் சங்க இலக்கியப் பாடல்களில் பல இடங்களில் காணலாம். நடுகற்கள் இன்றும் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் நினைவுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**செயல்பாடுகள்**

- நடுகற்கள் வீரத்தைப் போற்றியதன் அடையாளம். இதுபோன்ற நினைவுச் சின்னங்கள் குறித்து எழுதுக.

# குறிஞ்சிப்பாட்டு

**ப**த்துப்பாட்டில் ஒன்றான ‘குறிஞ்சிப்பாட்டு’ தமிழரின் அக ஒழுக்கத்தை விளக்கும் ஐந்திணைகளுள் முதலாவது திணையாகிய குறிஞ்சி ஒழுக்கத்தை விளக்கிச் சொல்கிறது. காதலர் இருவர் தாமே தனியராக எதிர்ப்பட்டு உள்ளம் கலந்து களவு ஒழுக்கம் கொள்வர். இக்களவொழுக்கம் அறத்தொடுநிற்றல் வாயிலாகப் பிறருக்கு வெளிப்படும். அறத்தொடுநிற்றல் என்பது தலைவி தன்னுடைய காதலை அறத்தின் வழிநின்று தோழிக்கு எடுத்துரைத்தலாகும். தோழி தன்னுடைய தாயாகிய செவிலிக்கு இதைத் தெரிவிப்பாள்; செவிலி தலைவியின் தாயாகிய நற்றாய்க்கு இந்தச் செய்தியைச் சொல்லுவாள்; நற்றாய் இதனைத் தலைவியின் தந்தையாகிய தன் கணவனுக்கும், தலைவியின் சகோதரர்க்கும் தெரிவிப்பாள். இவ்வாறு தலைவியின் காதற் செய்தி முறைப்படி வெளிப்படுவதே அறத்தொடுநிற்றல் எனப்படும். இந்த அகமரபை ஆரியவரசன் பிரகத்தனுக்கு விளக்கிச் சொல்வதற்காகக் கபிலர் இப்பாடலைப் பாடினார் என்று பாடலின் அடிக்குறிப்புச் சொல்கிறது. இக்குறிப்பு வருமாறு: ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது.

களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு அறத்தொடுநிற்றல் திருப்பு முனையாக அமைகிறது. அகமரபின் உயிர்போன்ற இத்தகு அறத்தொடு நிற்றலே குறிஞ்சிப்பாட்டின் பாடுபொருளாகிறது. இப்பாடலில் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். தலைவியும் தோழியும் தினைப்புனம் காக்கச் சென்றது, அங்குத் தலைவன் எதிர்ப்பட்டது, தலைவியும் தலைவனும் உள்ளம் கலந்தது, அவர்களின் தொடர் சந்திப்புகள், தலைவியின் மனக்கலக்கம், தோழியின் ஆறுதல் மொழிகள், இதனை முறைப்படி செவிலிக்கு நயமாக எடுத்துரைத்து மணவினைக்கு வழிகோலுதல் ஆகிய செய்திகள் குறிஞ்சிப்பாட்டில் நாடகம் போல அழகுறச் சொல்லப்பட்டுள்ளன.

இப்பாடலில் தலைவியும் தோழியும் 99 வகை மலர்களைத் தொகுத்து மாலையாகத் தொடுக்கின்றனர்; இந்தத் தொண்ணூற்றொன்பது மலர்களின் பெயர்களையும் கபிலர் நிரலாக அமைத்துச் சொல்வது இயற்கையின்பால் அவர்க்குள்ள ஈடுபாட்டினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

# கூத்துக்கலை



## குறிஞ்சிக் கூத்து

(பாரியின் கலைமுற்றம். முதலில் தொகுசொற்கோடியன் வந்து பாடுகிறான்)

**தொ.சொ.கோ.** : பறம்பு மலை ஆளும் - வள்ளல்
பாரியே எம் வணக்கம்

குறிஞ்சிப் பாட்டுத் தந்த - புலவர்
கோமானே எம் வணக்கம்...
முற்றத்தில் இருநிலவாம் - பாரி
மகளிரே எம் வணக்கம் - சொற்
குற்றம் பொருட் குற்றம் - எம்
கூத்தில் வந்தாலும்

இருள் உண்டே விளக்கடியில் – நிலவில்
இருண்ட பகுதியுண்டே
அருள் கூர்ந்து பிழை பொறுத்து – எங்கள்
ஆட்டத்தைக் காணவேணும்...

எல்லோர்க்கும் வணக்கம்... நேத்து நடந்த கூத்தோட இறுதிப் பகுதிதான் இன்னைக்கு பார்க்கப்போறது. ஆமாம். கபிலர் பெருமான் எழுதுன குறிஞ்சிப்பாட்டுத்தான். அவர் எழுதின அகப்பாடல்கள்லேயே குறிஞ்சிப் பாட்டுத்தான் ரொம்பப்பெரிசு. அதனால தான் இரண்டு நாளா இதைக் கூத்தாய்ப் பண்ணுறோம்.

இந்தக் கூத்தைப் பார்த்தா உங்களுக்கு வள்ளி திருமணம் நினைவுக்கு வரலாம். ஆனால் வள்ளி திருமணம் எல்லாத்துக்கும் முன்னோடி இந்தக் குறிஞ்சிப் பாட்டுத்தான். குறிஞ்சிப் பாட்டை இதுவரையிலும் யாரும் கூத்தா ஆடலை. வள்ளி திருமணத்தை ஆடும்போது இதை ஏன் ஆடக் கூடாது?

கபிலருடைய நீண்ட நினைவு குறிஞ்சிப் பாட்டு. அவருடைய நெடிய அமைதியிலே ஒரு வேளை இந்தக் குறிஞ்சிப்பாட்டுத்தான் கூத்தா நடக்குதோ என்னவோ?

விறலி : குறிஞ்சிப்பாட்டு கபிலருடைய – இல்லே தமிழர்களுடைய – காதல் பற்றிய ஆதி நினைவின் பதிவும் கூட...

இப்போ கூத்தைப் பார்க்கலாம்.

(திரைச்சீலையைக் கோடியர்கள் பிடித்துக்கொள்ள அதன் மறைவுக்குள்ளே தலைவனுடைய ஒப்பனை நடக்கிறது. தொகுசொற் கோடியன் பாடத் தொடங்குகிறான்...)

### மரபுத்தொடர்

ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வருவது தொடர் எனப்படும். மரபு என்பது காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருவது. இவ்வாறு தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் சொற்றொடர்களே மரபுத் தொடர். கிணற்றுத் தவளை என்பது ஒரு மரபுத்தொடர். மரபுத் தொடர்கள் வாழும் வாழ்க்கை அனுபவத்தை வெளிப்படுத்தும் சொற்கூட்டாக அமைந்திருக்கும். இத் தொடர்கள் நேரடியாகச் சுட்டும் பொருள் இல்லாமல் காலம்தோறும் சமுதாயம் கொள்கின்ற பொருளை உடையதாய் இருக்கும்.

தாம் வாழும் சூழலுக்கு அப்பால் வேறு

**குழு (சிந்து)** : வண்ணச் சுருள் குழல் இன்னும் கருத்திடும்
எண்ணெய் தலைபூசி – மயிர்ச்சாந்த
எண்ணெய் தலைபூசி –
தண்ணீர்க் குளியலில் இன்னுமுலர்ந்திடா
வண்ண முடிவாரி – விரல்களால்
வண்ண முடிவாரி...
காழ் அகிற் கட்டையில் நீள்கிற புகையினில்
கருத்தகுழல் உலர்த்தி – தலைக்குப்
பொருத்தமாய்ப் பூ முடித்து....
(சுருள்)



மலையிலே பூத்தது மண்ணிலே பூத்தது
மரத்திலே பூத்தது குளத்திலே பூத்தது....
பொருத்தமாய்ப் பூ முடித்து....
(வேறு)
வண்ண வண்ணமாலை – பிச்சுப்பூ
வடமாலை தலைமாலை – வெண்தாழைக்
கண்ணியும் தோள்மாலை.
(சிந்து)
கருத்தகுழல் உலர்த்தி – தலைக்குப்
பொருத்தமாய்ப் பூ முடித்து...
நெருப்பொளி போல அசோகச் செழுந்தளிர்
நீளும் அவன் காதில் ...... அவன் நெடும்
தோளில் அது மோதும்...
சண்பகம் மணக்கிற நம் மலைபோல் அவன்
மார்பும் பேரகலம்... அரைத்த
சந்தனம் அதில் கமழும்
அந்த மலை மார்பில் அணிகலன்
சுடர்விடும்.

அசைந்திடும் பூமாலை – முருகென
வியந்திடும் இளங்காளை
பருத்த முன்கையில் கனத்த நெடுவில்லும்
பாய்ந்திடும் அம்புகளும்... கண்டாலே
சாய்ந்திடும் மாமயிலும்.

திருத்தமுற்ற கச்சை இடுப்பில் வரிந்துகட்டி
எடுத்து வைக்கும் அடியில் - கழல்கள்
தொடுத்து வரும் ஒலியில்....
(வேறு)

**தலைவி** : முருகனைப் போல் இளந்தலைவன் வந்தான் - பெண்கள்
மூக்கில் விரல் வைத்து - அவனை
நோக்கி மனம் சொக்க....
(முருகனைப் போல்)
விரித்த பசுங்குடை - அசோகமரம் நின்று
கருத்த நிழல்களில் பொன்தாது போர்த்தும்
(முருகனைப் போல்)
அந்த நிழல்களின் அருமையில் இருந்தோம்
அருவியின் இசையில் எம்மை மறந்தோம்...
வந்தவன் தனியே வரக்கூடாதா?
வந்தால் எங்களின் கண்கள் படாதா?
(முருகனைப் போல்)
(சிந்து)

**குழு** : கூட்டாளிமார்களாய் வேட்டை நாய்களையா
கூட்டிக் கொண்டு வருவான் - இந்தக்
காட்டுக்குள்ளே திரிவான்? - அவை
குரைக்கும் ஒலி கேட்டுக் குதிக்கும் அருவியின்
குரலும் மலை ஒடுங்கும் - ஈரக்
குலையோடு உயிர் நடுங்கும்
நெட்டை அசோக மரத்தின் நிழல்விட்டு
எட்டுகள் விரைந்து வைத்தோம் - வேறொரு
குட்டை மரம் சேர்ந்தோம்...
நிழல் தேடும் பசு நாடி..... போர் செய்யும் காளையாய்
நெருங்கி வந்தான் மீண்டும் - பார்வையோ
நெஞ்சில் கனல் தூண்டும்

எதைப்பற்றியும் சிலருக்குத் தெரியாது. இவர்கள் பரந்த உலக அனுபவம் இல்லாதவர்கள். இத்தகையவரைக் கிணற்றுத் தவளை என்ற மரபுத் தொடரால் குறிப்பிடுவர். ஒன்றைத் தொடங்கி வை அல்லது ஒரு திட்டத்தை ஆரம்பித்து வை என்பதைச் சுட்டிக்காட்டப் பிள்ளையார் சுழி போடு என்னும் மரபுத் தொடரைப் பயன்படுத்தக் காணலாம். அன்னக்காவடி, ஊசிகுத்த இடம் இல்லை, எட்டாக்கனி, ஓட்டைக் கை, பருப்பு வேகாது, பொய்முகம், முதுகு சொறி, ருசிகண்ட பூனை, வெளுத்து வாங்கு போன்றவை வேறு சில மரபுத் தொடர்கள். இத்தகைய நூற்றுக்கணக்கான மரபுத் தொடர்கள் தமிழில் வழங்குகின்றன.

**தலைவன்** : ஐம்பாற் கூந்தலை அருமையாய் முடித்தீர் அழகு உந்திச் சுழிப்பில் - மழைமுகில் நிழல் விடும் விழிக்கருப்பில்...

**குழு** : கொம்பொன்றை முறித்து நாய்களை அடக்கிக் குழைந்து நின்றான் எதிரில் - பார்வையால் நுழைந்து நின்றான் உயிரில்....

**தலைவன்** : எய்த அம்பு பிழைத்ததால் தப்பிய இளம்புள்ளி மான் ஒன்று வந்ததோ தனது இனம் என்று உங்கள் முன் நின்றதோ?

கை தொழுதே விடை வேண்டி நின்றேன்.

நீங்கள்

கல்லில் வடித்த சிலைகளோ - அமைதி

காப்பதே கற்ற கலைகளோ?

(நொண்டிச் சிந்து)

**குழு** : வேண்டி நின்றான் தலைவன் - அந்த

வேளையில் மாமலைச் சாரலில் ஓர்புறம்

கானவன் கள்வெறியில் - புனக்

காவல் மறந்தே கண்ணயர்ந்தான் - மத

யானை தினைப் புனத்தில் - புகுந்து

அழித்ததால் கானவர் கணையெறிந்தார்

வானம் இடிப்பதுபோல் - முழங்கி

மதயானை எங்கள் முன் பாய்ந்து வர

ஒதுங்க ஓர் இடமுமில்லை - உடல்

உதறிடத் தலைவன் முன் பதறி நின்றோம்

நடுங்கவில்லை தலைவன் - வில்லின்

நாண்வளைத்தான் சரந்தான்

தொடுத்தான்....

அடங்கா மதயானை - முகத்தில்

அம்புதைக்க அதன் வம்படங்கி...

இடத்தையும் விட்டோ - அந்த

இடமோ வெறியாடும் களம்போல....

**தலைவன்** : நடுக்கம் ஏன் மடமயிலே - உன்

நலமெல்லாம் நுகர்கிற தலைவனடி

**குழு** : பாறை, செழும்பாறை - மிளகு

### விருந்தோம்பல்

கண்ணகியை மணந்த கோவலன் சில காலம் அவளுடன் குடும்ப வாழ்க்கை நடத்துகிறான். பின்னர் அவளைப் பிரிந்து சென்று மாதவி என்னும் ஆடல்மகளுடன் பலகாலம் வாழ்க்கை நடத்துகிறான். அவர்களுக்கு மணிமேகலை என்ற குழந்தையும் பிறக்கின்றது. மாதவியிடம் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக அவளைப் பிரிந்து மீண்டும் கண்ணகியிடம் வருகின்றான் கோவலன். மாதவியிடம் வாழ்ந்து தன் செல்வத்தையெல்லாம் இழந்ததற்கு வருந்துகின்றான். கண்ணகியின் காற்சிலம்பை வைத்து இழந்த செல்வத்தை மீட்க எண்ணி அவளையும் அழைத்துக்கொண்டு மதுரை செல்கிறான். மாதரி என்னும் ஆயர்குலப் பெண்ணின் வீட்டில் தங்குகிறான். அங்கு வைத்துக் கோவலனுக்கு உணவு சமைத்துக் கொடுக்கிறாள் கண்ணகி. அந்நேரம் கோவலன் மனவருத்தத்துடன் கண்ணகியைப் பார்த்து நான் உனக்குப்

பழுத்து விழும் பாறை....
பாறையில் சுனை ஊறும் – அதிலே
பழுத்த மாங்கனி வீழும்
வெடித்த பலாப் பழத்தின் – சுளைகள்
மேலும் கிடந்தூறும்
வண்டின் சிறகுதிர்க்கும் – தேன்துளி
குண்டுச் சுனையூறும்
போர்த்தும் இலைமறைவில் – அசையும்
பசுங்கிளியின் தோகை
பார்த்தால் பச்சைத்தண்ணீர் – வாய்
பருகினால் கள்ளுத்தண்ணீர்
அறியாத இளையமயில் – காட்டின்
அழகான புள்ளிமயில்
தெரியாத காரணத்தால் – சுனையின்
தேறலை வாய்மடுக்க
விழாக்கோலம் கொண்டிருக்கும் – ஊரில்
விருந்துகள் நடந்திருக்கும்
கழைக்கூத்துக் களத்தினிலே – விறலி
ஓர் கயிற்றில் நடப்பது போல்...
அழகான புள்ளிமயில் – மது உண்டு
அறியாத இளையமயில்
அதிர்கின்ற வாத்தியங்கள் – கயிற்றில்
அசைகின்றாள் எழில் விறலி
புதிரான மதுவை உண்டு – மயங்கிச் சதிராடும்
புள்ளிமயில்
பாறை செழும்பாறை – மிளகு
பழுத்து விழும் பாறை
உச்சி மலை மீது – பெண்கள்
உதிர்த்த செங்காந்தள் எல்லாம்
கச்சை விரித்தது போல் – தரையில்
காட்சி அளிக்கும் மலை.

பல சிறுமைகள் செய்தேன். ஆனாலும் திரும்பி வந்து உன்னை அழைத்த உடன் எங்கே என்றுகூடக் கேட்காமல் என்னுடன் வந்துவிட்டாயே என்கிறான். அதைக்கேட்ட கண்ணகி, சான்றோர்களுக்குத் தானம் செய்வதற்கும் அந்தணர்களைக் காப்பதற்கும், முற்றும் துறந்த முனிவர்களை வரவேற்பதற்கும், விருந்தினர்களை உபசரிப்பதற்கும் முடியாமல் போயிற்றே என்பதற்காக மட்டுமே தான் வருத்தப் பட்டதாகக் கூறுகிறாள். கணவனுடன் சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்தும் பெண்களே இவ்வாறெல்லாம் செய்வர். பண்டைத் தமிழ் மக்கள் குடும்ப வாழ்க்கையில் எது எதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பது புரிகின்றதல்லவா?

**தலைவன்** : விருந்து பேணிடுவோம் – அவர் உண்டு
மிஞ்சியதை உண்போம்
வருந்த வேண்டாம் மயிலே – நீ என்
வாழ்க்கைத் துணைவி அன்றோ
**குழு** : முருகனை வணங்குகிறான் – தலைவி
முகத்தையும் நோக்குகிறான்.
அருவிநீரை அருந்தி – அதன்மேல்
அழகாய்ச் சூளுரைப்பான்...
தொடுகையில் இசைந்திருந்தாள் – தலைவன்
சூளுரை ஏற்றிருந்தாள்..
நெடுநிழற் சோலையிலே – பகல்
நிகழ்வதை மறந்திருந்தார்
அந்தி நெருங்கியது – பனையில்
அன்றில் கூவியது
வந்தான் தலைவியுடன் – காதல்
மணக்கும் அச்சோலை விட்டு.

**–இன்குலாப்**

**இன்குலாப்**



இவரது இயற்பெயர் சாகுல் ஹமீத். புதுக்கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். முற்போக்குச் சிந்தனையாளர். நாடக எழுத்தாளர். ஔவை நாடகம், குறிஞ்சிக்கூத்து, மணிமேகலை போன்றவை சிறந்த நாடகப் படைப்புகள். இன்குலாப் கவிதைகள் என்னும் பெயரில் இவரது கவிதைகள் வெளியாகியுள்ளன.

## செயல்பாடுகள்

- கூத்துக்கள் நாடகங்களின் வழிகாட்டி. இன்று அவற்றின் நிலையினைக் கட்டுரையாக எழுதுங்கள்.
- கூத்துக்கலைகளில் சிறந்த ஒருவரைப் பேட்டி காண வினாநிரல் தயார் செய்க.
- குறிஞ்சிக்கூத்தினை நாடகமாக்கிப் பள்ளிக்கலை விழாவில் அரங்கேற்றுங்கள்.
- கூத்து வகைகளைப் பட்டியலிடுங்கள்.

## நங்கையர் கூத்து

கேரளத்தின் கோவில் கலையான கூடியாட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய கலைவடிவம் நங்கையர் கூத்து.

கூடியாட்டத்தில் நடிக்கும் பெண்கள் நிகழ்த்தும் நடனம் நங்கையர் கூத்து.

நங்கை என்பது பெண்ணைக்குறிக்கும் சொல். நங்கையர் ஆடும் ஆட்டமே பெண்களின் நடனம் என்னும் பொருளில் நங்கையர் கூத்து என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கூத்தை நம்பியார் இனத்தைச் சேர்ந்த பெண்கள் நடத்துகின்றனர்.

இந்தக் கலைவடிவம் சிலப்பதிகாரத்தோடு நெருங்கிய தொடர்புடையது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதை என்னும் பகுதியில் கூத்தின் பல இலக் கணங்களும் கூறப்பட்டிருக்கின்றன.



மாதவி தனது ஐந்தாம் வயது முதல் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் – பதினொரு வகைக் கூத்துகளையும் கற்றாள் என்றும் தனது பன்னிரண்டாவது வயதில் அரங் கேற்றம் செய்தாள் என்றும் கூறப்படுகிறது.

பதினாறு வகைக் கூத்துகளையும் அவற்றின் வேறுபாடுகளையும் அறிந்தவள் மாதவி. அவளுக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியரும் மிகவும் நுட்பமான கலை உணர்வு உள்ளவர். குரவைக்கூத்தும், வரிக்கூத்தும் ஒன்றுடன் ஒன்று கலவாதவாறு பயிற்சி தருபவர். இதனால் பதினொரு வகையான கூத்துகளை ஒன்றுடன் ஒன்று கலவாதவாறு ஆடும் ஆற்றல் பெற்றவள் மாதவி என்பது தெரிகிறது. இது மட்டுமல்லாமல், அகக்கூத்து, புறக்கூத்து என்னும் இரண்டு வகைக் கூத்துகளையும் அறிந்தவள் மாதவி என்கிறார் இளங்கோவடிகள்,

**"சூழ்கழல் மன்னர்க்குக் காட்டல் வேண்டி**
**இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து**
**பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்**
**பதினோராடலும் பாட்டும் கொட்டும்**
**விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்தாங்கு"** (சிலப்பதிகாரம்)

கூத்தைப் பற்றி மட்டுமன்றிக் கூத்தை அரங்கேற்றும் நாடக அரங்கம் என்ன வடிவத்தில் என்ன அளவில் இருக்க வேண்டும், அதை எப்படி அலங்காரம் செய்ய வேண்டும், திரைச்சீலைகள் எப்படி இருக்க வேண்டும், அங்கே வைக்கப்படும் குத்து விளக்குகள் எப்படி இருக்கவேண்டும் என்றும் விவரித்திருப்பதைப் பார்க்கும்போது இளங்கோ வடிகள் ஒரு சமணத் துறவியா அல்லது ஒப்பற்ற நாடகக் கலைஞரா என்று நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இந்திர விழாவூரெடுத்த காதையிலும், கூத்துக் கலைஞர்கள், அவர்கள் உபயோகித்த இசைக் கருவிகளைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

**"கண்ணு ளாளர் கருவிக் குயிலுவர்**
**பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணரோடு**
**எண்ணருஞ் சிறப்பின் இசைசிறந் தொருபால்**
**முழவுக்கண் துயிலாது முடுக்கரும் வீதியும்"**

கூத்துக் கலைஞர்கள், தோல் கருவிகளை வாசிப்பவர்கள், பாணர்கள் ஆகியோரது இசை ஒரு பக்கத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. இரவு – பகல் என்று வித்தியாசம் இல்லாமல் முழவுகளின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தன என்கிறது சிலப்பதிகாரம். நங்கையர் கூத்தில் வாசிக்கப்படும் மிழாவு என்னும் தோல் வாத்தியமே அன்றைய முழவு.

### மாமாங்கம்



கேரளத்தின் பழங்கால விழாக்களில் மிகவும் முக்கியமான ஒரு விழாதான் மாமாங்கம். கேரள மகா கூட்டம் என்பதன் சுருக்கம் தான் மாமாங்கம் எனக் கூறுவதுண்டு. ஆனால் இவ்வாறு கூறுவதற்கான ஆதாரம் எதுவுமில்லை. இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதாகும். இவ்விழா என்று முதல் கொண்டாடப்பட்டது எனத் தெரிய

வரிக்கூத்தும், குரவைக்கூத்தும் ஒன்றுடன் ஒன்று கலவாதபடி நாட்டியம் ஆடியது போலவே, இன்று நங்கையர் கூத்தை ஆடும் மிகச் சில பெண்கள், அந்தப் பழமையான கலைவடிவத்தில் பிற்காலத்தில் தோன்றிய கதகளி போன்றவற்றின் பாதிப்பு ஏற்படாமல் அதன் தனித்தன்மையைப் போற்றிப் பாதுகாத்து ஆடி

வருகிறார்கள் என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயமல்லவா!

ஆக, நங்கையர் கூத்து 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பது உறுதியாகிறது அல்லவா! நங்கையர் கூத்தில் ஒன்று அல்லது இரண்டு பெண்கள் சமஸ்கிருத ஸ்லோகங்களை நிதானமாக ராகத்துடன் பாடித் தாளம்கொட்ட, அபிநயம் காட்டி, வேண்டிய இடங்களில் காலாலும் அடவுகள் போட்டுக் கதையை, சம்பவங்களைத் தெரிவிப்பார். ஒருவரே எல்லா கதாபாத்திரங்களையும் அபிநயம் மூலம் பிரதிபலிப் பார். இதற்குத் துணையாக மிழாவுகள் (இரண்டு) திமிலை, இடைக்கா என்னும் தோல் வாத்தியக் கருவிகள் இசைக்கப்படும்.

பல சமயங்களில் ஸ்லோகத்தைத் தொடர்ந்து நீண்ட நேரம் தாளங்களின் வேறுபட்ட ஒலிகள் மட்டும் இனிமையாக இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருக்கும்.

இதற்கு ஏற்ப நடனமாடும் நங்கை நின்றோ ஸ்டூலின் மேல் அமர்ந்துகொண்டோ மேடையின் தரையில் அமர்ந்துகொண்டோ அபிநயம், முத்திரைகளைக் காட்டி, முகத்தில் உணர்ச்சிகளைத் தத்ரூபமாக வரவழைத்துப் பார்வையாளர்களை அப்படியே கதை நடக்கும் காலகட்டத்திற்கு அழைத்துச் செல்வார்.

இரவும் பகலும் இடைவிடாது முழவு முழங்கியது என்று சிலப்பதிகாரம் கூறுவதுபோல நங்கையர் கூத்தின் மூலம் ஒரு கதையை முழுவதுமாக நிகழ்த்த - தினசரி நான்கு அல்லது ஐந்து மணி நேரமாக - நாற்பது நாற்பத்தைந்து நாட்கள் ஆகும். எடுத்துக்கொண்ட கதையம்சத்தைப் பொறுத்து நாட்கள் வித்தியாசப்படும். இதனால் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கதையின் ஏதோ ஒரு பாகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சில நாட்கள் நிகழ்த்துவர். கோவில்களில் உள்ள கூத்தம்பலங்களில் ஆடப்பட்டுவரும் அற்புதக் கலை இது, மிகவும் அபூர்வமாகவே நடத்தப்படுகிறது. போதிய ஆதரவு இன்மையால் கொஞ்சம்

வில்லை. ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. திருநாவாய் ஆற்றின் கரையோர மணல்திட்டில் இவ்விழா நடைபெறும். மகரமாதம் (தைமாதம்) பூசம் நாளில் ஆரம்பித்து, கும்பமாதம் (மாசிமாதம்) மகம் நாளில் இவ்விழா நிறைவு பெறும். அதாவது முப்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறும் ஒரு விழா. அரச குடும்பத்தினர் மற்றும் பிரபுக்களின் ஊர்வலம் கண்கவர் காட்சியாக அமையும். மாமாங்கம் விழாவைத் தமிழகத்தில் கும்பகோ ணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் விழாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இரண்டு விழாக்களுமே மாசி மாதத்தில் மகம் நட்சத்திரத்தில்தான் நடைபெறுகின்றன.

கொஞ்சமாக மறைந்துகொண்டு வரும் கலைவடிவம் என்றும் வருத்தத்துடன் சொல்லலாம். பெரும்பாலும் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தில் இருந்து சம்பவங்களை எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கலைவடிவத்திற்கும் குலசேகரவர்மாதான் சிருஷ்டிகர்த்தா. நங்கையர் கூத்தைப் பொறுத்த அளவில் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரங்களுக்குத் தகுந்த உடை அலங்காரமோ முக அலங் காரமோ மாறுபடுவது இல்லை.

ஒருவரே எல்லாருடைய பாத்திரங்களையும் ஏற்று அபிநயத்து நடித்துக் காண்பிப்பதால் ஏறக்குறைய ஒரேவிதமான அலங்காரமே எல்லாக் கதைகளிலும் காணப்படும்.

கூடியாட்டம், கதகளி போன்று ஏற்றுக்கொள்ளும் பாத்திரத்தின் தன்மைக்கு ஏற்ப முகத்தின் நிறம் மாறுபடுவது போல இல்லாமல், நங்கையர் கூத்து நடத்தும் பெண்களின் முக ஒப்பனை, சாதாரணமாக நடனமாடும் கலைஞர்களின் முக ஒப்பனையை ஒத்திருக்கிறது.



பெரும்பாலும் சிவப்பு நிறத்தில் ரவிக்கை, கழுத்தைச் சுற்றி அடர்த்தியாக மணி மாலைகள், கைகளின் மேல்பாகத்தில் வங்கி போன்ற ஆபரணம், காதுகளில் மிகப் பெரிய பொன்னிறத்தோடுகள், இரண்டு பின்னல் ஜடை, அதன்மேல் காகிதப் பூவோ அல்லது வண்ண நூலால் ஆன பூக்களோ சுற்றப் பட்டிருக்கும்.

தலையில் சடாரி போன்ற அமைப்பில் உள்ள சிவப்புத் துணியால் ஆன கிரீடம், அதன் நடுவில் ஒரு சிறிய நாகம், வெள்ளை நிறத்தில் சாதாரண துணியில் கீழாடை, மேலே ஒரு துண்டு இவை தான் எல்லா கதாபாத்திரங்களுக்கும் எல்லாக்கதைகளுக்கும் உள்ள அலங்காரம். இதைத் தவிர கண்களில் இளஞ்சிவப்பு நிறம் காணப்படும். எல்லா நங்கையர் கூத்து மேடையிலும் ஒரு பெரிய குத்துவிளக்கு ஏற்றப்பட்டு, அதன் அருகில் ஒரு வாழை இலையில் அரிசி, பூ, பழங்கள், தேங்காய் நிவேதனமாக வைக்கப்பட்டிருக்

கும். இன்னொரு பக்கத்தில் ஒரு பெரிய மரக்கால்படி போன்ற பித்தளையால் ஆன பாத்திரத்தில் வழிய வழிய நெல் கொட்டப்பட்டு அதன் நடுவே கமுகுப் பூக்கள் செருகப்பட்டிருக்கும்.

வாத்தியக் கருவிகளான மிழாவு ஏறக்குறைய பெரிய நீண்ட வடிவத்தில் உள்ள பானை போன்றிருக்கும். திமிலை என்பது சுமார் இரண்டடி நீளத்தில் உடுக்கை போன்று சற்றுப் பெரியதாக இருக்கும். இடைக்கா என்னும் வாத்தியக் கருவியும் ஏறக்குறைய உடுக்கையின் சற்றுப் பெரிய வடிவம் என்று சொல்லலாம். சுமார் எட்டு அங்குல விட்டத்திலும் ஒரு அடி நீளத்திலும் இருக்கும். இந்த வாத்தியக் கருவி பார்ப்பதற்குச் சற்று விநோதமாக இருக்கும்.

இந்தக் கருவியின் நடுவில் பல வண்ணங்களில் சிறிது சிறிதாக நூலால் ஆன 64 பந்துகள் காணப்படும். இந்த 64 பந்துகள் அறுபத்து நான்கு கலைகளைக் குறிப்பிடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். மிகவும் புனிதமான வாத்தியக் கருவியாக இது கருதப்படுகிறது. இதில் இருந்து வரும் நாதம் மிகவும் இனிமையானது. (கோவில்களில் சோபான சங்கீதம் என்னும் ஒருவகைப் பாட்டு பாடும்போதும் இந்த வாத்தியக்கருவி இசைக்கப்படுகிறது).

பூதனா மோட்சம், கிருஷ்ணலீலா, கம்சவதம் போன்ற கதைகள் நங்கையர் கூத்தில் மிகவும் பிரபலமானவை.

எண்ணிக்கையில் மிகவும் குறைந்த கலைஞர்களே இப்போது இந்த நங்கையர் கூத்தை ஆடி வருகின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் மார்கி சதி, மார்கி உஷா என்பவர்கள்.

இவர்களில் மார்கி சதி ஸ்ரீராமசரிதம் நங்கையாரம்மா கூத்து என்கிற கூத்து நூலை இயற்றியுள்ளார். பலதடவை இதன் சம்பங்களை நடனமாடியும் உள்ளார். இந்தக் கூத்து நூல் இந்தக் கதையை எப்படி நடனமாட வேண்டும் என்பதை விளக்கும் நூல்.

### ஓண நன்னாள்

கேரள மக்கள் கொண்டாடும் விழாக்களில் மிக முக்கியமானது திருவோணத் திருவிழா. இது ஒரு தேசிய விழாவுமாகும். கேரளத்தில் இவ்விழாவைக் கொண்டாடாதவர்கள் இருக்கமாட்டார்கள் என்றே சொல்லலாம். காணம் விற்றும் ஓணம் உண்க என்னும் கூற்று ஓணத்தின் பெருமையைக் கூறும். திருமாலின் அவதாரமாகிய வாமனனையும் கேரள மன்னன் மகாபலியையும் தொடர்புபடுத்தும் ஒரு புராணக்கதை, ஓண விழாவின் தோற்றத் திற்குக் காரணமாகக் கூறப்படு கின்றது. ஆனால் ஓண விழாவைப் பற்றிய ஒரு செய்தி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட சங்க இலக்கியப் பாடலில் இடம்பெறுகின்றது என்பது ஆச்சரியமாக இருக்கலாம். திருமாலுக்கு மதுரையில் ஓணவிழா நிகழ்த்தப் பெற்றதாகவும், அவ்விழாவின் போது மறவர்கள் சேரிப்போர் நிகழ்த்துவதாகவும், யானைகளுக்குப் போர் பயிற்சி அளிப்பதாகவும் மதுரைக்காஞ்சி என்னும் சங்கப்பாட்டில் கூறப் பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் கேரளத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் திருவோணத் திருவிழா கொண்டாடப்பட்டதை இதனால் அறியலாம்.

அண்மையில் இவர் சிலப்பதிகாரப் பாடல்களின் அடிப்படையில் சமஸ்கிருதத்தில் கண்ணகி சரிதம் நங்கையாரம்மா கூத்து என்கிற கூத்து நூலையும் இயற்றி அரங்கேற்றி நிகழ்ச்சிகளும் நடத்தி வருகிறார்.

பலராலும் பாராட்டப்பட்டு வரும் கலைநிகழ்ச்சி இது. இந்தியாவில் பல ஐந்து நட்சத்திர வரவேற்பு அறைகளிலும் மேல்நாடுகளில் இந்தியக் கலாச்சார தூதரகங்களிலும் இந்த நங்கையர் கூத்து கலை வடிவத்தின் படங்களைக் காணலாம். இந்தியாவில் நடக்கும் பல கண்காட்சிகளிலும், வெளிநாடுகளில் நடக்கும் பல கண்காட்சிகளிலும் இதன் படங்களைக் காணலாம்.

கேரளத்தினர்க்கு மட்டுமல்ல; இந்தியருக்கே பெருமை சேர்க்கும் கலை வடிவம் இது. சிலப்பதிகாரத்தோடு மிகவும் சம்பந்தப் பட்டிருப்பதால் நாமும் பெருமையுடன் இந்தக் கலைவடிவத்தைக் கொண்டாடலாம்.

**–கமலநாதன்**

**கமலநாதன்**

இக்கட்டுரையாசிரின் இயற்பெயர் ரவீந்திரன். இந்திய விண்வெளித்துறையில் பணியாற்றியவர். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தவர். பண்பாடு, பயணம் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். திருவனந்தைப்புரத்தைச் சேர்ந்தவர்.



## செயல்பாடுகள்

- மார்கி சதி அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்த எண்ணும் நீங்கள் அவர்களுக்கான பாராட்டுரை ஒன்றைத் தயார்செய்யுங்கள்.
- “பண்பாடும் கலைகளும் மனிதனின் வளர்ச்சிப் பாதையினைப் படிப்படியாகக் காலமாற்றத்தோடு இணைக்கின்றன” என்பதை விளக்கும் குறும்படம் அல்லது ஆவணப்படம் ஒன்றைத் தயார்செய்யுங்கள்.

அலகு 3

# அறிவியல் தமிழ்

“தமிழே! நீ ஒரு பூக்காடு: நானோர் சிறு தும்பி” என்கிறார் கவிஞர் பாரதிதாசன். தமிழெனும் பூக்காட்டுக்குள் பூத்திருக்கும் அறிவியல் பூக்களின் சுவையினை மாணவச் சிறு தும்பிகள் நுகர வேண்டும் என்பதே இவ்வலகின் நோக்கம். வெறும் கற்பனையும் உணர்வின் வெளிப்பாடும் மட்டுமல்ல இலக்கியம். வாழும் காலத்தையும், வரும் காலத்தையும் சிந்தனையால் உணர்ந்தும், ஆராய்ந்தும், தம் உள்ளத்தை வரிகளால் வெளிப்படுத்தும்போது படைப்பாளர்கள் காலத்தால் போற்றி வணங்கும் ஓர் உன்னத நிலையைப் பெறுகின்றனர். பண்டைய மாந்தரின் அறிவியல் ஞானமும், தெளிந்த அறிவும் இன்றைய தலைமுறைக்கும் வழிகாட்டுவதை நாம் காணலாம்.

கால மாற்றத்திற்கேற்பப் படைப்புகள் உருவாகின்றன. உருமாறுகின்றன. ஆனாலும் தமிழ்ச்சுவை குன்றவில்லை. அறிவியல் பாதையோடு இணைந்து அறிவியல் வளர்ச்சியை அறிந்துகொள்ளும் நோக்கமாகப் பழந்தமிழ், இளந்தமிழ், வளர்தமிழ் என்னும் மூன்று பகுதிகள் அறிவாற்றலைப் பெருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- அறிவியல் கருத்தரங்க நிகழ்வுகளில் பங்குபெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- மொழிபெயர்ப்புத்திறன் பெறுகிறார்கள், அறிவியல் படைப்புகளை மொழிபெயர்க்கிறார்கள்.
- இலக்கியங்களில் இடம்பெறும் அறிவியல் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- சமூக மேம்பாட்டிற்காக இணையதளத்தை நன்முறையில் பயன்படுத்துகிறார்கள்.



## இலக்கியமும் அறிவியலும்

பண்டைய இலக்கியங்கள் ஏராளமான அறிவியல் தகவல்களைத் தருகின்ற அமுதசுரபிகளாகவும், வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றன. அறிவியலை மொழியிலிருந்தும் இலக்கியத்தி லிருந்தும் அன்னியப்படுத்தி, அதைத் தனித்துறையாகப் பிரித்துக் காட்டிவிட்டு வாழ்வியலைக் காணுவது சிறப்பன்று. ஏனெனில் மானுட வாழ்க்கையை மேம்பாடு அடையச் செய்யும் ஊடகம் அறிவியலாகும்.

உள்ளதை உள்ளபடி அறிவதும் அறிவிப்பதும் அறிவியல் ஆகும். பலவிதமான சோதனைகளுக்கும் சாதனைகளுக்கும் உட்படுத் தப்பட்ட பின்னரே அறிவியல் உண்மைகளும் முடிவுகளும் அறிவிக்கப்படுகின்றன, ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. முடிவெடுக்

கப்பட்ட அறிவியல் உண்மைகள் வேறோர் உண்மையால் மறுக்கப்படும் வரையில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளாகவே நிலவுகின்றன. ஆனால் அறிவு வேறு; அறிதல் வேறு; உணர்தல் வேறு. இலக்கியம் உணர்ச்சி வழியாகக் காணும் காட்சிகளுக்கும் கலைவடிவம் தருவதாகும். இலக்கியத்தில் அறிவியலை இணைத்துப் பார்க்கும் அணுகுமுறை இன்று தோன்றியதன்று. மனிதனுக்கு இயற்கையில் ஏற்பட்ட ஈடுபாட்டின் விளைவாக என்றைக்கு, ஏன்? எப்படி? எதற்கு? என்று வினாத்தொடுக்கத் தொடங்கினானோ அன்றைக்கே அவனிடம் அறிவியல் தோற்றம் கண்டுவிட்டது எனலாம்.

### உயிரினப் பாகுபாடு

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர்
நெறிப்படுத்தினரே.

**தொல்காப்பியம்**

### அறிவியல் நோக்கு

ஒரு பொருளை அப்படியே நம்பிவிடாமல் அப்பொருளின் தன்மையைக் காரண காரிய அடிப்படையில் ஆராய்ந்து உண்மை தெளிவது அறிவியல் நோக்காகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய திருவள்ளுவரும் இதன் அடிப்படையிலேயே,

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள். 355)**

என்று அறிவியல் நோக்கைத் தெளிவாக்குகின்றார். மனித வாழ்க்கையில் அறிவியலையும் கலைகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் வாழ்க்கையே ஒன்றுமில்லை என்பது போலத் தோன்றும். கலைகளும் இலக்கியங்களும் வாழ்வியலை எளிமைப்படுத்தியும், இனிமைப்படுத்தியும் வாழ்விப்பவையாகும். ஆனால் அறிவியல் மனிதனுக்கு வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பதாகும். இலக்கியத்தையும் அறிவியலையும் தொடர்புபடுத்திக் காணும் அணுகுமுறை வளர்ச்சியின் பயனாக இலக்கியப் படைப்பாளிகள் அறிவியல் அறிஞர்களாகவும்

திகழ்ந்துள்ளனர். உயிர்களின் பரிணாம வளர்ச்சியை அறிவியல் கண்ணோட்டத்துடன் நோக்கும் தொல்காப்பியர் தொடங்கி, சங்க இலக்கியப் புலவர்களும் அகமாயினும் புறமாயினும் அவற்றி னூடே அறிவியல் விதையைத் தூவியுள்ளனர். வளவன் ஏவா வானவூர்தியையும், கோள்களின் இயக்கத்தையும் காட்டும் புறமும், அண்டங்களைப் பற்றிப் பேசும் பதிற்றுப்பத்தும், வானசாத்திர அறிவினை வெளிப்படுத்திக் காட்டும் நெடுநல்வாடையும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. நீதி இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங் களிலும் காப்பிய இலக்கியங்களிலும் பல்வேறு இடங்களில் அறிவியல் கருத்துகள் பதிவு செயப்பட்டுள்ளன. இக்கால இலக்கியமாகிய கவிதையிலும் புதியன படைக்கும் நோக்கோடு அறிவியல் பாடுபொருளாக்கப்பட்டுள்ளது.

**வானவியல் சிந்தனைகள்**

பஞ்சபூதங்களில் ஒன்றாகவும், மற்ற அனைத்து உயிர்களின் தோற்றத்திற்கு அடிப்படையாகவும் திகழும் அகண்ட வானவெளியைப் பற்றிய சிந்தனைகள் வானைப் போன்றே பரந்து விரிந்துள்ளன. வெட்டவெளியும் அதனுள் அடங்கியிருக்கும் அண்டங்கள் யாவும் சேர்ந்ததுதான் இப்பிரபஞ்சம். கோடிக்காணக்கான விண்மீன் மண்டலங்கள் அவற்றினின்று விடுபட்ட தனித்தனி மண்டலங்கள் வால்மீன்கள் எரிமீன்கள் எண்ணற்றவை அதில் சுழன்று கொண்டிருக்கின்றன.

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன**
**இன்னுழை கதிரின் துன்னணுப் புரைய**
**(திருவாசகம், திருவண்டப்பகுதி 1–5)**

என்ற வரிகளில் அண்டத்தின் அகண்ட பெரு வெளிக்காட்சியை மாணிக்கவாசகர் காட்டுகிறார். ஒவ்வொரு அண்டமும் சுழன்றுகொண்டிருப் பதுடன் அவ்வண்டத்தில் உள்ள பொருள்களும் உருமாறி வட்டங்களாகச் சுழன்று கொண்டிருக்கின் றன. அந்த அண்டங்களை முழுமையாக அறிந்த வரில்லை. அறிதொறும் அறியாமையின் பலவாகத் தோற்றமளிக்கின்றது. இதனைப் பாரதியாரும்,

**முக்கூடற் பள்ளு**

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாள மின்னல் ஈழ மின்னல்

சூழ மின்னுதே
நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே.

சேற்று நண்டு சேற்றைக் குழைத்
தேற்றடைக் குதே - மழை
தேடியொரு கோடி வானம்
பாடி யாடுதே

போற்றி திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமோ.

**நக்க பிரானருளால் - இங்கு**
**நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்**
**தொக்கன அண்டங்கள் - வளர்**
**தொகைபல கோடிபல கோடிகளாம்**
**இக்கணக் கெவரறிவார் - புவி**
**எத்தனை உளதென்ப தியாரறிவார்**
**(தோத்திரப் பாடல்கள் - 4)**

என்ற வரிகளில் பேரண்டங்களின் எண்ணிக்கைக்கு எல்லையில்லை என்பதையும், ஆழ்கடலின் அகத்தே இடையிடையே தென்படுகின்ற புன்குமிழ்கள் போல் இவ்வுலகங்கள் உள்ளதாகவும், மிக்க வியப்புடையதாக உள்ள இவ்வையகத்தின் வனப்புமிகு காட்சியைச் சுட்டுகின்றார்

**ஐம்பெரும் பூதங்கள்**

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல

**புறநானூறு : 2: 1-6**

**இடையின்றி அணுக்களெலாம் சுழலும்என**
**இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்**
**இடையின்றிக் கதிர்களெலாம் சுழலும்என**
**வானூலார் இயம்பு கின்றார்**

என்னும் பாஞ்சாலி சபதப் பாடல் வரிகளில் அணுக்களின் சுழற்சியைப் பற்றியும், காணும் பொருள்கள் அனைத்தும் அணுத்திரளேயன்றி வேறில்லை என்ற கருத்தும் பாரதியின் வானவியல் அறிவினைப் புலப்படுத்துகின்றன. தொழில் முறைகளுக்குத் துணைபுரிவதற்கென்றே விஞ்ஞானம் ஏற்பட்டது. மழை, அரிசி, பழம் முதலியவற்றை விஞ்ஞானத்தால் உண்டு பண்ணும்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இக்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சிமீது கவலை செலுத்தாதிருப்பது தவறு; கிராமம் விஞ்ஞானமயமாதல் வேண்டும் என்று விஞ்ஞானத்தின் தேவையை திரு.வி.க எடுத்துரைக்கின்றார். நாட்டின் முன்னேற்றத்திற்கும், தொழில்நுட்பத் திறனை வளர்த்துக்கொள்வதற்கும், அதன்வழியாக வறுமையை விரட்டியடிக்கவும் விஞ்ஞான வளர்ச்சியைத் தவிர வேறொன்றில்லை என்னும் அவருடைய சிந்தனை,

**சிந்தனை செய்க சிந்தனை செய்க**
**அணுவை ஆய்க மலையை ஆய்க**
**அண்ட பிண்டம் அனைத்தையும் ஆய்க**
**ஆழ்ந்தே ஆழ்ந்தே ஆய்ந்து தொய்க**
**பிரியும் உறையும் மறையும் பொருள்கள் அழிவதில்லை**

என்ற வரிகளில் விளக்கம் பெறுகின்றது.

### வானவில் தத்துவம்

சூரியனின் ஒளிக்கதிர்கள் மழைமேகத்தின் உள் நுழைந்தால் வானவில் தோன்றும் என்பது வானவில் தத்துவம். வானவில் சூரியன் இருக்கின்ற திசைக்கு எதிர்த்திசையில் தோன்றும் என்பதையும், அந்த வானவில்லில் பல வண்ணங்கள் காட்சிதரும் என்பதையும்,

**விடுசுடரான் கதிர் வீழ்புயன்மேல் விழுந்தால்**
**தனுவாம் (வில்) அதன் தத்துவமே**

என்ற தனிப்பாடலில் தெளிவாக்குகின்றார் ஔவையார். இயற்கையில் தன்னை மறந்து இயற்கையாவே மாறிப்போன கவியுள்ளம் கொண்ட பாவேந்தரும் வானவில் தத்துவத்தை,



**முதிர்ந்திட்ட முகிலின்சோறு மூடிற்று சேற்றுக்குள்ளே**
**புதைந்திட்ட கதிரிற் பூத்த புதுப்புது வண்ணமெல்லாம்**
**ததும்பிற்றே வானவில்லைப் பாரடி அழகின் தன்மை**
**(அழகின் சிரிப்பு - வானம்)**

என்ற பாடலில் சுட்டுகின்றார்.

கவிதைகள் என்பவை வார்த்தைகளால் செதுக்கப்படுபவையல்ல; உள்ளத்தின் உணர்வுகளால் நெய்யப்படுபவை. கற்பனை மட்டும் கவிதைபிறக்கக் காரணமாவதில்லை, உண்மைகளும் கவிஞர்களின் உள்ளங்களில் உலா வருகின்றன. ஆகாயத்தை நோக்கித் தன் சிறகுகளைப் பறக்க விரிக்காமல் வாழும் மண்ணின் இயல்பில் புரள்வதும் கவிஞர்களின் இயல்பாகின்றது.

அதனால் தான் இலக்கியங்களின் விரிந்த வானில் பயணிப்பது புதுப்புது அனுபவங்களால் சிலிர்ப்பூட்டுகிறது. ஏது இல்லை எம் தமிழில் என்பதற்கிணங்க அறிவியல் சிந்தனைகளும் சிறகடிக்கின்றன.

**- க. முருகேசன்**

**க. முருகேசன்**
சிறந்த பேச்சாளர், சிந்தனையாளர். பல்வேறு கட்டுரைகளின் ஆசிரியர். கோவை கொங்குநாடு அறிவியல் கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார், 'இலக்கியச்சாரலில் அறிவியல் துளிகள்'என்னும் கட்டுரைத் தொகுப்பிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.



### செயல்பாடுகள்

- 'இலக்கியங்கள் பேசும் அறிவியல்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.
- இலக்கியங்களில் மேலோங்கி நிற்பது அழகுணர்ச்சியே! 'அறிவியல் உண்மையே!' என்னும் தலைப்பில் ஏதேனும் ஒன்றிற்கான பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

# நெடுநல்வாடை

## கூதிர்காலம்

### கோவலர் வாடையால் துன்புறுதல்



வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்,
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி,
புலம்பெயர் புலம்பொடு கலங்கி, கோடல்

நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,
மெய்கொள் பெரும்பனி நலிய, பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

### கூதிர்கால நிலை

மா மேயல் மறப்ப, மந்தி கூர
பறவை படிவன வீழ, கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி,
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்

**-மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

நெடுநல்வாடை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இதனைப் பாடியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். 188 அடிகளைக் கொண்ட இந்நூல் ஓர் அகப்பாடலாகவே கருதப்படுகிறது. எனினும் வேப்பம்பூ பற்றிய ஒரு குறிப்பு வருவதால் அது பாண்டியனைக் குறிக்கும் என்ற நிலையில் புறப்பாடலாகவும் கூறுவர்.

### செயல்பாடுகள்

- பண்டைய இலக்கியங்களில் வெளிப்படும் அறிவியல் சிந்தனைகளை இன்றைய அறிவியல் வளர்ச்சியுடன் ஒப்பிட்டுக் குறிப்பெழுதுங்கள்.
- நெடுநல்வாடைப் பாடலில் அமைந்த பொருள்நயத்தைப் பாராட்டி எழுதுங்கள்.
- மழைக்காலக் காட்சிகளை வருணித்துக் கவிதை ஒன்று எழுதுங்கள்.



## வலைக்குள் வலை

அழகான இரட்டைப் படுக்கையறை கொண்ட வீடு.

அறைச்சுவர் முழுவதும் அலங்கார ஓவியங்கள்.

ஏசி இயந்திரம் ஹம்மிங் தொடர, தனது மல்ட்டி மீடியா கம்ப்யூட்டரின் முன் அமர்ந்திருந்தான் சரண். வயது 27 பி.ஈ எலக்ட்ரானிக்ஸூம் எம்பிஏயும் முடித்தவன். கனத்த உயரமானவன். சரிந்த மூக்கு கண்ணாடி.

சில வாரங்களுக்கு முன்தான் அப்பாவிடம் அடம்பிடித்தான் சரண்- மல்ட்டி மீடியா கம்ப்யூட்டர் வேண்டுமென்று.

அப்பா உடன்பட்டார்.

மோடம், இன்டர்நெட் தொடர்புக்கு உதவும் ஸாஃப்ட்வேர், மற்ற சாதனங்களுடன் படுக்கையறையில் நிறுவிக்கொடுத்தார்.

டின் கோக் குடித்தபடி கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தான் சரண்.

இன்டர்நெட் தேசத்தின் குடியுரிமை பெற்றான். பார்வையைத் திரையில் மேயவிட்டான்.

யாரோ ஆசியப் பேர்வழி வேலை வாய்ப்புக்காகத் தனது பயோடேட்டாவை உலவவிட்டிருந்தான்.

பத்து நிமிடங்கள் மேய்ந்த பிறகு -

மானிட்டரில் மனித இதயம் கம்ப்யூட்டர் அனிமேஷனாத் தெரிந்தது.

பரபரத்தான் சரண்

சில நொடிகள் கழித்து ஒரு ஈ-மெயில் ஓடியது.

முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான மின்னஞ்சல் இது.

நான் ஒரு அமெரிக்க நங்கை. வயது 24. பிரம்மச்சாரிணி. மருத்துவம் படித்த தன்னந்தனியள். ஐஸக் அஸிமோவ் கதைகள் பற்றி விவாதிக்க-ஷெரோன் ஸ்டோனின் கவர்ச்சி அம்சங்களை அலச, செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் இருந்திருக்குமோ என்று ஆய்வு செய்ய ஆண் நண்பர்கள் தேவை.

துள்ளிக் குதித்தான் சரண்.

தனது நெட் முகவரியுடன் பயோடேட்டாவை ஒப்பித்தான்.

“நான் உங்கள் நெட் நண்பனாக விரும்புகிறேன்”

“ஓ! இந்திய இளைஞனா! எனக்கு மிகவும் ஆதர்சமானவர்கள் இந்திய இளைஞர்கள்தான்.”

### ஹோலோகிராம்



முப்பரிமாண உருவ வரைவுகளை உருவாக்கும் ஒரு தொழில் நுட்பமே ஹோலோகிராம். தமிழில் இதனை வெற்றிடவரைவு எனக்கூறலாம். லேசர் கதிரியக்கத்தின் வழி ஒரு உருவத்தின் பல்வேறு பதிவுகளைப் பல இடங்களில் இதனால் உருவாக்கிக் காட்ட இயலும். உண்மையான உருவத் தோற்ற உணர்வைத் தரும். பல துறைகளில் இத்தொழில்நுட்பம் பயன்பட்டுவருகிறது.

"நன்றி உங்கள் பெயர் என்ன?"

"என் பெயர் ஜோயா..."

"இசைநயமான பெயர்!"

"நம் நட்பு தொடர சில நிபந்தனைகள்"

"என்னென்ன?"

"நாம் இருவரும் நேரில் எப்போதுமே சந்தித்துக்கொள்ளக் கூடாது."

"அற்புதமான யோசனை"

"நம் நட்பைக் காதலாக்க ஒருபோதும் முயற்சி செய்யாதீர்கள்!"

"சரி ஜோயா, அடுத்த நிபந்தனை?"

"தினம் ஒருமுறைதான் நாம் நெட் மூலம் சந்தித்துக் கொள்ள வேண்டும்!"

"ஓ.கே எப்போது?"

"தினம் இந்திய நேரப்படி இரவு 11 மணிக்கு!"

"சம்மதம்!"

"என்னைச் சந்திக்க முயன்றாலோ, என் ஸெர்வருடன் தொடர்பு கொண்டு தபால் முகவரி அறிய முயன்றாலோ நம் நட்பு முறியும். ஜாக்கிரதை!"

"சத்தியமாக அந்தத் தவறைச் செய்ய மாட்டேன்!"

"நல்ல இளைஞன் நீ. நாளை இரவு நெட் தேசத்தில் சந்திப்போம். நல்ல கனவுகளுடன் தூக்கம் கொள்!" தகவல் தொடர்பு அறுந்தது.

குதூகலித்தான் சரண்.

ஜோயா!

என்ன சங்கீதமான பெயர்?

அமெரிக்கப் பெண்ணே? பார்த்துக் கொண்டே இரு! நம் நட்பு காதலாய் கனியப் போகிறது!

தூக்கத்தில் கனவுகள்... கனவுகள்!

அத்தனையும் ஒரு பெண் ஜோயா!

மறுநாள் இரவிலிருந்து சரண் ஜோயாவின் நெட் தொடர்பு தொடர்ந்து.

"ஜோயா! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?"

## வல்லினம் மிகுதலும் மிகாமையும்

ஒரு சொல்லை அடுத்து க, ச, த, ப ஆகிய வல்லெழுத்துகளில் ஏதேனும் ஒரு வல்லெழுத்தை முதன்மையாகக் கொண்ட இன்னொரு சொல் வரும்போது அவற்றின் இடையே அவ் வல்லெழுத்தின் ஒற்று (மெய்) மிகுந்தோ மிகாமலோ வரலாம். இவ்வாறு மிகவேண்டிய இடத்தில் மிகாமலும் , மிகக் கூடாத இடத்தில் மிகுந்தும் வந்தால் பொருள் மாறுபட்டுவிடும்.

கத்தி, கொண்டுசென்றான் என்னும் சொல்லும் சொற்றொடரும் இணையும் போது 'கத்திக்கொண்டு சென்றான்' என வல்லின ஒற்று மிகுந்தும், 'கத்தி கொண்டு சென்றான்' என வல்லின ஒற்று மிகாமலும் வரலாம். ஒற்று மிகுந்தால் அவன் அலறிக்கொண்டு சென்றான் எனப் பொருள்படும். ஒற்று மிகாமல் வந்தால் அவன் கத்தியை கொண்டு சென்றான் என இன்னொரு பொருளைத் தரும். எனவே எங்கெங்கு வல்லின ஒற்றுமிகும், எங்கெங்கு மிகாது என்பதில் கவனம் தேவை.

“என்ன?”

“ஒரு கவிதை கூறுகிறேன். கேட்கிறாயா?”

“எனக்கு கலீல் கிப்ரான்தான் பிடிக்கும். இருந்தாலும் சொல். நன்றாக இருந்தால் பாராட்டுகிறேன்.”

முதல் நாள் படித்திருந்த புதுக்கவிதை ஒன்றைச் சொன்னான்.

“கவிதை அற்புதம் சரண். வாழ்த்துகள். பதிலுக்கு நான் ஒரு கவிதை சொல்லட்டுமா?”

“ஓ!”

மந்திரவாதி/ மூடிய கைகளுக்குள் / பூனை / கை திறந்து/ கூட்டத்துக்குக் காட்டினார் / முயல் /ஏமாற்று வித்தையில் மயங்காதே/ காதலொரு பொய்!

தொடர்ந்து ஆறுமாதம் நெட் நட்பு தொடர்ந்து. நட்பு காதலானது.

“தயவு செய்து உன் நிபந்தனைகளைத் தளர்த்து!”

“எப்படி?”

“ஒரே ஒருமுறை நாம் சந்தித்துக் கொண்டால் என்ன?”

“வேண்டாம் காதலனே!”

‘‘சரி. பரஸ்பரம் டிஜிட்டல் புகைப்படங்களை அனுப்பிக் கொள்வோம்!”

“வேண்டாம். த்ரில் போய்விடும்!”

“நெட் தொலைபேசியிலாவது பேசிக் கொள்வோமே!”

“ஒப்புக்கொள்ளமாட்டேன்”

தளர்ந்து சரிந்தான் சரண்.

பலத்த யோசனைக்குப் பிறகு ஒரு வழி தென்பட்டது.

அடுத்த ஒரு வாரம் ஒரு கைதேர்ந்த டிடெக்டிவ் போல் செயல்பட்டான் சரண்.

இந்திய ஸெர்வர் மூலம் - ஜோயாவின் ஈ-மெயில், ஸான் பிரான்ஸிஸ்கோ ஸெர்வர் வழி உலகம் முழுவதும் பரப்பப்படுவதை அறிந்தான். ஸான்பிரான்ஸிஸ்கோவுடன் தொடர்பு கொண்டு தபால் முகவரி பெற்றான். பரபரத்தான்.

அடுத்த வாரம் அமெரிக்காவில் இறங்கினான் சரண்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

1. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அந்த + தோட்டம் = அந்தத் தோட்டம்
இந்த + பெண் = இந்தப் பெண்
எந்த + பையன் = எந்தப் பையன்
அப்படி + செய்தான் = அப்படிச் செய்தான்
இப்படி + சொல் = இப்படிச் சொல்
எப்படி + பார்ப்பாய் = எப்படிப் பார்ப்பாய்

பலமணி நேர கார் பயணத்துக்குப் பின் கென்னடி அவின்யூ அடைந்தான்.

குறிப்பிட்ட முகவரியில்

அழகிய பூந்தோட்டம் சூழ்ந்த பங்களா இருந்தது.

ஆர்க்கிட் பூக்களால் ஆன பொக்கேயை இடதுகையில் வைத்துக் கொண்டு அழைப்பு மணியை அமுக்கினான் சரண்,

மனதில் ஹாங்காங் விடுதலை பெற்ற வாணவேடிக்கை.

கதவு திறந்தது.

ஒருவேளை ஜோயா திருமணமானவளோ?

"நான் ஜோயாவின் நெட் நண்பன். இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன். என் பெயர் சரண்"

"மன்னிக்க வேண்டும் இங்கு ஜோயா என்று யாரும் இல்லை."

"உங்கள் வெப் முகவரி.... தானே?"

"ஆமாம். ஆனால் ஜோயா என்று இங்கு யாரும் இல்லை. பாவம் வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். சந்தேகம் என்றால் உள்ளே வந்து பாருங்கள். நிச்சயம் நான் ஜோயா என்ற பெயரில் உங்களை ஏமாற்றவில்லை. என் இன்டர்நெட் தொடர்பு மூலம் வேறு யாரும் உங்களை ஏமாற்ற சாத்தியமில்லை!"

தளர்ந்து போனான் சரண். வீடு முழுவதும் துழாவினான். கடைசி அறைக்குள் எட்டினான்.

ஒரு சிம்பன்ஸி கம்ப்யூட்டர் நோக்கி நடந்ததைக் கண்டான்.

"அது என் வளர்ப்புக் குரங்கு. அதற்குப் பேசத்தான் தெரியாதே தவிர ஒரு படித்த மனிதனுக்குரிய அனைத்து அறிவுகளும் உண்டு!"

சட்டென்று பேன்ட் பாக்கெட்டிலிருந்து இந்திய நேரம் ஓடும் கடிகாரத்தை எடுத்தான் சரண்.

2. இரண்டாம் வேற்றுமையின் உருபாகிய ஐ இன் முன்பும், நான்காம் வேற்றுமை விரியாகிய கு இன் முன்பும் வல்லினம் மிகும்.

பொருளை + தேடினான் = பொருளைத் தேடினான்

புத்தகத்தை + படித்தான் = புத்தகத்தைப் படித்தான்

இங்கு இரண்டாம் வேற்றுமை விரியின் முன் வல்லினம் மிகுந்துள்ளது.

ஊருக்கு + சென்றான் = ஊருக்குச் சென்றான்

தோழனுக்கு + கொடு = தோழனுக்குக் கொடு

இவற்றில் நான்காம் வேற்றுமை விரியின் முன் வல்லினம் மிகுந்துள்ளது.

நேரம் இரவு 11 மணி

குரங்கு கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து இயக்கியது.

நான் ஜோயா. நீ இங்கு நலம். நான் அங்கு நலமா?

சரணுடன் சேர்ந்து அமெரிக்கனும் அதிர்ந்தான்.

“இதெல்லாம் உன் வேலையா பாங்கி? பார், உன் விளையாட்டால் என்ன நடந்திருக்கிறதென்று? உன்னை ஜோயா என்று நம்பி காதலித்து ஓடி வந்திருக்கிறார்!”



சிம்பன்ஸி சரணை இரக்கமாய்ப் பார்த்தது. பின்னர் கம்ப்யூட்டரில் மடமடவென்று தட்டி, அவுட்புட்டை எடுத்து நீட்டியது.

மன்னிக்கவும் / மந்திரவாதி / மூடிய கைகளை / திறந்து காட்டினார் / காதல் இல்லை / விஞ்ஞானக் குறும்பு.

சரண் மௌனமாய் அழுதான்.

பொக்கையை வீசினான்.

தோளில் தட்டிக் கொடுத்த அமெரிக்கனை உதாசீனப்படுத்தியபடி வாசலுக்கு நடந்தான்.

அழைப்பு மணி சிணுங்கியது.

சரணும் அமெரிக்கனும் வெளியே எட்ட - பொக்கேயுடன் ஒரு ஆப்பிரிக்கன்!

என் பெயர் மாரிஸ் ஓடும்போ. ஜோயாவின் காதலன். தயவு செய்து அவளைச் சந்திக்க அனுமதியுங்கள் என்றான் வந்தவன்.

தன் சோகத்திலும் சிரித்தான் சரண். அமெரிக்கனும்.

புரியாமல் ஆப்பிரிக்கனும் சேர்ந்து சிரித்தான்.

**–ஆர்னிகா நாசர்**

**ஆர்னிகா நாசர்**



அறிவியல் எழுத்தாளரான இவரது கதைகளில் அறிவியல் சிந்தனைகள் மேலோங்கி நிற்கும். அறிவியல் சிறுகதைகள் என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது இக்கதை. சும்மா கிடப்பதே மேல், யாராலும் முடியும் தம்பி, மீனங்காடி எனப் பல நூல்கள் எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- “வலைக்குள் வலை” என்னும் தலைப்பு கதைக்கு மிகப் பொருத்தமே –இக்கருத்தினை விமரிசனக் குறிப்பாக எழுதுங்கள்.
- இக்கதை உணர்த்துவதைப் போன்ற வலைத்தள ஆபத்துகளை நிகழ்வுக் குறிப்பாக எழுதுங்கள்.
- இணையதளம் தரும் நன்மைகளையும் தீமைகளையும் பட்டியலிடுங்கள்.

# வானிலையைத் தெரிவிக்கும் விலங்குகள்

துருக்மினீயாவிலெ அஷ்காபாத்துன்னு ஒரு நகரத்திலே ஒரு புவி இயல் விஞ்ஞானி இருந்தாரு.

அவரு ஒரு நாய்க்குட்டி வளர்த்தாரு!

ஒரு நாள் முன் இரவு நேரம்! ஒரு மேஜைக்கு முன்னாடி உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டுகிட்டு இருந்தாரு.

அவருக்கு ஒரு சின்ன பெண் குழந்தை.

அது தொட்டில்லே தூங்கிக்கிட்டு இருந்தது.

அந்த நாய்க்குட்டியும் ஒரு மூலையிலே படுத்துத் தூங்கிட்டு இருந்தது! ஒரே அமைதி- அந்த நேரத்திலே திடீர்ன்னு அந்த நாய்க்குட்டி துள்ளி எழுந்திரிச்சிது. நேரா அந்த குழந்தைகிட்டே ஓடிச்சு!

அந்த குழந்தையை அது போட்டிருந்த டிரஸ்ஸோட சேர்த்து கவ்வி தூக்கிச்சு! தூக்கிக்கிட்டு வாசல் பக்கம் ஓடிச்சு!

நாய்க்குட்டி குழந்தையைக் கவ்வித் தூக்க முடியுமாங்கற சந்தேகம் உங்களுக்கு! இல்லையா?

நீங்க நம்ம ஊர் நாய்க்குட்டியையே பாத்துப் பாத்துப் பழகீட்டிங்க! அதனாலே நம்பறதுக்கே சிரமப்படறீங்க!

அந்த ஊர்லேயெல்லாம் அது ரொம்ப வலிமையாக இருக்கும்.

விஞ்ஞானி அதைப் பாத்துட்டாரு... உடனே... அந்த நாய்க்கு வெறி புடிச்சுட்டுதுன்னு முடிவு பண்ணிட்டாரு... தன்னோட கைத்துப்பாக்கியை எடுத்துக்கிட்டு ஓடி வந்தாரு... அவரு வெளியே வந்து நாய்க்குட்டி எங்கேன்னு தேடுறாரு....

அந்த நேரத்திலே அந்த வீடு இடிஞ்சி விழுது!

காரணம்! பூமி அதிர்ச்சி!

இப்படி பூமி அதிர்ச்சி உண்டாகப் போகுதுங்கறது அந்த நாய்க்குட்டிக்கு முன்னாடியே தெரிஞ்சு போச்சு! அதுதான் குழந்தையைத் தூக்கிக்கிட்டு வெளியே ஓடி வந்திருக்கு! அது மூலமா அந்த குடும்பத்தையே காப்பாத்தியிருக்கு!



இந்தச் சம்பவம் நடக்கறதுக்கு மூணு நாளைக்கு முன்னாடியே சில பிராணிகளுக்கு இப்படி நடக்கப் போவுதுங்கறது தெரிஞ்சிருக்கு... ஆமாம்!

அந்த நகரத்திலே மூணு நாளைக்கு முன்னாடியே பாம்பு- பல்லி- இதெல்லாம் அது தங்கியிருந்த வளையை விட்டுவெளியே ஓடிவந்துட்டுது!

அதே மாதிரி அங்கேயிருந்த புறா எல்லாம் பறந்து போயிடிச்சாம்! அதே போல... யுகோஸ்லேவியாவிலே ஒரு நகரம்.



அங்கே ஒரு நாள் ராத்திரி.

ஒரு மிருகக்காட்சிசாலையிலே திடீர்ன்னு ஒரு பெரிய கலவரம் – கூச்சல் – குழப்பம்.

அங்கேயிருந்த கழுதை, புலி, – யானை – பறவை எல்லாம் கன்னாபின்னான்னு கத்த ஆரம்பிச்சுட்டுது.

நீர் யானை அதுக்குன்னு போட்டிருந்த தடுப்பையே தாண்டி குதிச்சு வெளியே வந்துட்டுது!

மறுநாள் தான் எல்லாருக்கும் விஷயம் புரிஞ்சிது

அடுத்த நாள் காலையிலே அங்கே பூமி அதிர்ச்சி உண்டாயிட்டுது! இப்ப என்ன நினைக்கிறீங்க?

மனுஷனைப் போயி தீர்க்கதரிசி – அது – இதுன்னு சொல்லிக்கிட்டிருக்கீங்களே!

இவனைவிட அது பரவாயில்லேன்னு தோணுதா? அது சரி.....

இதையெல்லாம் அது எப்படி முன்கூட்டியே புரிஞ்சிக்குது! அதுதான் படைப்பு ரகசியம்....

அதைக் கண்டுபிடிக்கிறதுக்குத்தான் மனுஷன் ஆராய்ச்சிபண்ணிக்கிட்டிருக்கான்!

விஞ்ஞானிகளோட ஆராய்ச்சியெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்! வீட்டுக்குள்ளேயே சில ஆராய்ச்சி பண்ணிப் பாருங்களேன்.

இப்ப நான் சிலதைச் சொல்றேன். அதையெல்லாம் சோதனை பண்ணிப் பாருங்களேன்.

இப்ப மழை வருமா வராதான்னு தெரிஞ்சிக்கணுமா?

உடனே ஒரு பூனைக்குட்டி பின்னாடியே மெதுவா போயி அது என்ன செய்யிதுன்னு! கவனிங்க.

பூனைக்குட்டி தன்னோட பாதத்தினாலே சுவத்திலே கீறிக்கிட்டிருக்கும். அப்படி கீறினா கண்டிப்பா மழைவரும்!

சிலசமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக்கிட்டு பாதத்தை உயரே தூக்கும்! அப்படியும் – இப்படியும் புரளும். இப்படி

3. ஆய், போய் என்னும் வினையெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.

   படிப்பதாய் + சொன்னான் = படிப்பதாய்ச் சொன்னான்

   போய் + சேர்ந்தான் = போய்ச் சேர்ந்தான்

4. சால, தவ என்னும் உரிச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

   சால + பேசினான் = சாலப் பேசினான்

   தவ + சிறிது = தவச் சிறிது

செஞ்சுதுன்னா அன்னைக்கு மழை இருக்காது.

பறவைகள் - பிராணிகள் இதுகளோட நடவடிக்கைகளைப் பார்த்துட்டு அதையெல்லாம் அடிப்படையாக வச்சுத்தான் காலநிலையைக் கண்டுபிடிக்கிற கருவிகளைக் கண்டு பிடிச்சிருக்காங்க!

வாத்து இருக்கில்லே. சிலசமயம் தன்னோட அலகைத் தன்னோட இறகுகள்லே புதைச்சிக்கும். அப்படிச் செஞ்சா குளிர்காலம் வரப்போவுதுன்னு அர்த்தம்.

பருவநிலை குளிரா மாறப்போவுதுங்கறதுக்கு இதுதான் அறிகுறி.

சிட்டுக்குருவி இருக்கில்லே. அதெல்லாம் புழுதியிலே விழுந்து புரளும். சிறகுகளைப் படபடன்னு அடிச்சிக்கும். அப்படிச் செஞ்சா மழை வரப்போவுதுன்னு அர்த்தம்.

ஒன்று மட்டும் நாம நல்லா தெரிஞ்சிக்கணும்.

இயற்கையின் சீற்றம்ன்னு சொல்றோம் இல்லையா?

இயற்கை ஏன் நம்ம மேலே கோபப்படுது?

இயற்கையை நாம அனுசரிச்சுப் போகிறதில்லே. அதனாலே கோபப்படுது.

காடுகளை அழிக்கக்கூடாது. விலங்குகளைக் கொல்லக்கூடாது. இயற்கை ஏற்படுத்தி வச்சிருக்கிற சமநிலையைக் கெடுக்கக் கூடாது.

அதைப் புரிஞ்சிக்கிட்டு வாழ்ந்தோம்னா பூமியும் நடுங்காது. நாமளும் நடுங்க வேண்டியதில்லே.

**–தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**



அரியலூர் மாவட்டம் தென்கச்சி பெருமாள் நத்தம் என்னும் ஊரைச் சார்ந்தவர். வேளாண்மைப் பட்டதாரி. பிரபல எழுத்தாளர். வானொலி, தொலைக்காட்சிப் பேச்சாளர். இன்று ஒரு தகவல் என்னும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து பல ஆண்டுகள் வழங்கியவர். இவரது இயல்பான தமிழ்ப்பேச்சு மிகச் சுவையானது.

## செயல்பாடுகள்

- செய்திகளை உரையாகச் சொல்வது ஒரு கலை. பாடப்பகுதியின் மொழிநடை போன்று உங்கள் அனுபவத்தை நாட்குறிப்பாக எழுதுங்கள்.
- விலங்குகள் நம்மைவிடச் சுற்றுச்சூழலை நன்கு உணருகின்றன என்பது தொடர்பான தகவல்களைச் சேகரித்து எழுதுங்கள்.

# வித்வான்

பத்து நாட்கள் கழித்து ஜானகிராமன் திரும்பியபோது ஆச்சரியங்கள் காத்திருந்தன. வீட்டுக்குள்ளிருந்து தேவகானமாய் பைரவி மிதந்து வந்தது. தெய்வகானம் தான். அத்தனை சுத்தம். அத்தனை குழைவு, அத்தனை கம்பீரம். கேட்ட நிமிடம் தேகம் முழுசும் சிலிர்த்தது. சுத்த சங்கீதத்துக்கே உரிய மேன்மை மனசை உலுக்கி எடுத்தது. ஏதோ உள்ளுக்குள் உடைந்துகொள்ள, அழவேண்டும் போல் இருந்தது. விம்மியே விட்டார் ஜானகிராமன். இந்த அறுபத்தி ஐந்து வருஷத்தில் இத்தனை சுத்தம் கேட்டதில்லை. இப்போது கேட்டபோது தாங்க முடியவில்லை. ராகமும் கீர்த்தனையும் முடிந்து உடன் ஸ்வரம் வாசிப்பு ஆரம்பமாயிற்று.

ஜானகிராமனுக்குப் பொறுக்க முடியவில்லை. விடுவிடென்று கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார். விளக்கு ஸ்விட்சைப் போட்டார். நாதம் பட்டென்று நின்றது.

“யாரு?” என்றது யஷணி (இயந்திர வேலையாள்)

“நான்தான்”

“பயணம் எப்படி இருந்தது?”

ஜானகிராமன் கேள்வியை அலட்சியம் செய்தார். ஒவ்வொரு அறையாகத் திறந்து பார்த்தார்.

“இப்போது இங்கே வயலின் வாசித்தது யார்?” ஒரு அரை நிமிஷ மௌனம்.

“நான்தான்”

“என்ன? என்னது, நீயா?”

“ஆமாம்.”

காரணமில்லாமல் பொறாமைப்பட்டார் ஜானகிராமன். எரிச்சல் அடைந்தார்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகைகளின் பின் வல்லினம் மிகும்.

   தண்ணீர் + பானை = தண்ணீர்ப்பானை (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)

   மரம் + பலகை = மரப்பலகை (மூன்றான் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)

   சட்டை + துணி = சட்டைத்துணி (நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)

   விழி + புனல் = விழிப்புனல் (ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)

6. ஓரெழுத்துச் சொற்கள் சிலவற்றின் பின் வல்லினம் மிகும்.

   தை + பார்வை =தைப்பாவை

   தீ + சுடர் = தீச்சுடர்

7. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலிமிகும்.

   ஓடா + புலி = ஓடாப்புலி

   பறவா + குளவி = பறவாக்குளவி

   வளையா + செங்கோல் = வளையாச் செங்கோல்

“நீயா?”

“ம்...”

“வயலினைத் தொடாதேன்னு சொல்லியிருந்தேனே...” அதட்டலாக உறுமினார்.

“தொடலையே”

“என்ன தொடலையா? இப்போ சப்தம் கேட்டதே, எனக்குக் காது அவிஞ்சிடலை.”

“அவை குறிப்பிட்ட ஒரு பிரீக்வென்சியில் நான் எழுப்பிய ஒலியலைகள்.”

“உனக்குப் பாடத் தெரியுமா? இத்தனை உசந்த சங்கீதம் யார் சொல்லிக் கொடுத்தா உனக்கு?”

“நீங்கதான்”

“என்னது?”




“நான் எழுப்பியது வெறும் சப்தம். சில ஒலியலைகள். கொஞ்சம் நாதம். இதை சங்கீதம் என்று சொல்வது உங்கள் விருப்பம். இவற்றுக்கு அடிப்படை நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு நடத்திய வகுப்புகள்...”

“பைரவி மட்டுதான் வாசிப்பியா? இன்னும் வேறு ஏதாவதுமா?...”

“எந்த ராகமும் வாசிக்க முடியும். ராகம் என்பது சில நோட்ஸ்களின் முன் தீர்மானித்த அடுக்கு. ஒரு பார்முலா, நோட்ஸ்கள் என்பது ஒரு குறிப்பிட்ட ஒலியளவு. இதை ஞாபகத்தில் நிரப்பிக் கொண்டால் வெவ்வேறு பார்முலாக்களை அமைத்து வெவ்வேறு ராகங்களை விவரிக்க முடியும்.”

அதிர்ந்து போனார் ஜானகிராமன். சங்கீதம் என்பது வெறும் கணக்குத்தானா? ஐம்பது வருஷமாய்த் தாம் அல்லும் பகலும் இதே நினைவாய் உழைத்து அறிந்து கொண்டது எல்லாம் ஒரு மிஷின் பத்து நாளில் கற்றுக்கொண்டு திருப்பி வாசித்துவிடக்கூடிய

சின்னஞ்சிறிய துளிதானா? கடலில் பாதிதூரம் கடந்து விட்டோம் என்பது வெறும் கனவுதானா? கரையிலேதான் இன்னும் நின்று கொண்டிருக்கிறேனா? சங்கீதம் தெய்வப் பிரசாதம் என்பது வெறும் பிரமையா? ஜானகிராமன் கண்ணில் நீர் துளித்தது.

**- மாலன்**

**மாலன்**



மாலன் நாராயணன் என்பது முழுப்பெயர். தமிழன், நசிகேதன் என்னும் புனைபெயர்களில் எழுதி வருகிறார். புதிய தலைமுறை இதழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இணையம், ஊடகம், தொடர்பான பல கட்டுரைகள், கதைகள் எழுதிவருகிறார். பல மொழிகளில் இவரது படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இணைய தமிழ்மொழிபெயர்ப்பில் முக்கிய பங்குவகிக்கிறார்.

**செயல்பாடுகள்**

- அறிவியல் வளர்ச்சியில் இனி எதுவும் சாத்தியமே என்னும் கருத்தை உணர்த்தும் ‘வித்வான்’ கதையினை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் உலகம் 2020-ல் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.
- பள்ளியில் நடக்கவிருக்கும் அறிவியல் கண்காட்சிக்குத் தலைமை தாங்க வருகை தரும் விண்வெளித்துறை இயக்குநரை அறிமுகம் செய்திட உரை ஒன்று தயார் செய்யுங்கள்.



## அவசரத் தேவை

மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான, மிக உன்னதமான கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அனுபவங்கட்கும் நெருங்கிய தொடர்பு இல்லை. புது உலகம், புது உலகம் என்று நாம் சாதாரணமாக அடிக்கடிக் கூறி வந்திருக்கிறோம். நேற்றுவரை அந்தச் சொல் பெரும்பாலும் சம்பிரதாயத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே ஒரு புது உலகம் உருவாகி வருகிறது. அதன் விளைவுகள் இன்றே நாம் மலைப்புறும் அளவில் இருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் நாம் வியந்து பிரமிக்கும் அளவில் இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிறையத் தென்படுகின்றன.

மனித சமுதாயம் தோன்றிய நாட்களிலிருந்த மாற்றங்கள் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. அவை பழமைத் தொடர்பைத் துண்டிக்காத மாற்றங்கள். மிக மெதுவான மாற்றங்கள். ஒரு தலைமுறை தன் காலத்தில் ஏற்படும் மாற்றங்களை அவ்வளவாக உணர இயலாத அளவில் மெதுவாக நிகழ்ந்தவை. இன்றைய மாறுதல்கள் அப்படிப்பட்டவையல்ல. அவை மகத்தானவை. பன்மடங்கு விரைவானவை. ஒவ்வொரு படியாக ஏறி உயரச் செல்வது போன்று இல்லாது, எகிறிக் குதிப்பதையொத்தவை.

1950 காலப் பகுதிக்குப் பின் அறிவுயுகம் உருவாகி வளர்ந்து வருகிறது. மனிதனுடைய படைப்பாற்றல் எல்லையின்றி வளர்ந்திருக்கிறது. இன்னும் வளர்கிறது. இவையனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருப்பது கல்வியறிவு. இந்தப் புது யுகத்தில் கணிசமாகப் பங்குபெறும் வாய்ப்பை நமது மக்கள் பெற வேண்டுமானால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் அறிவுக்கருவூலங்களை நாம் தமிழில் உருவாக்க வேண்டும். அதற்கான திட்டங்களை முறையாக வகுக்க வேண்டும். தேவையான முயற்சிகளைத் தியாக உணர்வோடும், எழுச்சி யோடும் செய்ய வேண்டும்.

மேலை நாட்டினர் கிரேக்க மொழியையும், இலத்தீன் மொழியையும் தங்களது பாரம்பரியத்திற்கு அடிப்படைகளாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். கல்வியறிவு, மெய்யறிவு சம்பந்தப்பட்ட துறைகளில் மேலைநாட்டு இலக்கியங்கள் இவ்விருமொழிகளிலும் இருந்து ஏராளமான வேர்ச்சொற்களை ஏற்றிருக்கின்றன. இன்றும் தேவைப்படும் பொழுது ஏற்கின்றன. ஓர் இயற்றுதலோ (Invention), புனைதலோ (Innovation) அல்லது கண்டுபிடிப்போ(Discovery) மேலைநாடுகளுள்

8. வன்தொடர்க்குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்
   பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
   எட்டு + தொகை = எட்டுத்தொகை
9. முற்றியலுகரச் சொற்களின் பின் வல்லினம் மிகும்
   திரு + குறள் = திருக்குறள்
   பொது = சொத்து = பொதுச்சொத்து
10. உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
   மழை + துளி = மழைத்துளி
   மழை + காலம் = மழைக்காலம்
   பனி + துளி = பனித்துளி

ஒன்றில் இடம்பெறுமாயின், அதற்கேற்ற துறைச் சொல்லை உருவாக்குவதும், அது மற்ற மேலை மொழிகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதும் மிக இயல்பாக நடைபெறுகின்றன. கல்வி அறிவு வளர்ச்சியில் மேலைநாட்டினர் முன்னணியில் இருப்பதால், அவர்கள் பயன்படுத்தும் சொல், உலக வழக்குச் சொல் (International Terminology) என்ற தகுதியையும் பெற்றுவிடுகிறது. மேலைநாடுகள் தவிர்த்த மற்றை நாடுகளில் புதுப்புனைவுகள், கண்டுபிடிப்புகள் இடம்பெற்றாலும், ஆங்கிலமும் அவர்களால் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதால் ஐரோப்பிய மொழிப் பாரம்பரியப் பின்னணியில் தான் பெரும்பாலும் துறைச்சொற்கள் உருவாகின்றன. மேலைநாட்டினர் அவற்றைத் தயக்கமின்றி அப்படியே ஒலிபெயர்த்து ஏற்றுக்கொள்கின்றனர். எனவே வளர்ந்த நாட்டு மொழிகள் உலகக் கல்வியறிவு வளர்ச்சியோடு இணைந்து நடைபோடுகின்றன. உலக வளர்ச்சி நிலைக்கும். அவர்களது மொழிக்கும் இடையில், தேக்கம் ஏற்படுவதில்லை. நம்மைப் பொருத்தவரை நாம் பிறமொழிகளில் உருவாகியுள்ள, உருவாகும் சொற்களை, அவை உலக வழக்குச்சொல் என்றாலும் ஒலிபெயர்த்து ஏற்க மறுக்கிறோம், தயங்குகிறோம்.

கலப்பற்ற மொழி வளத்தைக் காப்பாற்ற வேண்டும். புதிய சொற்களைத் தமிழிலேயே படைக்க வேண்டும். கல்வியறிவு வளர்ச்சியின் முழுமையையும் தமிழிற் காண வேண்டும் என்பது நமது குறிக்கோளாயின், அதை முன் வைத்து, அதன் பரிமாணங்களை ஆய்ந்து அளவிட்டு, அதற்கு ஏற்ற வகையில், தமிழ் மொழியின் இயல்புடன் இணைந்து தேவைக்கேற்ற மாற்றங்களைச் செய்யவும், புதிய கூறுபாடுகளை, பரிமாணங்களை உருவாக்கவும் முன்வருகிறோமா என்றால், அதுவுமில்லை. நாம் தடைகளை வளர்த்துக்கொண்ட அளவிற்கு, முன்னேறுவதற்கான தடங்களை அமைத்துக்கொள்ளவில்லை.

நாம் தனித்தன்மையைக் காப்பதாக எண்ணி, நாளுக்கு நாள் நம்மை அறிவுலக வளர்ச்சியில் தனிமைப்படுத்திக் கொள்கிறோமோ என்ற அச்சம் மேலிடுகிறது. வளரும் உலகிலிருந்து, நாளொரு தூரமும் பொழுதொரு இடைவெளியுமாக நாம் பின்தங்குகிறோமோ என்ற கவலை மனதை அரிக்கிறது. தனிமைப்படலும் (Isolation),

**கணினிக் கலைச்சொற்கள்**

Architecture - கட்டட அமைப்பு
Back up - மறு பிரதி
Bar code - பட்டைக் கோடு
Beep - ஒலித்துணுக்கு
Bit - துணுக்கு
Bulletin Board - அறிவிப்புப் பலகை
Card Reader - அட்டைப் படிப்பான்
Character - எழுத்து
Circuit - மின் இணைப்பு
Clock - மின் துடிப்பு
Code - குறியீடு
Column - இடம் வல அளவு
Command - ஆணை
Compact Disk - சிறுதகடு
Core Memory - விதை நினைவு
Computer - கணிப்பொறி, கணினி

தேக்கமும் (Stagnation) வளர்பவர் தழுவும் வழிகள் அல்ல.

பண்டைப் பெருமை, முந்தைப் பாரம்பரியம் என்று பெருமை பேசுகிறோம். அதில் தவறு எதுவும் இல்லை. அந்தத் தகுதியும் நமக்கு உண்டு. ஆனால் அதையாவது நாம் முறையாக எடுத்துச் சொல்லி, உலகின் ஒப்புதலைப் பெற்று, அதற்குரிய பெருமையை நமது மொழிக்கும், இனத்திற்கும் சேர்த்தோமா என்றால் அதுவும் செய்தோமில்லை.

மொத்தத்தில் நமது இன்றைய நிலை பற்றி எண்ணும் பொழுது ஒருசில உண்மைகள் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.



நாம் நமக்குச் சொந்தமானவை எவை என்று தேடி, அவற்றைச் சேகரித்துப் பெருமை சேர்ப்பதைவிட, அன்னியங்களை அடையாளம் காண்பதிலும், அவற்றை அகற்றுவதிலும், அதில் எழும் வாதங்களிலும், மன வேற்றுமைகளிலும் நமது கருத்தையும், காலத்தையும் சற்று அதிகமாகவே செலவிட்டு வந்திருக்கிறோம்.

நேற்றைய உயர்வுக்குரிய பெருமையையும் நாம் பெறவில்லை. நாளைய உயர்வுக்கான பாதையையும் நாம் வகுத்துக்கொள்ளவில்லை.

நாம் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்ட அளவிற்கு, வளர்ச்சியைப் பற்றி எண்ணவில்லை.

நாம் மாற்றார் மொழி என்றும், மாற்றுமொழி என்றும் கருதிய மொழிகளின் குறைகளைப் பேசிய அளவிற்கு நமது மொழியில் நிறையை ஆதாரங்களுடன் பேச வில்லை. அப்படிப் பேசியபோதும் நமக்குள்ளேயே பேசிக்கொண்ட அளவிற்கு உலகிற்கு எடுத்துச் சொல்ல முயலவில்லை. அந்த அளவிற்கு மற்ற மொழிகளில் நம்மைப் பற்றிய ஆய்வு நூல்களை நாம் உருவாக்கவில்லை.

தமிழர் இன்று ஒரு மொழியினர், பல நாட்டினர் என்று முன்பே கூறினோம். எல்லா நாட்டிலும் எண்ணிக்கையில் சிறுபான்மையர் என்றும் குறிப்பிட்டோம். இந்தக் கூறுபாட்டின் அடிப்படையில் தமிழினம் இன்று எதிர்நோக்கும் எத்தனையோ சிக்கல்கள், பிரச்சனைகள் நமது முன்னோர் எண்ணியும் பார்க்காதவை. இருநூறு ஆண்டுகட்கு முன்பு கூட, இன்றைய தேவைகள் பல

தமிழினத்திற்கு இருக்கவில்லை. எனவே வாழ்வில் நம் தேவைகள் மாறும்போது இணையான மாற்றங்கள் நமது அணுகுமுறையிலும் ஏற்பட வேண்டும்.

மொழிவளர்ச்சிப் பயணத்தில், இனவளர்ச்சிப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய திசை, தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை, அடைய வேண்டிய இடம் ஆகியவற்றை அமைதியுடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும், பரந்த பார்வையுடனும், கால வளர்ச்சியின் கணிப்புடனும் தேற வேண்டும்.

கல்வியறிவு யுகம் (Knowledge era) இன்று மனித சமுதாயம் கால் எடுத்து வைத்திருக்கும் ஒன்று. அதற்கு நாமும் சொந்தக்காரர்கள். அதில் நாமும் பங்குகொள்ள வேண்டும். அறிவியல், தொழில் நுட்பம், அவற்றின் அடிப்படையில் உருப்பெறும் விளைவுகள் இன்று மனித சமுதாயத்தில், கலை, பண்பாடு, பொருளாதாரம் ஆகிய அத்தனைத் துறைகளை யும் ஆக்கிரமித்து நிற்கின்றன. பழையன கழிதலும், புதியன புகுதலும் இன்று புரட்சியல்ல; அன்றாட நடைமுறை; இந்த யுகத்தின் வாழ்க்கை முறை.

உலகின் எந்த ஒரு பகுதியில் அறிவுத் துறையில் ஒரு வளர்ச்சி ஏற்பட்டாலும் அது உலகச் சொத்து. எல்லோருக்கும் சொந்தம். நமக்கும் சொந்தம். ஆனால் அது நம் மொழியில் நமக்கு உண்மையிலேயே சொந்தமாகிறது. அறிவுலகத்திற்கு மொழிதான் பாதையும் பாலமும் ஆகும். அதன் எல்லைகள் விரியும்பொழுது நமது சாலையும், பாலமும் இயல்பாகவே அவற்றை எட்ட வேண்டும். இன்றைய அறிவுலகின் எல்லைகள் எங்கோ இருக்கின்றன. நமது மொழிகள் எங்கோ நிற்கின்றன. இடைவெளி பெரிது என்பது கவலைக்குரியது. அதனினும் கவலைக்குரியது. அந்த இடைவெளி விரிவாகிக்கொண்டே போகிறது என்பது. அது விரிவாகும் வேகமும் மிகுகிறது.

பல நூற்றாண்டுகளாக நமது சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்ட தேக்கத்தினை எண்ணி, நாம் ஈடுகட்ட வேண்டிய இடைவெளியின் ஆழத்தை, அகலத்தை அளவிட்டு நாம் பயன்படுத்தும் கருவிகளின் சாதனங்களின் நிறைகுறைகளைக் காய்தல் உவத்தல் இன்றி ஆய்ந்து மொழி வல்லுநர், துறை வல்லுநர் துணை கொண்டு,

Cursor - அடையாளச் சுட்டி
Data - தகவல்
Data Processing - தகவல் அலசல்
Debug - பிழை நீக்கு
Device - சாதனம், கருவி
Digit - இலக்கம்
Disk - தகடு
Disk Drive - தகடு செலுத்தி
Driver - இயக்கி
DTP (Desktop Publishing) - மேசைப் பதிப்பு
Echo - மறுமொழி
Edit - திருத்து
Email - மின் அஞ்சல்
Erase - அழி
File - கோப்பு
Function - செயல்முறை
Graphics - வரை முறைகள்
Hardware - வன்பொருள்
Input - உட்செலுத்து
Internet - இணையதளம்

இருப்பதைக் காப்பதோ, இழந்ததை மீட்பதோ, இல்லாததை உருவாக்குவதோ, எது நமது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவை என்று அறிவுபூர்வமாகச் சூழ்ந்து அதன் அடிப்படையில் நாம் நமது மொழி வளர்ச்சிக் கொள்கையை வகுக்க வேண்டும்.

ஓர் இனத்தின் வளர்ச்சி, மொழியின் வளர்ச்சி, அந்த மக்களின் ஆசையின் அளவைப் பொறுத்தது. அவர்கள்தம் கனவுகளைப் பொறுத்தது. கனவுகளின் பரிமாணங்களைப் பொறுத்தது. நாம் நமது பொருளாதாரத்தில்தான் வறியவர்கள் என்பது இல்லை. நாம் நமது எண்ணங்களிலும் வறியவர்களாக இருக்கிறோம். நமது ஆசைகளில் கூட வறியவர்களாக இருக்கிறோம். நமது கனவுகள் கூடப் பெரியனவாக இல்லை. இந்த நிலை மாற வேண்டும். இதை மாற்றும் பார்வைப் பரப்பும், சிந்தனைத் தெளிவும், உள்ள உரமும், உண்மைப் பற்றும் உள்ளவர்களை ஒதுக்காது. அவர்கள் ஒதுங்கினாலும், ஒதுங்கி நிற்க விடாது இப்பணியில் ஈடுபடுத்த வேண்டும். எல்லாவிதமான வேறுபாடுகளையும் கடந்து, பகைமை ஊற்றுகளைத் தூர்த்து, மொழிவளர்ச்சிப் பணியில் நாம் ஒருமைப்பாடு காண வேண்டும். இது நம்மை எதிர்நோக்கும் தலையாய பணி; நமது இன்றைய தேவை; இன்றைய அவசரத் தேவை.

Key board - விசைப்பலகை
Label - அடையாளம்
Lan - வளாக வலை
Laser - சீரொளி
Laptop - மடிமேல் கணினி, மடிக்கணினி
Link - இணைப்பு
Log on - நுழைமுறை
Log out - வெளிவரும் முறை
Menu - பட்டியல்
Mother Board - தாய் இணைப்பு
Network - வலை இணைப்பு
Numeric - எண்
Off line - நேர் தொடர்பற்ற
Optical Disk - ஒளித்தகடு
Output - வெளிப்பாடு
Password - கடவுச்சொல்
Pixel - படத்துண்டு
Printer - அச்சுயந்திரம்
Program - நிகழ்ச்சி நிரல்
Pulse - துடிப்பு, அதிர்வு

**–வா. செ. குழந்தைசாமி**

**வா. செ. குழந்தைசாமி**



இவர் அண்ணா பல்கலைக்கழகம், இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் துணைவேந்தராகப் பணியாற்றியுள்ளார். குலோத்துங்கன் என்ற பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். மானுட யாத்திரை, வாயில் திறக்கப்படும் என்பன கவிதைத் தொகுப்புகள். ‘வாழும் வள்ளுவம்’ என்னும் கட்டுரை நூலுக்கு சாகித்திய அகாதமி பரிசுபெற்றுள்ளார்.

**செயல்பாடுகள்**

- வளரும் உலகில் அறிவியல் சார்ந்த நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்கிணங்கத் தமிழாக்கம் செய்யப்பட்ட ஏதேனும் அறிவியல் நூல் ஒன்றிற்கு நூலடைவு தயார் செய்யுங்கள்.
- உயிரினங்கள் பலவற்றிற்கு நாமறியாத பல தமிழ்ச் சொற்கள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டி உங்கள் நண்பனுக்குக் கடிதம் ஒன்றை எழுதுங்கள்.

# இன்னும் பிறக்காத தலைமுறைக்காக

முற்காலத்திய தமிழ் இலக்கியத்துடன் ஒப்பிடும்போது, இன்றைய எழுத்தில் புற உலகைப் பற்றிய பதிவுகள் மிகவும் குறைவாகவே இருப்பதைக் காண முடிகின்றது. அதிலும் சங்கப் பாடல்களில் காடுகளைப் பற்றியும் ஆறுகளைப் பற்றியும் ஏராளமான குறிப்புகளைப் பார்க்கிறோம். எந்த ஒரு கருத்தைச் சொல்ல வந்தாலும், புலவர் அதை இயற்கையின் பின்புலத்தில் சொல்லிப் போவதைக் காண முடியும். கணியன் பூங்குன்றனாரின் பாடலில் உள்ள நீரோட்டம் பற்றிய விவரிப்பைப் பாருங்கள். அதே போல முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாடல். அரசனொருவனின் நாட்டில் வளம் கொழிக்கின்றது எனக் கூற வந்த புலவர் ஒரு குளத்தை வர்ணிக்கிறார். அதிலுள்ள அல்லிப் பூக்களெல் லாம் மலர, நீர்ப்பரப்பு தீப்பிடித்து விட்டது என்றெண்ணிய நீர்ப்பறவைகள் தத்தம் குஞ்சுகளைத் தமது இறக்கைகளால் அணைத்துப் பாதுகாக்கும் என்கிறார்.



தற்கால இலக்கியத்தில் இந்த அம்சம் குறைவாகக் காணப்படுவதற்கு ஒரு காரணம் நகர வாழ்க்கை பெருகி, நகரச்சூழலில் பிறந்து வளர்ந்த ஒரு தலைமுறை எழுத ஆரம்பித்த பின், நம் இலக்கியமும் இயற்கை உலகினின்று அந்நியப்பட்டு விட்டது என்று எண்ணுகின்றேன். புறவுலகைப் பற்றிய சொல்லாடல் உருவாகவில்லை. ஒரு மரத்தடியில் என்றும், ஒரு சிறு பறவை என்றும் பலர் எழுதுவதைக் காணலாம். என்ன மரம்? எந்தப் பறவை? இந்த விவரங்களைக் குறிப்பிட்டால் அந்தச் சொல்லோ வியம் உயிர்பெற்று விளங்காதா?

இந்தியா போன்ற வெப்ப நாடுகள் உயிரினங்கள் மிகுந்துள்ள பிரதேசம். இந்தப் பல்லுயிரியம் நம் பாரம்பரியச் செல்வம். சென்னையில் என் வீட்டிலுள்ள சிறு தோட்டத்தில், ஓணான், மூஞ்சுறு, அரணை, பெருச்சாளி எனப் பல சிற்றுயிர்கள் வாழ்கின்றன. அவ்வப்போது ஒரு சாரைப்பாம்பும் வந்துபோகின்றது. வண்ணத்துப்பூச்சிகளும், தேன்சிட்டுகளும் வருகின்றன. வீட்டினுள் பல்லிகள், சிறு சிலந்திகள், இதுபோல உயிரினங்கள் நம்மைச் சுற்றி எப்போதும் இருக்கின்றன. நகர்புறத்திலேயே இவ்வளவு என்றால் கடற்கரை, மலைகள், குளங்கள், புல்வெளிகள் போன்ற புற உலகின் மற்றக் கூறுகளை நினைத்துப் பாருங்கள். ஆயிரக்கணக்கான உயிரினங்களுக்கு இவை வாழிடம். அதிலும் மழைக்காடுகள் மற்றும் ஆற்றங்கரை போன்ற உறைவிடங்களில் ஏராளமான உயிரினங்கள். இயற்கை

யின் பரந்த உயிரின இணைப்பில் நாம் அனைவரும் ஒரு சிறு பகுதியே என்பதை இவை உணர்த்துகின்றன. இவை நம் வாழ்வைச் செறிவுள்ளதாகச் செய்கின்றன. இவைகளின் பாதிப்பு நம் மீது என்றும் உண்டு. அவைகளுக்கும் நம் வாழ்விற்கும் நெருக்கமான பிணைப்பு உண்டு. காட்டுயிரின் இந்தப் பன்முகத்தன்மை நம் இலக்கியத்தில் வெளிப்பட வேண்டாமா?

மொழியாக்கப்படும் மூல நூல்களில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ள பல உயிரினங்கள் நாம் வசிக்கும் இடங்கள் அருகேயும் உண்டு. அவற்றிற்கு நம் மொழிகளில் பெயர்கள் உண்டு என்பதை மொழிபெயர்ப்பாளர்கள் அறியாததாலும் பல பிழைகள் ஏற்படுவதுண்டு. வட இந்தியாவில் ஜாமுன் என்றறியப்படும் மரத்திற்கு இங்கே நாவல் என்று பெயர். ஜாமுன் மரமென்றே எழுதிவிட்டால் தமிழ் வாசகருக்குப் புரியாது. மற்றொரு எடுத்துக்காட்டு விலங்குகளைப் பற்றியது. மான்களில் பல இனங்கள் உண்டு. இவை தவிர மான் போலவே உருவம் கொண்ட ஒரு விலங்கினமும் உண்டு. இந்த இரு விலங்கினங்களை ஆங்கிலத்தில் Deer மற்றும் Antelope என்று வேறுபடுத்திக் கூறுவார்கள். இந்த இரண்டாவது இனத்தைத் தமிழில் இரலை என்று குறிப்பிடுவர். கலைக்களஞ்சியத்தில் (1954) இது பற்றிய விரிவான குறிப்பு ஒன்றுண்டு. வெளிமான் என்றறியப்படும் black buck ஒரு இரலையே. கோடிக்கரை காட்டிலும் சென்னை, கிண்டி தேசியப் பூங்காவிலும் வெளிமான்களைக் காணலாம். ஆனால் இரலை போன்ற பதங்களை வெகுசிலரே பயன்படுத்துகிறார்கள். அதுபோலவே தமிழ் நாட்டுக் காடுகளில் வாழும் (Gaur) என்றறியப்படும் காட்டெருது, எளிதாக சரணாலயங்களில் காணக்கூடியது. இதைக் காட்டெருமை என்று பலர் தவறாகக் குறிப்பிடுகின்றனர்.

Record - பதிவு
Register - பதிவேடு
Scanner - வருடி
Screen - திரை
Scroll - நகர்த்து, உருட்டு
Software - மென்பொருள்
Spread Sheet - விரிதாள்
Tele Printer - தொலை அச்சியந்திரம்
Touch Screen - தொடுதிரை
Voice Mail - பேச்சு அஞ்சல்
Version Control - பதிப்புக்கட்டுப்பாடு
Voice Input - பேச்சாணை
Windows - ஜன்னல்கள்
Word Processor - சொல் தொகுப்பான்

விலங்குகளுக்கும் புள்ளினங்களுக்கும் சரியான தமிழ்ப் பெயர்களை மீட்டெடுத்துப் புழக்கத்தில் கொண்டுவர இம்மாதிரியான மொழியாக்க நூல்கள் உதவக்கூடும். மொழிபெயர்ப்பாளர் இந்த விஷயத்தில் எடுத்துக்கொண்ட அக்கறை சொற்றொடர்களில் வெளிப்படுகின்றது.

இது தவிர, வேறு சில சிக்கல்களும் உண்டு. விலங்குகளை அஃறிணையில் குறிப்பிடுவது தமிழ்மொழி மரபு; ஆனால் ஆங்கிலத்தில் விலங்குகளைக்கூடச் செல்லமாய் உயர்திணையில் அவன் அவள் என்றழைக்கும் மரபும் உண்டு. இதைத் தமிழில் நுழைத்துவிடக் கூடாது. இரு மொழி மரபுகளைப் பற்றிய ஒரு தனிக் கவனம் செலுத்தி இம்மாதிரியான தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

காடு, காட்டுயிர்கள் சார்ந்த நூல்களை மொழியாக்கம் செய்யும் போது தீவிர கவனம் தேவைப்படுகின்றது. புறவுலகைப் பற்றி உயிரினங்களின் பன்முகத்தன்மை பற்றி ஒரு சொல்லாடல் உருவாவதற்குத் தேவையான மொழிவளம் வளர இத்தகைய நூல்கள் கவனமாக மொழிபெயர்க்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல், பல்லுயிரியம் இவை பற்றி எழுதவும். விவாதிக்கவும், பசுமை இலக்கியம் உருவாகவும் அத்தகைய மொழிவளம் ஒரு சாதனமாக அமையும். சுற்றுச்சூழல் பற்றிய பிரச்சனைகளை விவாதிக்கவும், இத்துறையில் தோன்றும் புதிய கருத்தாக்கங்களை வாசகர்களுக்கு விளக்கவும் இயலும். புறவுலகு, அதில் வாழும் உயிரினங்கள் பற்றிய பிரக்ஞை ஏற்படும். நம்மில் பலர் புறவுலகு என்று ஒன்றில்லாதது போலவே வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்கள் என்று கார்ள் சேகன் எழுதியது நினைவிற்கு வருகின்றது.

நம் சமுதாயத்தில் புதிய புதிய அக்கறைகள் உருவாகும்போதே மொழியின் பயன்பாட்டில் அதற்கேற்ற மாற்றங்கள் ஏற்பட வேண்டும். எடுத்துக்காட்டாக காடு நம் அன்றாட வாழ்வின் ஆதாரம் என்றும், இயற்கையில் உயிரினங்கள் ஒவ்வொன்றும் ஒரு பிரம்மாண்டமான பிணைப்பில் அங்கங்களே என்றும், காட்டுயிர்கள் இயற்கையின் விதிகள்படியே இயங்குகின்றன என்பதையும் நாம் இன்று அறிந்து வியந்துகொண்டிருக்கும் வேளையில் காட்டு தர்பார், மிருக புத்தி போன்ற பதங்களைப் புறந்தள்ளிவிட வேண்டும். காட்டுயிர் பராமரிப்பிற்குகந்த மொழிப் புழக்கத்தில் வர வேண்டும். காட்டில் வாழும் கொடிய விலங்குகள் என்று எழுதுபவர்கள் நோக்கில் ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

**–சு. தியடோர் பாஸ்கரன்**

**சு. தியடோர் பாஸ்கரன்**

தாராபுரத்தைச் சார்ந்தவர். திரைப்பட வரலாறு, காட்டுயிர் ஆகிய துறைகளில் முக்கிய பங்களிப்புச் செய்திருக்கிறார். தமிழ்சினிமா பற்றிய தி ஐ ஆப் தி சர்பென்ட் (1996) நூலுக்காகத் தேசிய விருதான தங்கத்தாமரையினைப் பெற்றவர்.

## செயல்பாடுகள்

- தமிழாக்கம் செய்யப்பட்ட பிறமொழிச் சொற்களைத் திரட்டிப் பட்டியலிடுங்கள்.
- இணையதளங்களை எப்படி வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம் என்ற வழிகாட்டுதல் வழங்கிடப் பல்வேறு செய்திகள், படங்கள், குறும்படங்கள் சேகரித்து அறிவியல் கண்காட்சி ஒன்றை நடத்துங்கள்.

அலகு 4

# என்றும் நலமுடன்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது முன்னோரின் வாக்கு.

இயற்கையோடு இயைந்து நோயற்ற வாழ்வு வாழ்ந்த மனிதன் இன்று செயற்கை வாழ்க்கைமுறையைத் தனதாக்கிக் கொண்டு தனக்குத்தானே நோய்களை வரவழைத்துக்கொண்டிருக்கின்றான்.

உணவே மருந்து என்று வாழ்ந்து வந்த மனிதன் இன்று மருந்தே உணவு என்ற நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளான். மேலும் உடற்பயிற்சி செய்வதும் இன்று குறைந்து வருகிறது.

விளையாட்டு பொழுதுபோக்கிற்கு மட்டுமல்லாமல் உடல் உறுதிக்கும் மன உறுதிக்கும் துணைபுரிபவை. சிறந்த உடல்நலம் உடையவர்களிடம் மட்டுமே சிறந்த மனவளமும் அமையும். விளையாட்டால் ஒற்றுமை உணர்வும் ஒருமைப்பாட்டு எண்ணமும் உருவாகின்றன.

இந்நிலையில் உணவு, உடற்பயிற்சி, விளையாட்டு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைகின்றது இவ்வலகு.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- மாறிவரும் உணவுப் பழக்கங்கள் பல்வேறு நோய்களுக்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து விழிப்புணர்வுக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.
- உடற்பயிற்சியின் சிறப்புகளையும் தேவைகளையும் அறிந்து பத்திரிகைச் செய்திகள் உருவாக்குகிறார்கள்.
- நாட்டுப்புற விளையாட்டுகளை அறிகிறார்கள்; தொகுக்கிறார்கள்; நிகழ்த்துகிறார்கள்.
- விளையாட்டு, உடற்பயிற்சி, யோகா போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள்.

## நலம்நாடி



### உணவே மருந்து

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. மக்கள் உண்ணும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களுமே அவர்களது உடல்நலத்தைத் தீர்மானிக்கின்றன. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக் கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது. இயற்கை உணவுமுறையினையும் இயற்கையோடு இயைந்த பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிப்பதன்மூலம் உடல் நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்க முடியும் என மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

இன்று சமையல் முறைகள் நாட்டுக்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றன. உணவகங்கள் பெருகியுள்ளன. சத்துக்காக அன்றிச் சுவைக்காக உண்ணும் நடைமுறை மிகுந்திருக்கிறது. அட்டைப்பெட்டிகளிலும் தாள் பைகளிலும்

பதப்படுத்தி அடைத்த ஆயத்த உணவுவகைகள், விரைவு உணவுகள், வழக்கத்திற்கு வந்துள்ளன. நாகரிக வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல், இனக்கலப்பு, புதுமையெனச் சுவைகூட்டும் ஆவலில் நோயைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். உணவே மருந்து என்ற நிலைமாறி, மருந்தே உணவு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.



**உணவின் இன்றியமையாமை**

உண்டி முதற்றே உலகு என்பது நாமறிந்தது. உணவு உடலுக்கு வலிமையைத் தருவது; வளர்ச்சியளிப்பது. உணவு வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதுடன் கொள்கைகள். பழக்கவழக்கங்கள், நாகரிகம், சமூக அமைப்பு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றிலும் மாறுபாடுகளை உண்டாக்க வல்லது. அது உடலையும் உயிரையும் வளர்க்கும் அமுதமாகும். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது உலகறிந்த உண்மை. எனவேதான், பசியின் கொடுமையைப் பசிப்பிணி என்னும் பாவி என்றது மணிமேகலைக் காப்பியம். இப்பிணிக்கு மருந்து உணவே. ஆதலால்தான், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனப் புறநானூறும் மணிமேகலையும் கூறுகின்றன.

உயிர், உடலோடு கூடிய நிலையில் எப்போதும் புறச்சூழலோடு போராடி வருகிறது. அதில் வெற்றியடைவதே உடல்நலமாகும். தோல்வி அடைந்தால் நோயில் முடியும். அந்நோயைத் தீர்த்து இன்பமளிப்பதே மருந்து.

**அறுசுவையின் பயன்கள்**

இனிப்பு - வளம்
துவர்ப்பு - ஆற்றல்
கசப்பு - மென்மை
கார்ப்பு - உணர்வு
உவர்ப்பு - தெளிவு
புளிப்பு - இனிமை

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையைத் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். உண்ட உணவு, செரித்தபின்னரே மீண்டும் உண்ண வேண்டுமெனத் தமிழ் மருத்துவம் கூறுகிறது. முன் உண்டது

செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின் (திருக்குறள். 942)**

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே உடல் நலத்திற்குப் பொருந்திய உணவு எது? பொருந்தா உணவு எது? என ஆராய்ந்து, தெளிந்து உணவு முறையை வகுத்துக்கொண்டால், உடலுக்கு ஊறுசெய்யும் நோய்கள் நம்மை அணுகா.

**அன்றும் இன்றும்**



வடை
பணியாரம்
இடத்தில்
கேக்குகளும்
பிட்ஸாக்களும்....

தோசை
இட்லி
இடத்தில்
பரோட்டாவும்
நாணும்....

தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவ முறையில் சமைக்கப்படுகிறது. வெப்பநாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது. அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம், வயிற்றுச் சூட்டைத் தணிக்கும். மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு, வளியகற்றி வயிற்று அளைச்சலை நீக்கிப் பசியை மிகுவிக்கும். வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.

பெருங்காயம், வளியை வெளியேற்றும், இஞ்சி, பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். தேங்காய், நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும். சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது. குளிர்ச்சி தந்து பித்தம் போக்கும் எலுமிச்சை ஊறுகாயை மோர்ச் சோற்றுடன் உண்ணலாம்.

### தவிர்க்க வேண்டியன

நோய்க்கு முதல் காரணம் உப்பு. இதனைக் குறைவாகச் சேர்த்தல் நன்று. உப்புநிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடகம், கருவாடு, முந்திரிப்பருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்தமோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும்.

கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்க வேண்டும். காரமும் புளிப்பும் கொண்ட

உணவுகள் கூடா. எண்ணெய்யில் வறுத்த, பொரித்த உணவுகளை ஒதுக்குதல் நன்று. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி. நொறுக்குத் தீனி கூடவே கூடாது. இடையிடையே எதையாவது தின்பது, கொறிப்பது நல்லதன்று.

**உண்ணும் முறை**

எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக்கொள்கிறது. நாச்சுவை கருதி எவற்றையும் உண்ணாமல் உடல்நலங்கருதி உண்ணுதலே நல்லது. உணவை விரைவாக விழுங்கக் கூடாது; நன்றாக மென்று விழுங்க வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும் அது செரிக்காது. குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்துவிடும். உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ண வேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதால் அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

**நொறுங்கத் தின்றால் நூறு வயது**

**தண்ணீரும் மருந்தே**

நீரின்றமையாது உலகு என்பது வள்ளுவம். இயற்கை உணவுப்பொருள்களில் நீரில்லாத உணவுப்பொருள்களே இல்லை. எல்லாவகையான உணவுப் பொருள்களும் விளைவதற்குக் காரணமாக அமைவது நீர். உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை அடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமை யாதது. எனவே, நீரைத் தேவையான (நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று லிட்டர்) அளவுக்குக் குடித்தல் உடலுக்கு நல்லது. உணவு உண்ணும்போது இடையில் நீர் குடித்தல் கூடாது.

**சமச்சீர் உணவு**

ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. உணவின் அளவைச் சோறும் காய்கறியும் அரைவயிறு.

முறுக்கு
சீடை
இடத்தில்
குர்குரேயும் லேசும்....

உப்புமா கிச்சடி
இடத்தில்
நூடுல்ஸும் பர்கரும்....

இப்படி
பாரம்பரிய உணவுகள்
இடத்தை
பாஸ்ட், ஜங்க் உணவுகள்
பிடித்தால்
ஃபாஸ்ட்டாகவே வருகிறது
மாரடைப்பு
வீட்டுக்கு வீடு
ஒபிஸிட்டி பிள்ளைகள்
உலா வருகின்றனர்....

**– சரஸ்வதி இராசேந்திரன்**
**நன்றி – அமுதசுரபி இதழ்**

பால், மோர், நீர் கால்வயிறு; கால்வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும். வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும். எனவே ஔவைபிராட்டி "மீதூண் விரும்பேல்" என்றார்.அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி.



வயது ஏறும்போது கொழுப்புச் சத்துள்ள உணவின் அளவைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வருதல்வேண்டும். உணவைக் கட்டுப்படுத்துவதோடு எளிய உடற்பயிற்சிகளையும் செய்தல் வேண்டும். நடைப்பயிற்சியே எளிய உடற்பயிற்சி. நாள்தோறும் தவறாமல் நடந்தால் நோய் நம்மை விட்டு நடக்கும்; ஓடினால் நோய் நம்மைவிட்டு ஓடும்; எப்போதும் படுத்துக்கிடந்தால் நோய் நம்மீது படுத்துக்கொள்ளும்.

**காலை மாலை உலாவி நிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத்தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே.**

**– கவிமணி**

உடல் நலனை விரும்புவோர் முறையான உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் நெடுநாள் நலமாக வாழலாம். உண்பதற்காக வாழாமல், வாழ்வதற்காக உண்டால் மருந்தென்பதே உடலுக்குத் தேவை இல்லை. திருமூலரும் உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியுள்ளார். நாடு நலம் பெற நல்லுடல் பெற்ற மக்கள் தேவை. நல்லுடல் பெற நல்லுணவு முறையை மேற்கொள்ள வேண்டும்.

**– பணிமனை உருவாக்கம்**

## செயல்பாடுகள்

- 'உணவே மருந்து' எனும் பொருளில் அமைந்த குறள், பழமொழிகள் பாடல்கள் போன்றவைகளைத் திரட்டுங்கள்.
- இன்றைய உணவுப் பழக்கம் உடல்நலனைச் சீராக வைக்கிறதா? கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- தொலைக்காட்சியில் வரும் உணவுத் தொடர்பான விளம்பரங்கள் இன்றைய வாழ்வில் எத்தகைய ஆதிக்கம் செலுத்துகின்றன? விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.

## ஜங்க் ஃபுட் ஜாக்கிரதை

நவீன வாழ்க்கை முறையில் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதுவும் உணவுப்பழக்கங்களில் உணவு விஷயத்தில் இந்தியர்கள் பெரிதும் மாறிவருகின்றனர். ஃபாஸ்ட்புட், உணவுகளை ஒரு ஃபேஷனாக இளம் தலைமுறையினர் நம்புகிறார்கள். இதுபோன்ற உணவு வகைகளைப் பெரும் விலைகொடுத்து நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஹோட்டல்களில் வாங்கி உண்பது தங்களை மேல்தட்டினாராகவும் படித்தவர்களாகவும் நவீன வாழ்க்கையில் முன்னேறியவர்களாகவும் காட்டிக்கொள்வதற்கு ஒரு வழிமுறையாக எண்ணுகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பீட்சாவை வாங்கி உண்பதற்கு இவ்வளவு பெரிய க்யூ இருந்ததில்லை. இப்போது ஃபோன் போட்டால் உங்கள் வீட்டிற்கே பிரத்யேகமான பாக்ஸில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். இதேபோன்றுதான் இன்னொரு பழக்கமும், எல்லாச் சந்துபொந்துகளிலும் பானிபூரி ஸ்டால்கள் நம்மை வரவேற்கின்றன. நமது தலைமுறையினர் இந்த ஃபேஷனுக்கு மாறிவருகிறார்கள். மட்டுமல்ல அடிமையாகி வருகிறார்கள். இதில் மாபெரும் வேடிக்கை என்னவென்றால் நீங்கள் இதுநாள் வரை சாப்பிட்டுக்கொண்டு வருவது காளான் அல்ல. வேக வைத்த முட்டைக்கோசும், சோயாமாவும்தான் என்று சொன்னால் யாரும் நம்பத் தயாராக இல்லை. ஆரம்பத்தில் பானிபூரி என்னும் வட இந்திய உணவு, தென் இந்தியர்களின் உணவு பழக்கத்தில் ஒரு ஃபேஷனாக பக்க வழியாய் நுழைந்தது. இதை அதிகம் விரும்பி உண்ணும் வட இந்திய சேட்டுகள் தமிழகத்தில் இல்லாமல் இல்லை. அவர்கள் பிரத்யேகமான முறையில் அவர்களின் பாரம்பரிய உணவைச் சரியான இடத்தில் வாங்கி உண்கிறார்கள். உண்மையான காளான் மஞ்சூரியன் எங்கே கிடைக்கும் என்று அவர்கள் தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

பான வகைகளையே எடுத்துக்கொள்வோம். ஆரம்பத்தில் காஃபி பழக்கம் எப்படி பதநீருக்குப் பதிலாகப் பக்க வழியாக நுழைந்ததோ, அதேபோன்று காஃபிக்கு மாற்றாய் இப்போது நமது மேசையில் கோகோ கோலா பாட்டில்களைத் திறக்கிறார்கள். இதிலும் வேடிக்கை என்னவென்றால் சைவ உணவுகளுக்குப் பெயர் பெற்ற தமிழ்நாட்டு உணவகங்களுக்குள் இதுவும் நுழைந்துவிட்டது. இப்போது உங்களை எதிர்கொள்ளும் சர்வர் ஒரு ரவா ரோஸ்டுடன் நீங்கள் அருந்துவது கோகோ கோலாவா என்று கேட்கிறார். எப்படி நீங்கள் முட்டைக் கோசையும் சோயா மாவையும் தின்று வருகிறீர்களோ, அதே போன்று பதநீர் இருந்த அதே இடத்தில் உங்களை அறியாமலே நீங்கள் கோகோ கோலாவைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இது மேற்கத்திய மனோபாவம். இப்போது உங்கள் மகளுடனோ, மகனுடனோ, பெருநகரச் சந்தைக்குள் நுழைகிறீர்கள். அவர்கள் விரும்புவது நீங்கள் முன்னேறிய மிகவும் நவீனமான தந்தையாக இருப்பதைத்தான். அதன் பொருட்டு இப்போது உங்கள் குழந்தைகளுக்குப் பரிசளிக்க கோகோ கோலாவையும், சோயா மாவையும் தவிர வேறு வழியில்லை. இதிலிருந்துதான் அவர்கள் இளநீரின் சுவையை அறியாமல் போனது.

**நன்றி – இளைய தலைமுறை**
**மாத இதழ்**

# சுவரிருந்தால்



## உடற்பயிற்சி

**மா**லையில் விளையாடும் வழக்கம் தன்னை
மாணவர்கள் கடைப்பிடிப்பா ராயின் என்றும்
ஓலையிலே எழுதிவைத்த எழுத்தா காமல்
உடல் நலமோ கல்லெழுத்தாய் நிலைத்து நிற்கும்
சாலையிலே தனிவழியே போவோ ருக்குச்
சரியான உடல்வன்மை வேண்டும்; நீண்ட
காலமிங்கே உயிர்வாழும் எண்ணம் மிக்கோர்
கட்டாயம் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உடல்தன்னைப் பேணிவரின் உயிரார் என்றும்
உளமகிழ்வார்; நூறாண்டைக் கடந்தும் வாழ்வார்.
திடமான உடல்நோக்கி நோயார் வாரார்
தேடரிய மருந்தாரை எவரும் எண்ணார்
கடன்பட்டார் வாழ்வினிலே துன்பம் மேவும்
கலக்கங்கள் மிகுந்திருக்கும் இன்ப வாழ்வில்
உடன்பாடோ இல்லையெனில் அவலம் தோன்றும்
உரமூட்டும் விளையாட்டால் இன்பம் பொங்கும்.



**– கவிஞர் கடவூர் மணிமாறன்**

**கவிஞர் கடவூர் மணிமாறன்**

இவர் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த தமிழ் அறிஞர். அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். வாழ்க்கைச் சுவடுகள், ஆய்வுச்சோலை, புகழ்நிலா முதலியன இவருடைய நூல்களாகும்.

**செயல்பாடுகள்**

- "நடைப்பயிற்சி நல்ல உடற்பயிற்சி" இதைப் போன்ற உடல்நலம் தொடர்பான வாக்கியங்கள் உருவாக்கி விளம்பரப்படுத்துங்கள்.
- உடற்பயிற்சி உடல்நலத்திற்கு உகந்தது என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்திடச் சொற்பொழிவு உரை தயார் செய்யுங்கள்.

**யோகாசனம் மூலம் ஏற்படும் நன்மைகள்**


1. உடல் வளையும் தன்மையுடையதாகச் செய்து நரம்புகளை வலுப்படுத்துகிறது.
2. இரத்த ஓட்டத்தை நன்கு இயக்குகிறது.
3. பொதுவாகத் தேக ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.
4. உள் உறுப்புகளை வளர்ச்சி அடையச் செய்கிறது.
5. நல்ல சுவாசம் நடைபெற உதவுகிறது.
6. ஒவ்வொரு பாகத்தையும் வலுப்படுத்துகின்றது.
7. நல்ல உடல் அமைப்பை ஏற்படுத்துகின்றது.
8. குறைந்த சக்தியைக் கொண்டு நிறைந்த வேலை செய்ய முடிகிறது.
9. மன அமைதி, நல்ல புத்துணர்ச்சி, உற்சாகம் ஏற்படுத்துகிறது.
10. நோயற்ற வாழ்விற்கு வழி வகுக்கிறது.

# உடம்பு

உடம்பைப் பற்றியும் அதன் நலத்தைப் பற்றியும் நாம் எல்லாம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறோம். ஆனால் அதை நாம் எப்படிப் போற்ற வேண்டும் என்பதை அறியாதிருப்பது மட்டுமன்றி அதை வீணடிக்கவும் செய்கிறோம். ஒரு சித்தர் பாடினார்

**நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி – அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!**

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். மனித்தப் பிறவியும் வேண்டுவதே என்கிறார் அப்பர்.



சில சித்தர்கள் உடம்பின் இழிவை மிகவே பேசுவார்கள். தாயுமானவர் நம் உடம்பு ஐந்து பூதம் சந்திக்கும் சுரங்கப் பாதை, ஒன்பது வாசல் வீடு, எலும்பு, தசை, நரம்பால் ஆன நாற்றமடிக்கும் பந்தல், வெண்ணீர் செந்நீர் முதலான இறைக்கும் துருத்தி, கருமருந்துக் கூடு, வெட்ட வெட்டத் தளிர்க்கும் வேட்கை மரம் உறுகின்ற சுடுகாடு, மெய் போன்று தோன்றிப் பொய்யாய் இருக்கும் சடக்கு என்றெல்லாம் பாடுவார். இஃது ஒரு நிலை.

அதேவேளையில் திருமூலர் போன்றவர்கள் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

**உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.**

இங்கு உடம்பு இறைவனின் கோயில், மெய்ஞ்ஞானம் பெறுவதற்குதவும் கருவி எனவே அதைப் போற்ற வேண்டும் என்கிறார் திருமூலர். அவர் உடம்புக்கு உடம்பார் என்று மரியாதை கொடுப்பதையும் கவனியுங்கள்.

வள்ளுவர் வேறு விதமாக உடம்பின் சிறப்பைப் பேசுவார். உயிரின் பிரிக்க முடியாத பண்பு அன்பு. அன்பு செய்வதற்காகத்தான் பிரித்துப் பார்க்க இயலாதவாறு உயிர் உடம்போடு சேர்ந்திருக்கிறது.

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு (73)**

அதாவது உடம்பின்றி உயிர் அன்பு செய்ய முடியாது. அதற்காகத் தான் நமக்கு இந்த உடம்பு கிடைத்திருக்கிறது. எனவே மனிதன் உடம்பு பெற்றதன் பயன் அன்பு செய்வது என்பது இதன் பொருள். அதாவது நாம் பிறரிடம் அன்பு செலுத்த உதவும் கருவியாகிய உடம்பைப் போற்ற வேண்டும் என்பது வள்ளுவர் உட்கோள். ஏனெனில் உயிரும் உடம்பும் ஒன்று போல் தோன்றினும் முட்டையிலிருந்து பொரித்த குஞ்சு அதை விட்டுப் பறப்பது போல உயிர் சிட்டாக உடம்பை விட்டுப் பறந்துபோய்விடும் என்றும் வேறோரிடத்தில் பேசுவார் வள்ளுவர்.

இவ்வுலக வாழ்வை இன்பமாக வாழ்ந்து அனுபவிக்க நல்ல உடம்பு வேண்டும். அதற்கு அதைப் பேண வேண்டும். ஆனால் மனிதர்கள் இதை உணர்வதில்லை.

சிலர் புகை பிடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள். அமெரிக்கப் பழங்குடிகளிடமிருந்து கற்றுக்கொண்ட புகைப்பழக்கம் ஐரோப்பியர் வழியாக நமக்கு வந்தது. அவர்கள் செய்வதெல்லாம் நாகரிகம் என்று நம்மவர்களும் புகைபிடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் அது தீது என்று கண்டு படிப்படியாக விட்டுவருகிறார்கள். நம்மவரில் பலர் இன்னும் அதை உணராது அதைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். புகைபிடிப்பவர்கள் மற்றவர்களையும் பிடிக்க வைக்கிறார்கள். இதை மறைமுகப் புகைபிடித்தல் என்கிறார்கள். தானும் கெட்டுத் தன் உடன் இருக்கும் பிள்ளைக் குட்டி களையும் கெடுத்து அழிக்கிறார்கள். அவர்கள் திருந்தாவிட்டால் புகையே பகையாக அவர்களை விழுங்கி விடும்.

இதுபோன்றே இன்று மது அருந்துதல் வேகமாகப் பரவி வருகிறது. இந்திய மொழித் திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளை ஆங்கிலப் படங்களில் இருப்பது போல வேண்டும்

### வல்லினம் மிகா இடங்கள்

வல்லினம் மிகும் இடங்களைப் போலவே வல்லினம் மிகா இடங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, இதனையும் வாக்கியங்களில் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

1. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
   விரி + சுடர் = விரிசுடர்
   பாய் + புலி = பாய்புலி
2. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.
   காய் + கனி = காய்கனி
   தாய் + தந்தை = தாய்தந்தை
3. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது.
   தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்
   கதை + சொன்னார் = கதைசொன்னார்

4. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.
   கற்க + கசடற = கற்க கசடற
   வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

5. விளித்தொடரில் வலிமிகாது.
   கண்ணா + பாடு = கண்ணா பாடு
   அண்ணா + கேள் = அண்ணா கேள்

6. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லெழுத்து மிகா.
   அத்தனை + பழங்கள் = அத்தனை பழங்கள்
   இத்தனை + பைகள் = இத்தனை பைகள்
   எத்தனை + காய்கள் = எத்தனை காய்கள்

என்றே புகுத்துகிறார்கள். இது மிகப் பெரிய தவறு. மேல் நாடுகளில் அது அவர்கள் உணவின் பகுதியாக அமைகிறது. ஆனால் இங்கு அப்படி அல்ல. அதற்கு ஒரு சமூக அங்கீகாரம் கிடைக்கச் செய்வதற்காகவும் விளம்பர உத்தியாகவும் இத்தகைய காட்சிகளை அடிக்கடி புகுத்துகிறார்கள் என்று தோன்றுகிறது. இது பண்பாட்டுப் படுகொலை மட்டுமல்ல. அரிய உடம்பையும் நல்ல குடும்பத்தையும் கெடுக்கும் கெடுமதியுமாகும். இது பிற்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மக்கள் இதை உணர்ந்தும் 'மது நஞ்சு' என்ற ஆன்றோர் வாக்கை உணர்ந்தும் உடம்பைப் போற்ற அதை விட வேண்டும்.

இன்று வழக்கத்திற்கு வந்து கொண்டிருக்கும் பாஸ்ட் புட் என்னும் நொடி உணவு, நோய் நொடியை உண்டாக்கும் என்கிற மருத்துவர் கருத்துகளையும் உணர்ந்து உடம்பைப் போற்ற அவற்றையும் ஒதுக்கப் பழக வேண்டும். நாகரிகம் என்று கருதி யாராவது நஞ்சுகளை உண்பார்களா? மோசமான வணிகர்கள் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறார்கள்! விழித்துக் கொள்வது நம் கடமை.

**–முனைவர் கி. நாச்சிமுத்து**

**முனைவர் கி. நாச்சிமுத்து**



இவர் கேரளப் பல்கலைக்கழகம், தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளில் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தற்போது திருவாரூரிலுள்ள மத்திய பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். ஊர்ப் பெயராய்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

## செயல்பாடுகள்

- 'ஆரோக்கியமான உடம்பிலே ஆரோக்கியமான மனமிருக்கும்' இக்கருத்தினை வலியுறுத்தும் பத்திரிகைச் செய்தி ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
- 'ஒழுங்கற்ற வாழ்க்கை முறை பலநோய்களுக்குக் காரணமாகிறது' எனும் கூற்றினை விளக்கும் கட்டுரை எழுதுங்கள்.
- யோகாசனம் உடல்நலனையும், மனநலனையும் எவ்வண்ணம் காக்கிறது என்பதை அறிந்திட, யோகா பயிற்சியாளரை நேர்காணவினா நிரல் தயார் செய்யுங்கள்

## யோகா என்பது எதற்கு?



இன்றைய நாகரிக உலகம் வன்முறை மிகுந்த உலகமாக மாறிவிட்டது. அதில் மனிதன் தன்னுடைய அகவாழ்க்கையை மறந்துவிட்டுப் புறவாழ்க்கையில் முற்றிலுமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவிட்டான்.

மிக அதிகமான மருந்துகளையும், நச்சுப்பொருள் கலந்த உணவுகளையும் பயன்படுத்தி இயற்கையின் விதிமுறைக்கு மாறாகத் தானே தன் உடலைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கிறான்.

இவ்வுலக இன்பங்களை ஒரு வரையறைக்குக் கட்டுப்பட்டு அனுபவிக்கலாம். அளவுக்கு மீறிய நிலையில் மனம்போன போக்கில் அனுபவிப்பதாலேயே நம் உடல் நலம் கெட்டு விடுகிறது.

இந்த உலகம் ஓர் இயந்திர உலகமாக மாறிவருகிறது. அதில் மனிதன் மெல்ல மெல்ல ஓர் இயந்திரமாக மாறி வருகிறான். நவீன விஞ்ஞானத்தின் மூலம் தன் பழுதுபட்ட நுரையீரல்கள், இதயங்களுக்குப் பதிலாக இரும்பு நுரையீரல்கள், ப்ளாஸ்டிக் இதயங்கள் என்று பொருத்திக்கொண்டு விஞ்ஞானத்தின் அடிமையாக வாழ்ந்து வருகிறான். இந்நிலையை மாற்றத்தான் மனிதனுக்கு யோகா தேவைப்படுகிறது.

உண்மையான ஆரோக்கியத்தையும் குறைந்த உணவில் நிறைந்த சக்தியையும் யோகாசனங்கள் தருகின்றன. யோகாசனங்களைத் தவறாமல் செய்து வருபவர்களுக்கு வியாதி அணுகவே அணுகாது.

# ஆடுவோம் பாடுவோம்



## விளையாட்டும் வாழ்வியலும்

**கி**ராமிய விளையாட்டுகள் இயற்கையோடு இயைவன. வீரம், உறுதி, ஊக்கம், உழைப்பு, நட்பு, இரக்கம், நேர்மை, அறம் என்னும் உயர்ந்த பண்புகள் மனிதர் உள்ளங்களில் கிராமிய விளையாட்டுகள் வழியாகவே வளர்க்கப்பட்டன. மேலும் இவ்விளையாட்டுகளால் கட்டுப்பாடு, ஒற்றுமை உணர்வு, பொதுநலப் பண்பு, தலைமைப் பண்பு, ஆளுமை, மன்னிக்கும் குணம், இரக்க உணர்வு, விட்டுக்கொடுக்கும் தன்மைகள் போன்றவை வளர்கின்றன. இவற்றைப் பிரதிபலிக்கும் விளையாட்டுகளை, அறநெறி கூறும் விளையாட்டுகள், அறிவுத்திறமை வளர்க்கும் விளையாட்டுகள், உடற்பயிற்சி விளையாட்டுகள், பொழுது போக்கு விளையாட்டுகள், கலைவடிவம் பெற்ற விளையாட்டுகள் எனப் பல நிலைகளில் வகைப்படுத்தலாம்.

கிராமிய விளையாட்டுகள் மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை. இவ்விளையாட்டுகள் குழந்தைகளின் ஒரு வயதுப் பருவத்துக்குள்ளேயே தொடங்கி விடுகின்றன. குழந்தை உட்காரத் தொடங்கியதும் பெற்றோர் அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களின் துணையுடன் விளையாட்டுகள் ஆரம்பமாகும். ஒரு வயதைத் தாண்டி எழுந்து நிற்கவும் நடக்கவும் ஆரம்பித்தவுடன் தன் வீட்டில் உள்ள பெரியவர்கள் செய்யும் ஒவ்வொரு வாழ்வியல் செயல்பாட்டையும் தன்னுள் கிரகித்துக்கொண்டு அதனைச் செய்ய ஆரம்பிக்கும். இதனால் தான் விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்கின்றனர்.



குழந்தைகள் விளையாட்டுகளை இரு நிலைகளில் பார்க்க முடிகிறது. அவை பெரியவர் துணையோடு குழந்தைகளின் மன உடல் வளர்ச்சிக்காக விளையாடப்படுவதும், ஒரே தரக் குழந்தைகள் குழாமாக இணைந்து விளையாடுவதும் ஆகும்.

இந்தக் குழந்தைகளின் விளையாட்டில் பெற்றோரும் குறிப்பாக அம்மா, மூத்த சகோதரிகள் பங்கு வகிப்பதுண்டு. உடல் வளர்ச்சி, உடல் பலம், நடத்தல், ஓடுதல், சப்தமிடுதல், பேசுதல், கேட்டல் இவற்றிற்கான பயிற்சிகளே விளையாட்டாக அமைகின்றன. இங்குப் பெற்றோர் அல்லது தாத்தா, பாட்டி போன்றோர் குழந்தைகளுக்கு விளையாட்டுகளை நடத்திக் காட்டும்போது நற்பழக்கங்களையும் சேர்த்தே போதிக்கிறார்கள்.

உதாரணமாக, கை வீசம்மா கை வீசு, சாஞ்சாடம்மா சாஞ்சாடு, சப்பாணி கொட்டம்மா, 'நண்டூருது', 'நரியூருது', கிச்சிலு பிச்சிலு போன்ற பாடல்களைப் பாடும்போதும், சில செய்கைகளைக் காண்பிக்கும்போதும் குழந்தைகள் கைகளை வீசுவதையும்,

உடலை அசைப்பதையும், கைகளைத் தட்டுவதையும் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பதையும் பார்க்கலாம். குழந்தை தன் உடலின் பாகங்களை அறிந்துகொள்வதற்கு விளையாட்டுகள் மூலம் பயிற்சி பெறுகின்றது. மேலும் நிலா நிலா ஓடி வா, மழையே மழையே வா வா, தம்பி தம்பி என்ன வேண்டும்... போன்ற பாடல்கள் உலகு சார்ந்த அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும்.

பயறு பொறுக்குதல், புன்னைக்காய்ப் பொறுக்குதல், வடைபாயாசம், முயல் துள்ளல், கூட்டாஞ்சோறு, தீமூட்டுதல், தோசை சுடுதல், கோழி பற பற போன்ற சிறு விளையாட்டுகள் எண்ணுதல், ஓடுதல், வீட்டுவேலைகள் செய்தல் போன்ற பயிற்சிகளை அளிக்கின்றன. உதாரணமாக வலக்கை முட்டியை இடது உள்ளங்கையில் வைத்து கீரை கடைவது போல் செய்து, பின் இருக்கும் பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுப்பது போல் விளையாடுவது கீரை விளையாட்டு ஆகும். இது குழந்தைகளின் வாழ்வியல் விளையாட்டு பெரும்பாலான குழந்தை விளையாட்டுகளில் ஆண்- பெண் பாலின பேதங்கள் இல்லை.

பெண் குழந்தைகள் அம்மாவைப் போல் சேலை கட்டவும். ஆண் குழந்தைகள் அப்பாவைப் போல் வேட்டி கட்டவும் செய்வதோடு அவர்களைப் போல் நடந்தும் விளையாடும். பேசத் துவங்கியதும் பெரியவர்கள் எவராவது ஒருவரின் பேச்சைப்போல் பேசி விளையாடும். இரண்டு வயதாகும்போது சிறுகுழந்தைகள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் ஒருவரை நீ அம்மா, நான் அப்பா இவர்கள் பிள்ளைகள் எனப் பிரித்துத் தாங்கள் அமர்ந்திருக்கும் இடத்தை ஒரு வீடுபோலப் பாவித்து அங்கே நடப்பவைப் போன்று சமையல் செய்யவும். அதைப் பரிமாறவும் செய்வார்கள். இவ் விளையாட்டைக் 'கஞ்சி கறி வைத்து விளையாட்டு' என்று குழந்தைகள் கூறுவார்கள்.

இத்தகைய விளையாட்டுகள் குழந்தைகளுக்குத் தங்கள் எதிர்கால வாழ்வைத் திட்டமிடுவதற்கும். அதற்கான பயிற்சிகளைப்

7. இரட்டைக்கிளவியிலும் அடுக்குத் தொடரிலும் வலி மிகா.
   கல + கல = கலகல
   பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

8. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.
   அவை + சென்றன = அவை சென்றன
   இவை + செய்தன = இவை செய்தன

9. அது, இது என்னும் சுட்டுகளின் பின் வல்லினம் மிகாது.
   அது + பறந்தது = அது பறந்தது
   இது + கடித்தது = இது கடித்தது

10. எது, யாது என்னும் வினாச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.
   எது + பறந்தது = எது பறந்தது?
   யாது + தந்தார் = யாது தந்தார்?

பெறுவதற்கும் தயார்படுத்தும். ஆயுள் முழுக்க ஒரு மனிதன் செய்யப்போகும் காரியங்களுக்கு இத்தகைய குழந்தைப் பருவ விளையாட்டுகள் அஸ்திவாரமாய் அமைகின்றன.

வாழ்வைப் பிரதிபலிக்கும் விளையாட்டுகளால் குழந்தைகள் மனதளவில் பக்குவப்படுகிறார்கள். யாருடன் எப்படிப் பழக வேண்டும், ஒருவருக்கொருவர் நேசித்து விட்டுக்கொடுத்து வாழ்வதெப்படி, வாழ்க்கையில் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும், தத்தமது கடமைகள் என்ன என்பனவற்றைத் தங்கள் மனங்களில் ஆழப் பதிய வைத்துக்கொள்ள இவ்விளையாட்டுகள் துணைபுரிகின்றன.

சிறுவர் விளையாட்டுகளில் சிறுவர்கள் மட்டும் விளையாடும் விளையாட்டுகளும், சிறுமிகள் மட்டும் விளையாடும் விளையாட்டுகளும், இருபாலரும் இணைந்தே விளையாடும் விளையாட்டுகளும் காணக் கிடக்கின்றன. பத்து வயதைக் கடந்தபிறகு பெரும்பாலும் சிறுமிகள் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடக் கூச்சப்படுவதாகக் கூறுகின்றனர்.



சிறுவர் விளையாட்டுகளில் ஓடிப்பிடித்து விளையாடுதல், நொண்டி விளையாடுதல், பந்துகளைப் பயன்படுத்தி விளையாடுதல். வீட்டருகில் இயற்கையாய்க் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி விளையாடுதல் போன்றவையே அதிக இடம் பிடிக்கின்றன.

இவற்றிற்கு எடுத்துக்காட்டாக ஒரு விளை யாட்டைக் காண்போம்.

**கூந்த வண்டி**

இது பனைத்தொழில் சார்ந்த குழந்தைகளின் விளையாட்டாகும். பனை மரத்திலிருந்து கிடைக்கும் நுங்கு இன்றும் குளிர்ச்சி தரும் உணவாகப் பயன்படுவதைக் காணலாம்.

நுங்கிலிருந்து உண்பதற்கான பகுதியை எடுத்துவிட்டபிறகு மீதம் உள்ள பகுதி கூந்தல் எனப்படும். இரண்டு கூந்தல்களை எடுத்து, ஓரடி அளவுள்ள வலுவான குச்சியின் இரு முனைகளையும் சீவிக் கூர்மைப்படுத்தி அதில் கோர்த்து வண்டிச் சக்கரம்போல் பொருத்தி, கவைக்கோல் (கவட்டைக்கம்பு) கொண்டு அதைத்

தள்ளிச் செல்வார்கள். சிறுவர்கள் இதைத் தள்ளிச் செல்வதில் வேகப் போட்டியும், மோதல் போட்டியும் கூட நடப்பதுண்டு. இரு காளைகள் ஒன்றோடொன்று தலையால் முட்டித் தள்ளுவதைப் போன்று, பனங்காய் வண்டியை மோதி விளையாடுவார்கள். மோதலில் இணைப்புக் குச்சி ஒடிந்தாலோ, காய்கள் கழன்று விட்டாலோ தோற்றதாகப் பொருள். பனங் காய்ப் பருவத்தில் (கோடையில்) இந்த விளையாட்டு வீதிக்கு வரும். கலித்தொகையில், மருதக் கலியைப் பாடிய மருதன் இளநாகனார்,

**பெருமடற் பெண்ணைப் பிணர்ந்தோட்டுப்**
**பைங்குரும்பைக்**
**குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்**
**பெருமணித் திரண்டேர்க் குறுமக்கள் நாப்பண்**
**அகனமர் மீள்தருவா னாகப் புரிஞெகிழ்பு**

**..........................................................**

**(கலித்தொகை, 83)**

என்று பனங்குரும்பை (நுங்கு) விளையாட்டு குறித்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகள் தேர் உருட்டி விளையாடும் பழக்கம் முற்காலத்தில் இருந்ததற்கான சாட்சியங்கள் இலக்கியங்களில் ஏராளம் உள்ளன.

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்து இன்புறார் ஆயினும் கையில்**
**ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல.**

**(குறுந்தொகை – 61)**

இதுபோல் பெரும்பாணாற்றுப்படையில் மருதநிலத்து ஊர்களில் பெறும் உணவுகள் பற்றிக் கூறுகையிலும் குழந்தைகள் தேர் இழுத்து விளையாடுதல் குறிப்பிடப்பட்டுள்ளது. (பெரும்பாண் 249) தேர் உருட்டி விளையாடும் நிலையின் இன்னொரு வடிவமே கூந்த வண்டியாகும். நுங்கு கிடைக்காத காலகட்டத்தில் டயர் உருட்டுதல், வட்டவடிவக்

### தேசிய விளையாட்டு தினம் ஆகஸ்ட் 29, 2013

இந்தியாவில் ஆண்டு தோறும் ஆகஸ்ட் 29ம் தேதி தேசிய விளையாட்டுத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தத் தினம், நாட்டின் தேசிய விளையாட்டான ஹாக்கியில் சாதனை படைத்த தியான் சந்த் நினைவாக அவரின் பிறந்த தினத்தில் கொண்டாடப் படுகிறது.

தியான் சந்த் 1905ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 29ஆம் உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபுரத்தில் பிறந்தார். இவரின் தந்தை சாமேஸ்வர் தத்சிங், இந்திய ராணுவத்தில் பணி புரிந்தார். அவர் ராணுவ ஹாக்கி அணிக்காக விளையாடி இருக்கிறார். அரசுப் பணி என்பதால் சாமேஸ்வர் தத் சிங் பல ஊர்களுக்குப் பணி மாற்றம் பெற்றார். இதனால் தியான் சந்தால் சரிவர கல்வி கற்க முடியவில்லை.

சிறுவயது முதல் தியான் சந்துக்கு வலு தூக்குவதில்தான் அதிக ஆர்வம், 1922ஆம் ஆண்டு ராணுவத்தில் தியான் சந்த் சேர்ந்த பிறகே அவருக்கு ஹாக்கி மீது ஓர் ஆர்வம் பிறந்தது. அப்போது அவருக்கு வயது 16. அப்போது ஹாக்கி விளையாட்டில் சாதனை படைக்க வேண்டும் என்கிற ஆசையை மனதில் இருத்திக் கொண்டார். 1926 வரை இந்திய ராணுவ அணி சார்பில் ஹாக்கி போட்டி களில் பங்கேற்று விளையாடினார். 1934இல் தியான் சந்த் இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஆக உயர்ந்தார்.

கம்பிகளை உருட்டுதல் போன்றவை நிகழ்த்தப்படுவதைக் காணலாம்.



இவ்விளையாட்டு வேகமாக நடக்கவும் ஓடவும் பயிற்சியளிப்பதோடு சிறுவர்களின் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது. அதோடு சிறந்த தொழில்நுட்பப் பயிற்சி யையும், கற்பனைத் திறனையும், மூலப் பொருட்களைத் தானே தேடிக் கண்டு பிடித்துத் தயாரித்து ஓட்டுகிற திறனை யும் உருவாக்குகிறது.

விளையாட்டுகள் குழந்தைகளிடையே குழு உணர்வையும் ஒற்றுமையையும் உருவாக்குகிறது. அதோடு விழிப்புடன் இருத்தல் மனப்பான்மையையும் வளர்க்கிறது.

**- குமரி ஆதவன்**

**குமரி ஆதவன்**

இயற்பெயர் செப. ஜஸ்டின் பிரான்சிஸ் கன்னியாகுமரி மாவட்டம் குமாரபுரத்தைச் சார்ந்தவர். கவிஞர், பட்டிமன்ற பேச்சாளர். 'எரிதழல் கொண்டுவா', அருமை மகளே, ரத்தம் சிந்தும் தேசம் போன்ற நூல்களைப் படைத்துள்ளார். இவரது குலைகுலையா முந்திரிக்கா என்ற நூலிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- நாட்டுப்புற விளையாட்டுகளில் ஏதேனும் ஒன்றின் விளையாடும் முறை குறித்து எழுதுங்கள்.
- விளையாட்டுத் தொடர்பான பழமொழிகளைத் தொகுத்து எழுதுங்கள்.

# இலட்சியம் தோற்பதில்லை

இங்கிலாந்தில் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர். வேகமும் விறுவிறுப்பும், மதியூகமும் மட்டற்ற ஆர்வமும் நிறைந்த ஆட்டக்காரர். செஸ்டர் என்பது அவர் பெயர்.

சிறப்பாக அவர் ஆடிக்கொண்டுவந்த திறமையைக் கண்டு, அவரது மாநிலத்தின் பிரதிநிதியாக ஆடுகின்ற வாய்ப்பினைப் பெற்றார். 1912ஆம் ஆண்டு அது. ஒர்செஸ்டர்ஷயர் எனும் குழுவில் ஒரு ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரபலமாக விளையாடிக்கொண்டிருந்தார் செஸ்டர்.

இன்னும் அதிகத் திறமையை வளர்த்துக்கொண்டு, இங்கிலாந்து நாட்டின் சார்பாக ஆடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஓர் இனிய இலட்சியத்துடன் விளையாடிவரும் நாட்களிலேதான், எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அவர் வாழ்க்கையிலே நடைபெற்றது.

இராணுவ வீரராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றார். அப்பொழுது மத்தியகிழக்குப் பகுதியிலே போர் ஏற்பட்டதால், போர்க்களத்தில் பணியாற்றவும் செஸ்டர் போகவேண்டியிருந்தது. போர்க்களத்திலே போரிடும்பொழுது, செஸ்டரின் இலட்சியமே புதையுண்டுபோகும் வகையிலே, மீண்டும் ஒரு பயங்கர சோதனை போன்ற நிகழ்ச்சி நடந்துவிட்டது.

ஆமாம். செஸ்டர் தமது வலது கை மணிக்கட்டுப் பகுதியை இழக்க வேண்டிய கொடுமையான நிலைமைக்கு ஆளானார். வலது கையில் பாதி போனபிறகு, எப்படி கிரிக்கெட் விளையாட முடியும்? கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்த புகழ்பெற்றுத் திகழ வேண்டும் என்ற லட்சியம் மட்டும் பாழாகவில்லையே! கிரிக்கெட் ஆட முடியாது என்ற அவலநிலையல்லவா ஏற்பட்டு விட்டது.

வெற்றிவாகை சூடித் தரவேண்டிய வலதுகை போனதால், செஸ்டர் வாடி வருந்தி, வேதனையில் படுத்துவிடவில்லை. என்னுடைய பெயர் கிரிக்கெட் ஆட்டத்தில் நிலைத்து நிற்க வேண்டும் என்பது தானே எனது இலட்சியம். விளையாடித்தான் புகழ்பெற வேண்டுமா என்ன? வேறு வழியிலும் புகழ்பெற

முடியுமே என்று திடமானார்.

1912ஆம் ஆண்டில் அவர் கையிழந்தவராக ஆனார். அதன்பின், பத்தாண்டுகள் கிரிக்கெட் விதிகளையும், முறைகளையும், தவறு நேரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கசடறக் கற்றார். ஆட்டத்தைப் பிழையற நடத்திக் கொடுக்கும் நடுவராகத் தேர்வு பெற்றார்.

1922ஆம் ஆண்டு அவர் கிரிக்கெட் நடுவராகத் தன் பணியைத் தொடங்கினார்.ஏறத்தாழ 1000 முதல்தர கிரிக்கெட் போட்டிகளுக்கு நடுவராக விளங்கினார். 48 டெஸ்ட் மேட்சுகளுக்கும் நடுவராகப் பணியாற்றினார்.

இவ்வாறு 30 ஆண்டுகள் கிரிக்கெட் நடுவராகப் பணியாற்றி, கிரிக்கெட் ஆட்டத்தில் மட்டுமல்ல. உலகச் சரித்திரத்திலும் சிறந்த நடுவர், மரியாதைக்குரிய நடுவர், திறமையான நடுவர் என்ற புகழுடன் 1955ஆம் ஆண்டு நடுவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். உள்ளத்தில் உறுதியும் உண்மையான உழைப்பும் இருந்தால், இலட்சியம் என்றும் தோற்பதில்லை என்ற சொல்லுக்கு சான்றாகத் திகழும் செஸ்டரை நாமும் பாராட்டுவோம்.

**-டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**



இவர் விளையாட்டுத் தொடர்பான இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். ‘விளையாட்டுகளின் விதிகள்’, விளையாட்டு அகராதி, சடுகுடு ஆட்டம் என்பன அவற்றுள் சில. இப்பாடப்பகுதி விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

**செயல்பாடுகள்**

- ‘இலட்சியம் என்றும் தோற்பதில்லை’ எனும் கருத்தை உணர்த்தும் நிகழ்வுக் குறிப்பு ஒன்றை எழுதுங்கள்.
- ‘விளையாட்டில் பெறும் வெற்றியும் வேலைவாய்ப்பும்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

# விளையாட்டு வீராங்கனை



வயக்காட்டில் வியர்வை சிந்தி
உடல் வற்றி உழைத்து வாழும்
உழைப்பாளர் தம்பதிக்கு
ஒரே மகளாய்ப் பிறந்தேன்.

மகன் இல்லாக் குறைபோக்க
மகள் எனக்கு ஆசையோடு
ஆண்பிள்ளை ஆடை வாங்கி
அணிவித்து மகிழ்ந்தார்கள்.

பள்ளிப் பருவம் எட்டிய என்னை
புத்தகப் பை முதுகில் மாட்டி
பள்ளி சாலைப் பக்கம் கொண்டு
பக்குவமாய்ச் சேர்த்தார்கள்.

ஏழ்மைக்குப் பிறந்த பயன்
மிதிவண்டிக் கனவோடு
ஓட்டமும் நடையுமாய்
பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தேன்

அன்று...
என் வேகநடைப் பயணத்திற்குக்
கிடைத்தது வாய்ப்பு, மாவட்ட அளவிலான
ஓட்டப் பந்தயப் போட்டி,
உற்சாகமாய்க் கலந்து கொண்டேன்.

முதல் வெற்றியின் சுவையை - இந்த
ஏழை மாணவியின் திறமையைப்
பள்ளி முழுக்கப் புகழ்ந்தார்கள்
ஊர் முழுக்கப் பேசினார்கள்.

பள்ளிப் படிப்பு முடிந்து போக
சிரமப்பட்டுப் பணம் புரட்டி
உயர்கல்வி கற்க என்னைக்
கல்லூரிக்கு அனுப்பினார்கள்.
நாட்கள் நகர அன்று
அறிவிப்பு வெளியானது
இந்திய அளவிலான மாரத்தான் ஓட்டம்
கலந்து கொண்டேன் நம்பிக்கையோடு.

ஓடினேன், ஓடினேன்
வெற்றி.... முதல் இடத்தில் வெற்றி...
மகிழ்ச்சியில் திளைத்தேன்
உற்சாகத்தில் கரை புரண்டேன்.

**- கவிஞர் ஜெ. தனுசு**

**செயல்பாடுகள்**

- தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர்கள் - வீராங்கனைகளின் படத்தொகுப்பும், தொடர்பான செய்தித் தொகுப்பும் உருவாக்குங்கள்.
- உடல் நலம், மனநலம் காப்பதில் நம் உணவுப் பழக்கங்களும், உடற்பயிற்சியும், விளையாட்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை உணர்த்திட விழிப்புணர்வு முகாம் நடத்துங்கள்.

அலகு 5

# சமூகச் சீர்திருத்தம்

மானிட சமூகம் தன் வளர்ச்சிப் படிநிலைகளில் கலாச்சாரம் பண்பாடு இவற்றைக் கண்டு முன்னேறியுள்ளது. ஆனாலும் பல்வேறுபட்ட தளங்களில் மனித இனங்களில் வேற்றுமைகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவி வருகின்றன. மனித குலத்தில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக உலகில் பல்வேறு இயக்கங்கள் / போராட்டங்கள் எதிர்க்குரல்கள் எழுந்துள்ளதைக் காண்கிறோம். சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகவும் மனிதகுல நல்வாழ்வுக்காகவும் அனைத்து மனித விடுதலைக்காகவும் பல்வேறு சான்றோர்கள் பங்காற்றியுள்ளனர். அவர்களைக் குறித்து மாணவர்கள் அறிந்துகொள்ள இவ்வலகு துணைபுரியும்.

இவ்வலகில் மூன்று கருத்தலகுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் வாயிலாகச் சாதி அடக்குமுறைகள், போராட்டங்கள் குறித்த செய்திகள், அய்யங்காளி, நாராயண குரு போன்றோர் மறுமலர்ச்சிப் போராட்டங்கள், குழந்தைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள். சமூக மாற்றத்தின் தேவைகள், அறைகூவல்கள் போன்றவை குறித்த கருத்துகளை மாணவர்கள் பெறுவர்.

### முதன்மைக் கற்றல் அடைவுகள்

- கவிதை, கதை, நாவல் போன்ற படைப்பிலக்கியங்களில் காட்டப்படும் ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விவாதிக்கிறார்கள். விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி குறிப்பிடும் வாழ்க்கை விழுமியங்களைப் பாராட்டியும் மேம்படுத்தியும் குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- மறுமலர்ச்சி நாயகர்கள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கிறார்கள். வரலாற்றுக் குறிப்புகள் எழுதுகிறார்கள்; நடிக்கிறார்கள்.
- பாடப்பகுதி சுட்டிக்காட்டும் நற்கருத்துகளை உள்வாங்குகிறார்கள்; அதற்கேற்பச் செயல்படுகிறார்கள்.

# சுவடுகள்



## சமுதாயத்தில் சாதியும் மதமும்

இந்தியாவில் 20 ஆம் நூற்றாண்டில் சாதி, மதம் ஆகியவற்றின் செல்வாக்கு வலுவடைந்தது என்ற கருத்துடன் மாறுபடுபவர்கள் யாரும் இல்லை.

பாரம்பரிய முறையில் பார்த்தால், பொதுமக்களின் வாழ்க்கையில் சாதி, மதம் ஆகியவற்றின் பங்கானது திருமணம், குழந்தை பிறப்பு, இறப்பு மற்றும் வாழ்க்கையின் முக்கியமான நிகழ்ச்சிகள் ஆகிய சந்தர்ப்பங்களுக்கு உட்பட்டவையாக உள்ளன. இந்தச் சந்தர்ப்பங்களின் போது கடைப்பிடிக்கப்படுகின்ற சடங்குகள் புரோகித வகுப்பைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்டவையாகும். இவர்கள் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களின் அப்பாவித்தனத்தைப் பல்வேறு முறைகளில் பயன்படுத்திக்கொள்பவர்கள்.

19ஆவது நூற்றாண்டுச் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் சமுதாயத்தை மதச்சார்பற்ற மற்றும் பண்பு நயம் மிக்க வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல முயன்றன. சீர்திருத்த இயக்கங்களின் உழைப்பும் அதன் பயன்களும் பொதுவாக மத்தியத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களையே சென்றடைந்தன. அவர்கள் மேற்கத்திய நாடுகளின் காலனி ஆட்சி மூலமாகத் தாராளவாதத்தை உள்வாங்கிக் கொண்டவர்களாவர். இதன் காரணமாக, சமுதாயத்தில் மிகக் குறைவானவர்களே சீர்திருத்த இயக்கங்களை அணுகினர். எனவே மக்களில் பெரும்பகுதியினர், பழமைவாதச் செயல்பாடுகளையும் மூடத்தனமான சடங்குகளையும் கடைப்பிடிப்பதைத் தொடந்தனர். அதே சமயத்தில் பாரம்பரியச் சமுதாயத்தில் மாற்றங்கள் வேண்டுமெனச் சில எழுச்சிகள் ஏற்பட்டன. ஆனாலும் அவற்றின் தாக்கம், நன்கு நிறுவப்பட்டுவிட்ட சாதியரீதியான செயல்பாடுகளையும், மதரீதியான மூடத்தனங்களையும் வெல்லுமளவிற்கு வலுவானதாக இருக்கவில்லை.

கேரளாவில் நிலவிய சூழல் இந்தியாவின் சூழல்களிலிருந்து அப்படியொன்றும் வேறுபட்ட தன்மையுடையதாக இல்லை. அப்படி நாட்டின் ஏனைய பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டதைக் காட்டிலும் மோசமானவையாகவே இருந்தன.

தீண்டாமை என்பது உண்மையில் நாடு முழுவதிலுமான சாதிய முறையின் ஒரு பொதுவான நடைமுறையாகும். ஆனால் சாதிய புறக்கணிப்பு என்பது கேரளத்தில் அளவுக்கதிகமாக இருந்தது. உதாரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் காற்று பட்டாலே தீட்டு என்று கருதி அவர்களைத் தொலைதூரத்தில் நிறுத்திவைக்கும் கொடுமை கேரளத்தில் மிகக் கடுமையாக இருந்தது. இதுபோல் வேறு எந்த மாநிலத்திலும் இருந்ததில்லை.

19 ஆவது நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட மறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் அப்போது நிலவிய சாதிய அடிப்படையிலான

### சேரநாடு



வடக்கே வேங்கடமலைக்கும் தெற்கே கன்னியாகுமரிக்கும் கிழக்கே வங்காள விரிகுடாவுக்கும் மேற்கே அரபிக்க டலுக்கும் இடைப்பட்ட பகுதியே பண்டைய தமிழகம். இதனை 'வடவேங் கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என்பார் தொல்காப் பியனார்.

மூடநம்பிக்கைகளையும் குறிவைத்தன. கேரளத்தில் இந்த இயக்கங்களின் தோற்றம் மிகத் தாமதமாகவே ஏற்பட்டது.

கேரளத்தில் நாராயணகுரு, பொய்கையில் யோகன்னான் மாக்தி தாங்கல் மற்றும் பலரின் இயக்கங்களின் மூலம் தெளிவான சீர்திருத்தம் நிகழ்ந்தது. இருந்தபோதிலும் அவர்களின் முயற்சிகள் அவர்கள் சார்ந்த குறுகிய வகுப்பு மக்கள் சமுதாய எல்லைகளுக் குள்ளே உட்பட்டிருந்தன. மறுமலர்ச்சியையும் சீர்திருத்தத்தையும் நிலப்பிரத்துவ எதிர்ப்பு மற்றும் காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் மிஞ்சிவிட்டன. இந்தப் போராட்டங்கள், சாதிய மற்றும் மத உணர்வுகளை மாற்றுவதற்கான போராட்டங்களிலும் முன்னுரிமை பெற்றன. மிகக் குறிப்பாகக் கலாச்சார, அரசியல் போராட்டங்களுக்கிடையே ஒரு உயிரோட்டமுள்ள தொடர்பு ஏற்படவில்லை.

பண்டைய தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என முப்பெரும் பிரிவுகளாக அமைந் திருந்தது. அவற்றுள் சேரநாடு என அறியப்பட்டது இன்றைய கேரளப் பகுதியாகும். காலத்தில சேரநாடு கோயமுத்தூர் கரூர் வரையிலும் பரவியிருந்ததாக வரலாற்று ஆசிரி யர்கள் கூறியுள் ளனர். அக்காலத் தில் சேரநாடு பொதுவாக மலைநாடு என்றே அழைக்கப்பட்டது. சுசீந்திரம் கல்வெட்டு ஒன்றில் சேரநாட்டை மலை மண்டிலம் எனக் குறிப்பிட் டிருக்கக் காணலாம். பிற்காலத்தில் வந்த அரேபியர்கள் இந்நாட்டின் வடபகுதியை மலபார் என்று குறிப்பிட்டனர்.

கேரளத்தில் கலாச்சாரப் போராட்டங்களில் ஜனநாயக கலாச்சாரப் போராட்டங்களில் ஜனநாயக இயக்கங்கள் வலுவாக நிலை கொண்டன. இதனை வைக்கம் சத்யாக் கிரகம், குருவாயூர் சத்யாக்கிரகம் ஆகிய போராட் டங்களிலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

எனினும் இயல்புக்கு மாறாக, சமூக மற்றும் மதச் சீர்திருத்தங்கள், திரும்பவும் சமூக மற்றும் மதரீதியான மூடத்தனங்களும் பழமைவாதமும் வருவதற்கே வழிவகுத்தன. ஆனால் உண்மையில் இவற்றை ஒழிப்பதையே சமூகச் சீர்திருத்தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

மதச்சார்பின்மை மயமாக்குதல் என்பது நவீன மயமாக்கலின் தவிர்க்க முடியாத இணையாகும். ஏனெனில் அது, சாதிய மற்றும் மதரீதியான செயல்களைப் பொதுவாழ்க்கையின் பொதுவான அடிப்படைச் சக்திகளுக்கு அம்பலப்படுத்தும்.

கேரளத்தில் நவீனமயமாக்கலானது மதச்சார்பின்மை மயமாக் கலுக்கு இட்டுச் செல்லவில்லை. மாறாக நவீனமயமாக்கலானது பொதுஇடங்களில் சாதி மற்றும் மதத்தின் அதிகரித்து வரும் செல்வாக்கையே எதிர்கொள்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில் சாதியும் மதமும் ஒருவருடைய தனிப்பட்ட விவகாரங்கள் என்பது நடைமுறையில் இல்லாமல் போய்விட்டன. அவைகள் பொதுவான செயல்களங்களில் பிரச்சனைகளைக் கையாள்வதற்கான சக்தியாக உருவெடுத்துள்ளன. இது சாதிய மற்றும் மதரீதியான செயல்வரிக்

கொள்கைகளின் சக்தியாக உருவெடுத்துள்ளன. இது சாதிய மற்றும் மதரீதியான செயல்வரிக் கொள்கைகளின் அடிப்படையில் சமுதாயம் பிளவுபடுத்தப்பட்டிருக்கின்ற அளவிற்கு உருவெடுத்துள்ளன.

சாதி, மதம் ஆகியவற்றினுடைய செல்வாக்கின் வளர்ச்சியும் வலுவும் கடந்த காலத்தின் அமைப்பு ரீதியான தத்துவார்த்த ரீதியான மரபுச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்கின்றன. மறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் ஜீவனுள்ள அமைப்புகளாக உருவெடுத்தன. இந்த அமைப்புகள் அந்தந்தச் சாதி மற்றும் மதத்தின் உள் இணைப்பைச் சாதித்தன. இதன் தொடர்ச்சியாக ஸ்ரீநாராயண தர்மபரிபாலன சபா, நாயர் சர்விஸ்சொஸைட்டி, தெய்வப் பிரத்யாக்ஷா சபா போன்ற சாதிய அமைப்புகள், சாதியச் சமூகங்களின் நலன்களுக்காகப் போராட உருவாயின. இந்தச் செயல்போக்கின் விளைவு என்னவெனில், சாதி மற்றும் மதத்தின் அடிப்படையில் ஏற்பட்ட சமுதாயப் பிளவுதான்.

இன்றைக்கு ஒவ்வொரு சாதியைச் சேர்ந்தவர்களும் அமைப்புகளைத் தொடங்கியுள்ளனர். அந்த அமைப்புகள், அரசியலில் அதிகாரக் குழுக்களாகச் செயல்படுகின்றன.

கலப்பு மத ரீதியான உறவுகளின் விஷயத்தைப் பொறுத்தவரையில், நாட்டின் ஏனைய பகுதிகள் இந்து- முஸ்லீம் கலவரங்களை எதிர்கொள்ளும் நிலையில் கூடக், கேரளம் வகுப்புவாத மோதல்களின்றி உள்ளது. அநேகமாக ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களும், கேரளத்தில் நீண்டகால உறவு கொண்டு வாழ்ந்திருந்தினர். அதன் காரணமாக வேறுபட்ட சமூகத்தினருக்கிடையே சகோதரத்துவ உறவுகளுக்கான பாரம்பரியத்தைக் கேரளம் கொண்டிருந்தது என்பதற்கான உரிமையைக் கோர முடியும். இந்நிலைமை மெதுவாக, ஆனால் உறுதியாக மாறிக்கொண்டிருக்கிறது.

**–கே.என். பணிக்கர்**



**செயல்பாடுகள்**

- இன்றைய சமூகத்தில் சாதி, மதக் கலவரங்களால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளைத் திரட்டி விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.
- கேரளச் சமூகத்தில் உட்பட்டிருந்த சமுதாய இயக்கங்கள், சீர்திருத்தத் தகவல்களைத் தொகுத்து எழுதுங்கள்.

## இருட்டறையில் உள்ளதடா

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்.

எல்லார்க்கும் எல்லாம் என் றிருப்பதான
இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்
கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்
இல்லாரும் அங்கில்லை; பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்வான் அங்கே
நல்லாரே எல்லாரும் அவ்வையத்தில்
நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ்சாங்கம்

**-பாரதிதாசன்**

[redacted]



**செயல்பாடுகள்**

- இக்கவிதையில் பேசப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறித்துக் கலந்துரையாடித் திறனாய்வுக் கட்டுரை எழுதுங்கள்.

## கூகை

சடாரென விழுந்த செருப்புக்கால் எத்தில் மூக்கன் கண் முழித்தான். காவக்கார முத்தையாப்பாண்டியன் கையில் கம்புடன் நின்றார். அவக்தவக்கென்று எழுந்துகொண்டவன் கைகட்டிக் குனிந்து பவ்யமாகத் தலைகுனிந்து நின்றான்.

ரெண்டு பயகளும் எங்கல போய்ட்டு வாரீக?

மேலப்பட்டியில் துட்டிக்குப் போய்ட்டு வாரோம்சாமி

துட்டிக்குப் போன ஒங்க தெரு ஆட்களெல்லாம் மத்தியானமே வந்துட்டாகளே, ஒங்க ரெண்டபேத்துக்கு மட்டும் என்னல இம்புட்டு நேரம்?

நாங்க ரெண்டுபேரும் கோயில்பட்டி போயி வாரோம்சாமி

கோயில்பட்டியில என்னல சோலி ஒங்களுக்கு?

....................

சொல்றயா கரண்டக்கால ஒடிக்கவா?

களப்புக்கடையில சாப்பிடப் போனம்

தொரைக வேட்டி சட்டையெல்லாம் தொவச்சு, வெள்ளையும் சொள்ளையுமாப் போயி மத்தவுகளுக்கு சமமா பெஞ்சுமேல ஒக்காந்து களப்புக்கடச் சோறு தின்னீகளாக்கும்,

..................

கேக்கமில்ல, வாயத்தொறந்து சொல்றயால சின்னச்சிரிக்கி விள்ள

மூக்கனின் வயிற்றில் எத்தி மல்லாக்க மிதித்துத் தள்ளினார். முத்துக்கருப்பனைக் கம்பால் தோளில் அறைந்து வயிற்றில் குத்தித் தள்ளினார். இருவரும் தரையில் மல்லாந்து கிடந்தபடி அவர் அடித்த அடிகளைத் தடுத்தார்கள். பலமாகக் கூப்பாடு போட்டார்கள். ஆலமரத்தின் மேலக் கடேசியில் கூடை பின்னிக்கொண்டிருந்த சீனிக்கிழவன் பாய்ந்தோடி வந்தான். முத்தையாப்பாண்டியனின் பாதங்களில் விழுந்து முகம்புதைத்து, கைகள் இரண்டையும் சேர்த்து அவருடைய இரு கால்களை யும் சுற்றிப் பிடித்தபடி தரையில் குப்புறக் கிடந்தான். அவர்கள் இருவரும் எழுந்து வந்து சீனியோடு சேர்ந்து அவருடைய காலைச் சுற்றிப் பிடித்தபடி கிடந்தார்கள்.

ஒங்களுக்குக் கேக்கதோ களப்புக் கடச்சோறு, அதுவும் பெஞ்சுமேல ஒக்காந்து தொரைகளுக்கு ஒய்யாரத்துல சோறு

என்னமோ சாமி, பசங்க செஞ்சுட்டாங்க, நீங்கதான் பொறுத்துப் போகணும்சாமி

வேணும்னா சட்டிய எடுத்திட்டுப்போயி வாங்கிட்டு வந்து மரத்தடியில ஒக்காந்து சாப்பிட வேண்டியதானல

### கைமுக்கு

பண்டைய கேரளத்தில் பொது வான ஒரு நீதி நியாய முறை இருக்கவில்லை. ஒரே குற்றத்திற்கு, சாதி நோக்கி தாழ்த்தப்பட்ட இனத்தவர்க்குக் கடு மையான தண்டனையும், உயர்சாதி எனக் கருதப்பட்டோர்க்கு குறைந்த தண்டனையும் வழங்கப்பட்டன. குற்றவாளி என ஒருவர்மேல் சந்தேகம் ஏற்பட்டால் அதனைக் கண்டறிய, குற்றம் சுமத்தப்பட்டவர் கொதிக்கும் எண்ணெய்யில் கையை முக்கி, அதனுள்ளே இடப்பட்ட நாணயத்தை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுத்த பின் அவரது கை வெந்திருந்தால் அவர் குற்றவாளியாம். இல்லையென்றால் அவர் நிரபராதியாம். இதனைக் '**கைமுக்கு**' என்றனர்.

சாமி... இந்த ஒருதரம் மாப்பு விடுங்கசாமி

வெள்ளையும் சொள்ளையுமாப் போய்ட்டாப்ல நீங்க மேகலத்தாரா ஆகிருவிங்களோ, அதுதான் ஒங்க மூஞ்சியிலேயே எழுதி ஒட்டியிருக்கே சாதிகெட்ட பயகனு, எங்க கயத்தார் மாமா மெனக்கெட்டு ஆளனுப்பி, அது எந்த ஊர்ப் பயகனு பாத்து தாக்கல் சொல்லிட்டுப் போறாரு.

எப்பிடியோ இந்த ஒரு தரம் மாப்பு விடுங்கசாமி

காலவிடுங்கல, எந்திரிங்கல, நாறப்பயகளா. சீனி சொல்றா னேனுதான் விடுறன், இல்ல ஊருக்குள்ள சொல்லி ஒங்கள மரத்துலக் கெட்டி வச்சு உரிஉரினு உரிக்கச் சொல்லிருவன்.

**– சோ.தர்மன்**

[redacted]



**செயல்பாடுகள்**

- சாதி சமய, அடக்குமுறைகளால் நம் சமூகம் சீரழிந்து வருவதைக் குறித்த பதிவுகளைத் தொகுத்து வெளியிடுங்கள்.
- ‘இன்னும் சாதி என்னும் கட்டிலிருந்து சமூகம் மீளவில்லை’ சான்றுடன் விளக்கிக் கட்டுரை எழுதுங்கள்.

## விண்ணப்பம்

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்

சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின்மேல் வெற்றி எமக் கெய்த வேண்டும்

கஞ்சாவை நஞ்சாகக் கருத வேண்டும்
கள்ளொழுகும் கடைவாயை மூட வேண்டும்
அஞ்சாத வீரரெங்கும் தோன்ற வேண்டும்
அகிம்சா தருமமவர் பேண வேண்டும்

என்சாதி உயர்சாதி இழிந்தசாதி
என்றுசொல நாவுமெழா திருக்க வேண்டும்
நெஞ்சாரும் நினைப்பெல்லாம் நிகழ்த்தி நின்றேன்
நின்மலனே இரங்கி நீ அருள்செய் வாயே.

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர வேண்டும்
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்

திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தி னேவா

**– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**


**திருப்படித்தானம்**

திருவிதாங்கூரை ஆண்ட மன்னர் மார்த்தாண்ட வர்மா (1750 ஜனவரி 3ஆம் நாள்) தன் கிரீடம், உடை வாள் போன்றவற்றைத் திருவனந்தபுரத்தில் பள்ளிகொள்ளும் ஸ்ரீ பத்மநாப சுவாமியின் முன்னால் திருப்படியில் சமர்ப்பித்து, இந்நாடும் வேந்தர்களும் ஆட்சியும் அதிகாரமும் எல்லாம் இறைவனுக்கு அடிமை என்று அறிவித்தார். பின்னர் சமர்ப்பித் தவற்றை எடுத்து, இனிமேல், நானும் எனக்குப்பின் வருகின்றவர்களும் பத்மநாபதாசர் (அடிமை) என்ற பெயரிலியே நாட்டை ஆளப்போவதாகவும் பிரகடனம் செய்தார். திருப்படித்தானம் எனக் குறிப்பிடப்பட்ட இந்நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.



**செயல்பாடுகள்**

- கவிமணி காணும் கற்பனை உலகு நனவாக நம் மனதில் ஏற்பட வேண்டிய விழிப்பைக் கட்டுரையாக எழுதுங்கள்.
- ‘விண்ணப்பம்’ கவிதை சுட்டும் சமூகச் சீர்கேடுகளை எடுத்துரைத்து நல்வழிப்படுத்தும் சொற்பொழிவொன்று தயார் செய்யுங்கள்.



## காந்தியுடன் ஒரு தீண்டாமை எதிர்ப்புப் போராளி

**கா**ந்திஜியும் ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் பொருட்டு நாடு முழுவதும் சஞ்சரிக்கத் துவங்கியிருந்தார்.

1937 ஐ ஒட்டி, இந்தியாவின் தென்பாகத்திற்கு வருகை தந்திருந்த காந்திஜியின் செவிகளுக்கு - அய்யங்காளியின் புகழ் எட்டவே அந்த அற்புதமான பண்பாட்டுப் போராளியைத் தரிசிப்பதற்கு விரும்பிய காந்திஜி, அய்யங்காளி வாழும் எழில் நிறைந்த வெங்கானூரை நோக்கி யாத்திரையானார்.

வீட்டையடைந்து அய்யங்காளியைக் கண்ட காந்திஜி, முதன்முதலில் அவரைத் தன் மார்போடு தழுவிக்கொண்டு முத்தமிடுகிறார். பின், காந்திஜி அவரைத் தன்னருகே உட்கார வைக்க, அவர்களுக் கிடையே சம்பாஷணை தொடங்குகிறது.

அய்யங்காளியின் செயல்களைப் பற்றி, நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுடைய செயல்கள் அனைத்தும் நல்லவைகள்தாம்! நானும் உங்களைப் போன்ற ஒரு செயல் வீரனே! நாம் இருவருமே சுதந்திரம் பெறுவதற்காக வேண்டிச் செயல்படக் கூடியவர்களே! உங்களுடைய அறச்செயலைத் தொடர்ந்து செய்க என்ற காந்திஜியின் வார்த்தைகளைக் கேட்ட அய்யங்காளி, பரிச்சயப்பட்டதன் பேரில், ஏதாவது சொல்ல வேண்டும் என, சொல்லு கிறார் போலும்! என்று தன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டார்.

என்றாலும் சரி என, அய்யங்காளி அவர்கள் தலையாட்ட, காந்திஜி மீண்டும் தொடர்ந்தார்.

இங்கேயுள்ள நிலைமை எவ்வாறு இருக்கிறது?

அதைக் கேட்டதும் உடல் புல்லரித்துப் போய் உட்கார்ந்திருந்த அய்யங்காளி,

''மகாத்மாவே, நீங்கள் என்னிடம் காட்டிய கருணையை என்னால் ஒருபோதும் மறக்க இயலாது. பள்ளியில் சென்று படிப்பது வரையுள்ள சுதந்திரத்தை நாங்கள் வென்றெடுத்துள்ளோம். இப்பொழுது அம்பலத்திற்குள் போய், அம்பல வழிபாடு நடத்துவது'' போன்ற சில உரிமை களையும் பெற்றுள்ளோம் என்றார்.


அய்யங்காளியின் பேச்சில் மூழ்கிப்போயிருந்த காந்திஜி,

''இனி வேறென்ன உரிமைகளெல்லாம் தங்களுடைய சனங்களுக்கு வேண்டும்?'' எனக் கேட்டார்.

அதுவா? என்ற அய்யங்காளியின் முகத்தில் பலப்பல எண்ணக் குறியீடுகள் தோன்ற, "என்னுடைய சாதியிலிருந்து, பத்து பி.ஏ., படித்தவர்களைக் கண்ட பிறகு செத்தால் போதுமென்றிருக்கிறது எனக்கு" எனப் பதிலிறுத்தார் அத் தலித் போராளி.

### கேரள தேச வரலாறு

கேரளநாட்டின் பழைய வரலாற்றைக் கூறும் கையெழுத்துப்பிரதி ஒன்று சென்னை அரசுச் சுவடி நூலகத்தில் உள்ளது. இந்நூல் எப்பொழுது, யாரால் எழுதப்பட்டது என்று தெரியவில்லை. இந்நூலில் வரலாறு மட்டுமன்றி வேறுசில பண்பாட்டுச் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. கேரள தேச வரலாறு என அறியப்படும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. நூல் மிகச் சாதாரண நடையில் எழுதப்பட் டுள்ளது.



இப்படியுமுண்டா, ஓர் ஆன்மா எனச் சமூக அக்கறை ததும்பி நிற்கக் கூடிய அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, காந்திஜி ஆச்சரிய மடைந்தார்.

பின், அவர் தோள் மீது கைபோட்டு, ஆசுவாசப் படுத்தினார் காந்திஜி. சற்றும் சமூக அக்கறை யின்றி, தான் தனது குடும்பம் என, மிகக் குறுகிய வட்டத்திற்குள் சுருங்கிக்கொண்டிருக்கும் சுயநலவாதித் தலைவர்கள் கேட்பதைப் போலவோ சாதாரண மனிதர்கள் ஆசுவாசப் படுவதைப் போலவோ, அவர் இருப்பிடமோ பணமோ உயர்ந்த பதவிகளையோ அல்ல விரும்பியது.

அம்மண்ணின் சுயநலமற்ற மகன் விரும் பியதோ, போகும் வழியறியாது, இருளில் முட்டித் திரியக்கூடிய தனது சனங் களுக்குக் கிடைக்க வேண்டிய படிப் பறிவு என்ற மாபெரும் ஒளியின் ஒரு கிரணத்தை மட்டுமே! அதைக் கேட்ட காந்திஜி, “அய்யங்காளி யினுடைய ஆசை சீக்கிரத்தில் நிறைவேறும். செயலைப் பயமின்றித் தொடருக!” என அய்யங்காளிக்குத் தனது அனுக்கிரகத்தை வழங்கினார்.

**–எம். சாலன்**

[redacted]

**செயல்பாடுகள்**

- அய்யங்காளியின் போராட்ட வரலாற்றினைத் தொகுத்து வரிசைப்படுத்துங்கள்.
- கேரள சமூக இயக்கத் தலைவர்களின் படங்களுடன் அவர்கள் தொடர்பான செய்திகளை விளக்கித் தொகுப்பு உருவாக்குங்கள்.

# வேரொடு சாய்ப்போம்

வெண்ணிலவில் குடியேற முயற்சி செய்யும்
விஞ்ஞான யுகமேநம் யுகமென் றாலும்
கண்மூடி வழக்கங்கள் சாதி பேதக்
கற்பனைகள் பிரிவினைகள் போராட் டங்கள்
மண்முட்டை உலகின்றும் ஒழிய வில்லை
மதவெறியும் சண்டைகளும் குறைய வில்லை.
பண்பட்ட சமுதாயம் அமைய வேண்டின்
பாழ்படுத்தும் இவற்றையெலாம் ஒழித்தல் வேண்டும்

ஏற்றத்தாழ் வில்லாத சமுதா யத்தை
இவ்வுலகில் நாம்காண வேண்டு மாயின்
மாற்றுவதை மாற்றித்தான் ஆக வேண்டும்
மாற்றங்கள் இல்லையெனில் வளர்ச்சி ஏது?
நேற்றிருந்த நிலைவேறு! சமுதா யத்தின்
நினைவுகளும் நிகழ்ச்சிகளும் இன்று வேறு
வேற்றுமையால் விளைகின்ற தீமை தன்னை
விரைவில்நாம் வேரொடு சாய்க்க வேண்டும்.

**–சுரதா**


[redacted]



**செயல்பாடுகள்**

- கவிதையின் நயங்களைப் பாராட்டிச் சிறுகட்டுரை எழுதுங்கள்.
- ஏற்றத்தாழ்வில்லாத ஒரு சமூகத்தை உருவாக்க நமக்குள் இன்னும் என்னென்ன மாற்றங்கள் வேண்டும்? பட்டியலிடுங்கள்.

# எழுச்சி



## திரு. நாராயண குரு

**ஸ்ரீ** நாராயண குரு 1856இல் பிறந்தார். திருவனந்தபுரத்தை அடுத்த செம்பழந்தி ஊர் வயல்வாரம் மாடன் ஆசான் - குட்டியம்மை தம்பதிகளின் கடைசிக் குழந்தை அவர். மாடன் ஆசான் ஒரு திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர். அவருடைய மாமா ஒரு நாட்டுவைத்தியர். நடுத்தரக் குடும்பம் அவர் களுடையது.

சுவாமி பிறந்த ஈழவச் சாதி அன்றைய கேரளத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகளில் ஒன்று. அந்தச் சாதி, சமூகத் தகுதிகளில் கிட்டத்தட்ட அன்றைய சான்றோர் சாதிக்கு நிகராக இருந்தது.

அக்காலத்தில் சான்றோர் அனுபவித்த சாதிக் கொடுமைகள் பலவற்றை ஈழவர்களும் அனுபவித்தார்கள். மேல் சாதிக்

காரர்களின் தெருக்களில் நுழையும் உரிமை, கோயில்களில் நுழையும் உரிமை, அரசுப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சேர்க்கும் உரிமை, மேலாடை அணியும் உரிமை ஆகியன இவர்களுக்கும் மறுக்கப்பட்டிருந்தன.

ஈழவர்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளும் கொடுமையானவை. அவற்றில் தலைவரி ஒவ்வொருவரும் செலுத்த வேண்டியது.

இத்தகைய கொடிய சமூகச் சூழலில்தான் நாராயண குரு பிறந்தார். தீண்டத்தகாதவர்களாகக் கருதிய புலையர்களிடம் இளம்வயதிலிருந்தே அவர் அன்பு காட்டத் தொடங்கினார்.

பரம்பரை முறையில் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்ட சுவாமி, 1878 இல் சமஸ்கிருதம் படிப்பதற்காகக் கருநாகப்பள்ளி வட்டத்தில் புதுப்பள்ளி கும்பம்பள்ளி இராமன் பிள்ளை ஆசானிடம் சென்றார். மூன்றாண்டுகள் அங்கே தங்கி சமஸ்கிருதமும் வேதாந்தமும் கற்றார். அக்காலத்திலேயே அவர் தியானத்தில் அடிக்கடி ஆழ்ந்தார்.

சிறிது காலத்தில் சுவாமி தம் அத்தை ஊரான அஞ்சுதெங்குக்கு அருகிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியராகப் போனார். பெரியோர்கள் 1882இல் அவருடைய அத்தை மகளான காளியம்மாளை அவருக்குத் திருமணம் செய்துவைத்தார்கள்.

திருமண வாழ்வில் சுவாமிகளுக்குக் கவர்ச்சியில்லை. சிறிது காலத்தில் அவருடைய தாயாரும், பின் தந்தையாரும் காலமாகவே, சுவாமி வீட்டைவிட்டு வெளியேறினார். பல ஊர்களுக்கும் கோயில்களுக்கும் போனார். தனிமையில் நெடுநேரம் தியானம் செய்தார். இக்காலத்தில் சுவாமிக்குச் சட்டம்பி சுவாமிகள் என்ற சமூகச் சீர்திருத்தவாதியுடனும், தைக்காட்டு ஐயாவு என்ற சுப்பிரமணிய பக்தருடனும் தொடர்பு ஏற்பட்டது. இதனால் சுவாமிக்குச் சுப்பிரமணியர் வழிபாட்டில் ஈடுபாடு ஏற்பட்டது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் சுவாமி ஊர்ஊராகச் சுற்றித் திரிந்தார். சாதி, சமய வேறுபாடு இல்லாமல் எல்லோருடனும் பழகினார். அன்றைய தீண்டத்தகாதவர்களுடன் உணவு அருந்தினார். தமிழ்நாட்டில் திருநெல்வேலி, மதுரை

போன்ற ஊர்களுக்குப் போனார். திருக்குறளையும் இன்னும் சில தமிழ் நூல்களையும் கற்றார்.

கன்னியாகுமரி அருகே உள்ள மருந்துவாழ் மலைக்குச் சுவாமி வந்தார். அங்கு ஒரு குகைக்குள் தங்கித் தவம் செய்தார்.

மருந்துவாழ் மலையில் பெற்ற அனுபவங்களோடு சுவாமி 1888 இல் நாகர்கோவிலுக்கும் திருவனந்த புரத்துக்கும் இடையே இருக்கும் நெய்யாற்றங்கரை அருகேயுள்ள அருவிப்புரம் என்ற ஊருக்குச் சென்றார். குன்றுகள் சூழ, அருவி பாயும் அந்த அழகிய இடத்தைத் தம் சமய - சமூகப் பணிகளைத் தொடங்குவதற்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார்.

31 வயதே நிரம்பிய அந்தப் பிரகாசமான, மெலிந்த இளம் துறவியிடம் மக்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினர். அவர்களைத் தூய்மையாக வாழும்படியும் ஒழுக்கத்துடன் இருக்கும்படியும் சுவாமி அறிவுரை கூறினார். அந்த ஆண்டு சிவராத்திரியன்று அவர் அருவிப்புரம் ஆற்றின் கிழக்குக் கரையில் ஒரு சிவலிங்கத்தை நிறுவினார். பெருமளவுக்கு வைணவ, அய்யப்ப மற்றும் பகவதி வணக்க முறைகள் மலிந்திருந்த அன்றைய திருவிதாங்கூரில் நாராயண குரு ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தது எதிர்ப் பண்பாட்டு நிலையில்தான். கோயில் பூசாரியாகவும் அவர் ஈழவர்களையே நியமித்தார்.

சுவாமி சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. உயர் தெய்வ விக்கிரகங்களை நிறுவும் தகுதியும் உரிமையும் அன்றும் இன்றும் நம்பூதிரி பிராமணர்களுக்கே இருக்கிறது. ஈழவரான நாராயண குரு இதை எப்படிச் செய்யலாம் என மேல் சாதியினர் கேள்வி எழுப்பினர். சுவாமி மிகவும் எளிமையாகப் பதிலளித்தார். நான் பிரதிஷ்டை செய்தது ஒரு ஈழவ சிவனையே. பிராமணர்களின் சிவனையல்ல என்றார்.

### குலசேகரப் பெருமாள்

கலி 3446 வருஷத்திலே குலசேகரப் பெருமாள் திருவஞ்சக்குளம் முக்கால் வட்டம் க்ஷேத்திரம் உண்டு பண்ணினார். பிற்பாடு பதினெட்டு வருஷம் ஆனபோது பெருமாள் இறந்துபோனார். அந்தப் பெருமாள் ராஜ்யத்தை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அதற்குக் காரணம் இன்னொருவேளை ஒருவருடைய ஜனங்கள் வந்து ராஜாவைப் பிரமை பண்ணி சத்யம் தப்பிப்போனால் பிராமணர் பரதேசத்துக்குப் போக வேண்டிவரும். அது வரலாகாது என்று எண்ணிக் கொண்டு எல்லோருக்கும் ஜங்காதம், முக்காதம் வைத்துப் பங்கிட்டுக் கொடுத்தார். ஒருவனுக்கு சத்தியத்தப்பு வந்தால் இந்த கர்ம பூமி சீரணமாய்ப்போம். அப்படி வராமலிருக்க வேண்டுமென்று அந்தக் குலசேகரப் பெருமாள் எண்ணி இப்படிச் செய்தார். (கலி 3446 = கி.பி.345)

**கேரள தேச வரலாறு**

இந்தப் பதில் அன்றைய திருவிதாங்கூர் முழுக்க பிரமாண்டமான எதிரொலிகளைக் கிளப்பிற்று. ஈழவர்களும் அவர்களுக்கும் கீழே உள்ள சாதிகளும் ஒருவித நம்பிக்கையையும் துணிச்சலையும் பெற, மேல் சாதிக்காரர்கள் அதிர்ச்சியும் பொறாமையும் வெறுப்பும் கொண்டார்கள்.

தொடர்ந்து நாராயண குரு பல ஈழவக் கிராமங்களில் சிவன் சிலைகளை நிறுவினார். ஈழவச் சமுதாயத்தினர் பரம்பரை பரம்பரையாக வணங்கி வந்த பத்ரகாளி, மாடன் போன்ற கிராம தெய்வங்களை உடைத்தெறிந்துவிட்டு, அந்த இடங்களில் சிவலிங்க வணக்கத்துக்கு ஏற்பாடு செய்தார். சாமியாட்டம், உயிர்ப்பலி, குறி சொல்லுதல் போன்றவற்றை நிறுத்த அறிவுரை சொன்னார். சமூகத்தின் பொருளாதாரத்தைச் சீரழித்துக் கொண்டிருந்த தாலிக்கட்டு, திரண்டுக்குளி, புளிக்குடி போன்ற பயனற்ற வழக்கங்களையும் நிறுத்தச் செய்தார். பெண்களை மேலாடை அணியும்படி வற்புறுத்தினார். மக்களைத் தூய்மையாக வாழச் சொன்னார். பாரம்பரியத் தொழில்களைப் புறக்கணித்துவிட்டு, கவுரவமான தொழில்களைக் கைக்கொள்ளச் சொன்னார். குருவின் புகழ் திருவிதாங்கூர் முழுவதும் பரவிற்று.

அருவிப்புரத்தில் சுவாமியைக் காணப் பெருவாரியான மக்கள் வரத் தொடங்கினர். அவர்களுடனான தொடர்புகள் வலுப்பெற்றன. குறிப்பாக எளிய மக்களோடு அவருடைய தொடர்பு மேலும் மேலும் வலுப்பெற்றது. மக்களின் நோய்களை மூலிகை மருந்துகள் மூலம் குணப்படுத்தினார். தன் அன்பான சொற்களால் மக்களின் மனப்புண்களை ஆற்றினார். தன் அருள் உபதேசங்களால் அவர்களுக்கு நம்பிக்கையூட்டினார். அளவில்லாக் கருணையால் சமூகத்தில் ஒளியேற்றினார்.

ஒரு சமயம் அருவிப்புரம் ஆசிரம வளாகத்தில் ஒரு வாழைக்குலையை ஒருவன் இரவில் திருடிவிட்டான். ஆசிரம சன்யாசிகள் பிரச்சனையைப் பெரிதாக்கிட, அது நீதிமன்றத்துக்குப் போய்விட்டது. இதைக் கேள்விப்பட்ட சுவாமி கலங்கிப் போனார். அந்த ஏழை மனிதன் அடிக்கப்பட்டு, அவன் அலறுவானானால், அந்தக் காற்று சன்யாசி சுவாசிப்பபற்குத் தகுதியானதல்ல என்று அருவிப்புரத்தை விட்டு வெளியேறினார். அருவிப்புர சன்யாசிகள் நீதிமன்றத்தில் முறையிட்டு, அந்த ஏழையைத் தண்டனையில்லாமல் விடுவித்தார்கள். சுவாமி அருவிப்புரம் திரும்பினார். அருவிப்புரம் ஆசிரமத்தில் அடிக்கடி பலாப்பழம் திருட்டுப் போகுமாம். ஆசிரமவாசிகள் பிரச்சனைகளை அவரிடம் கொண்டு வருவார்களாம். இரவில் பறித்தால் பாம்பு கடித்து விடுமே, பகலில் பறித்துப் போகச் சொல்லுங்கள் என்பாராம் சுவாமி.

### தான நிலங்கள்

பழங்காலத்தில் கோயில்களுக்கு விளை நிலங்கள் தானமாக வழங்கும் முறை எங்கும் பரவலாக இருந்துள்ளது. கோயில் களுக்குத் தேவையான செலவுகளுக்காகவே இவ்வாறு நிலங்கள் தானம் செய்யப்பட்டன. அக்காலத்தில் காசு பணம் அதிகமாகப் புழக்கத்தில் இருக்கவில்லை. நெல் முக்கிய பண்டமாற்றுப் பொருளாக இருந்தது. நெல்லைக் கொடுத்தே ஒவ்வொரு பொருளை யும் வாங்கினர். எனவேதான் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. நிலத்தில் விளையும் நெல்லைக்கொண்டு பொருட்கள் வாங்கிக் கோயில் செலவுகளை நடத்த வேண்டும். இவ்வாறு சிவன்கோயில் களுக்கு விடப்பட்ட நிலங்கள் தேவதானம் எனவும், வைணவக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் திருவிடையாட்டம்

டாக்டர் பல்ப்புவின் முன் முயற்சியால் 1903இல் ஸ்ரீ நாராயண குரு தரும பரிபாலன் யோகம் என்ற அமைப்பு நாராயண குருவின் தலைமையில் தொடங்கப்பட்டது. அமைப்பின் செயலாளர் குமாரன் ஆசான். அமைப்பின் அங்கமாக விவேகோதயம் என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது.

1903 இல் வர்க்கலையில் ஒரு ஆசிரமத்தைத் தொடங்கினார் குரு. அங்கு ஒரு சிவன் கோயிலும் ஏழைகளுக்கான ஒரு பகல் பள்ளிக்கூடமும், குறவருக்கான ஒரு இரவுப் பள்ளிக்கூடமும் உருவாக்கினார். 1908 இல் அங்குச் சாரதா மடம் தொடங்கப்பட்டது. தெல்லிச்சேரியில் அவர் உருவாக்கிய ஜெகந்நாதர் ஆலயத்தில் புலையர் களும் சென்று வணங்கலாம் என அறிவித்தார் குரு. புலையர் விடுதலை வரலாற்றில் இது ஒரு மைல்கல்.

தொடர்ந்து சுவாமி பல ஆலயங்களை நிறுவினார். ஆனால் ஆலயம் பற்றிய அவர் கருத்து நிலை படிப்படியாக மாறத் தொடங்கியது. 1922இல் முருக்கம்புழாவில் அவர் சிலைக்குப் பதில் ஒரு விளக்கைப் பிரதிஷ்டை செய்தார். அதில் உண்மை, கடமை, கருணை, அன்பு ஆகிய சொற்கள் எழுதப்பட்டன. வேறு ஒன்றிரண்டு இடங்களிலும் இது மாதிரியான பிரதிஷ்டைகள் நடந்தன.

சமய ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக நாராயண குரு 1914இல் ஆலுவாயில் ஒரு அத்வைத ஆசிரமம் அமைத்து, அதில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய அனைத்துச் சமயத்தினரும் ஒன்றாய்க் கூடி இறைவழிபாடு செய்வதற்காகப் பொது வழிபாட்டு மண்டபத்தை அமைத்தார். அதோடு ஒரு சமஸ்கிருதப் பள்ளியை நிறுவி, அதில் இந்து - கிறிஸ்தவ - இஸ்லாம் போன்ற எல்லாச் சமய மாணவர்களும் ஒன்றாகத் தங்கியிருந்து படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

எனவும், சமண பௌத்த பள்ளிகளுக்கு விடப்பட்ட நிலங்கள் பள்ளிச் சந்தம் எனவும் வெவ்வேறு பெயர்களால் அறியப் பட்டன. அதுபோன்று பிராமணர் களுக்குத் தானமாகக் கொடுக்கப் பட்ட நிலம் பிரம்ம தேயம் எனப்பட்டது. கோயிலுக்கும் பிராமணர்களுக் குமாகச் சேர்த்துக் கொடுக்கப்பட்ட நிலம் தேவதானப் பிரம்மதேயம் என அறியப்பட்டது. இவ்வாறு கொடுக் கப்படும் நிலங்கள் இறையிலியாகவே கொடுக்கப்பட்டன. இறை என்பது வரியைக் குறிக்கும். இறையிலி நிலம் என்றால் வரியில்லாத நிலம் என்று பொருள்படும்.

மனிதனுக்கு ஒரே சாதி, ஒரே மதம், ஒரே தெய்வம். ஒவ்வொரு மனிதனுக்கென்று ஒவ்வொரு சாதியில்லை. தனியான மதங்களும் தனியான தெய்வங்களும் இல்லை என்று விளம்பரச் சுவரொட்டிகள் தயாரித்து ஆசிரமச் சுவர்கள் முழுவதும் ஒட்டச் செய்தார் குரு.

எளியவர் முன்னேற்றத்தில் குறிப்பாக அன்று அடிமைகளாக நடத்தப்பட்ட புலையர், பறையர்களின் முன்னேற்றத்தில், மிகுந்த ஈடுபாடு காட்டினார் சுவாமி. 1915 இல் நெய்யாற்றங்கரை

அருகிலுள்ள ஒரு பள்ளியில் சில புலையர்கள் தங்கள் குழந்தைகளைச் சேர்த்தார்கள். மேல் சாதிக்காரர்களால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பெருங்கலவரம் உண்டாயிற்று. கலவரத்தின்போது நாயர்கள் பக்கம் ஈழவர்கள் சேர்ந்து புலையர்களைத் தாக்கினார்கள்.

கலவரத்தைக் கேள்விப்பட்ட மகான் அய்யங்காளி அங்கே வந்தார். அப்போது அருவிப்புரத்தில் தங்கியிருந்த குருவை அவர் சந்தித்துப் பிரச்சனையைத் தெளிவுபடுத்தினார். மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து, பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வருமாறு சுவாமி அய்யங்காளிக்கு அறிவுரை சொன்னார். எஸ்.என்.டி.பி (ஸ்ரீ நாராயண குரு தரும பரிபாலன யோகம்) தலைவர்களையும் தொண்டர்களையும் அழைத்துப் பாரபட்சம் இல்லாமல் மனித மதிப்புகளைப் பாதுகாக்கும்படி ஆணையிட்டார். பிரச்சனை அமுங்கிவிட்டது. புலையர் பெண் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது பற்றி அப்பள்ளியில் பிறகு பிரச்சனை எழவில்லை.

சுவாமியின் முயற்சியால் படிப்படியாக ஈழவர் பள்ளிகளில் புலையர் குழந்தைகள் அனுமதிக்கப் பட்டனர்.

1923இல் கொல்லத்தில் குமாரன் ஆசான் தலைமையில் நடந்த எஸ்.என்.டி.பி.யின் மாநாட்டிலும் ஈழவர்கள் தீண்டாமை சட்டத்தைப் புறக்கணிப்பது என்று முடிவு செய்தனர்.

1924இல் தொடங்கிய வைக்கம் தெரு நுழைவுச் சத்யாகிரகம் இந்தியாவைக் குலுங்க வைத்தது. சத்யாகிரகப் பந்தலுக்குக் கதர் அணிந்து கொண்டு சுவாமி வந்தார். அவருக்கு மூவர்ணக் கதர் மாலை அணிவிக்கப்பட்டது. எல்லா ஏற்பாடுகளையும் சுற்றிப் பார்த்தார் சுவாமி. அடுக்களையில் புலையர் குழந்தைகளைப் பார்த்ததும் அவருக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. சுவாமியின் வருகை வைக்கம் சத்யாகிரகத்துக்கு வீச்சையும் வலுவையும் தந்தது.

ஆங்கில அரசு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவானது என்ற எண்ணம் சுவாமிக்கு இருந்தது. எனவே சுவாமி ஓர் அளவுக்கு ஆங்கில ஆட்சிக்கு ஆதரவானவராக இருந்தார். முதல் மகாயுத்தத்தின் போது ஆங்கிலேயரின் வெற்றிக்காகக் கடவுளிடம் வேண்டிக்கொள்ளும்படி தன் சீடர்களுக்குச் சொன்னார். ஆங்கிலேயர்களே எங்களுக்குச் சன்னியாசியாகிட

### தாயமுறை

ஒரு குடும்பத் தலைவருக்குப் பின் அவரது அதிகாரம், சொத்து போன்றவற்றிற்கு யார் அவகாசிகள் (உரிமையுடையவர்) என்பதை நிர்ணயிக்கும் முறையே தாயமுறை. அக்காலத்தில் இரண்டுவிதமான தாயமுறைகள் நடை முறையில் இருந்தன. ஒன்று மக்கத்தாயம் (மக்கள் தாயம்) இன்னொன்று மருமக்கத்தாயம் (மரு மக்கள் தாயம்) குடும்பத் தலைவருக்குப் பின்னால் எல்லா உரிமைகளும் மகனுக்கு உரியது என்றால், அது மக்கத்தாயம். மகனுக்கு உரிமையில்லாமல் தலைவரின் சகோதரியின் மகனுக்குத்தான் (மருமகன்) அவ்வுரிமைகள் என்றால் அது மருமக்கத் தாயம். மருமக்கத்தாயம் பல நாடுகளிலும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அனுமதி வழங்கியவர்கள். எனவே ஆங்கிலேயர்களே எங்களது குருக்கள் என்றார். இதன் பொருளைச் சீடர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் விளக்கினார்.

இராமனின் காலத்தில்கூட சன்னியாசி ஆகும் உரிமை சூத்திரர்களுக்கு இல்லை. இந்து மன்னர்கள் மனுஸ்மிருதிப்படி தான் ஆட்சி செய்தார்கள். ஆனால் இப்போது நாடு ஆங்கில ஆட்சியின் கீழ் இருக்கிறது. அதனால்தான் நம்மால் சன்னியாசியாக முடிந்தது. எனவே, அவர்களுக்குக் குருவின் தகுதியை அளிக்க வேண்டும்.

மதத்தைப் பற்றியும் சுவாமிக்கு வித்தியாசமான கருத்து இருந்தது. மதங்களிடையே சுவாமி ஒருபோதும் வேறுபாடு கண்டதில்லை. மதச் சுதந்திரம் மக்களுக்கு வேண்டு மென்று வற்புறுத்தினார்.

நாஞ்சில் நாட்டில் வெள்ளாளர்களுக்கு இடையே இத்தாயமுறை இருபதாம் நூற்றாண்டிலும் இருந்துள்ளது. இதன் கொடுமைகளை எதிர்த்துக் கவிமணி அவர்கள் எழுதிய கவிதைநூல்தான் மருமக்கள்வழி மான்மியம். இந்நூல் வந்தபின் மக்கள் எழுப்பிய போராட் டங்களால் மருமக்கத் தாயமுறை நீக்கப்பட்டு, மக்கத் தாயமுறை நடை முறைக்கு வந்தது. திருவி தாங்கூர் மன்னர் குடும்பத்தில் இன்றும் இம்முறை தான் பின்பற்றப் பட்டுவருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

1924இல் ஆலுவாய் அத்வைத ஆசிரம வளாகத்தில் ஒரு சர்வமத மாநாடு நடத்தினார் சுவாமி. ஒரே மேடையில் பல மதங்களின் கொள்கைகள் விளக்கப் படும்பொழுது, எல்லா மதங்களுக்கும் அடிப்படையாக இருக்கும் பொதுவான கோட்பாடுகளைப் புரிந்து கொள்வது எளிது என்று அவர் கருதினார். மாநாட்டு நுழைவாயிலில் விவாதிப்பதற்கும் வெற்றி பெறுவ தற்கும் அல்ல. தெரிந்துகொள்ளுவதற்கும் தெரிவிப் பதற்குமாகவே என்ற இலட்சிய வாசகத்தை எழுதி வைக்கச் செய்தார்.

இது மதம் பற்றிய அவர் பார்வை. அந்த அடிப்படையில் தான் ஒரு சாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் மனிதனுக்கு என்ற புகழ் பெற்ற கோட்பாட்டை உருவாக்கினார் சுவாமி.

சுவாமியினுடைய புகழ் இந்தியா எங்கும் பரவியது. சுவாமி இந்தியாவின் இதர பாகங்களுக்கும் இலங்கைக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1922இல் சுவாமியைக் கவியரசர் தாகூர் சிவகிரியில் சந்தித்தார். அவரோடு சி.எப். ஆண்ட்ரூசும் வந்திருந்தார். குமாரன் ஆசான் விரித்த பாயில் உட்கார்ந்து, அவர்கள் நீண்ட நேரம் உரையாடினார்கள். புறப்படும்போது சுவாமியின் இரண்டு கைகளையும் தன் கையில் எடுத்து முத்தம் கொடுத்தார் தாகூர்.

தன் கொள்கைகளைப் பரப்பத் தொண்டர்கள் தேவை என்பதை உணர்ந்த சுவாமி, ஆசிரமங்களின் செயல்பாடுகளைக் கவனிக்கத் துறவிகளின் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். அதன்படி ஸ்ரீ நாராயண தர்ம சங்கம் என்ற துறவிகளின் அமைப்பு

1928இல் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு சாதி, சமயம் கடந்து சகல மக்களுக்கும் தொண்டு செய்த குரு 1928இல் தன் 72 ஆவது வயதில் முழுமை அடைந்தார்.

சுவாமி தன் காலம் முழுவதும் ஒரு தூய்மையான ஆன்மிகவாதியாக வாழ்ந்தார். சாதி, சமய அழுக்குகள் அவர் மீது ஒருபோதும் ஒட்டவில்லை. அவருடைய சிந்தனைகள், செயல்கள் அனைத்தும் மனித குல முன்னேற்றம் என்ற வளர்திசையிலேயே இருந்தன. மலையாளம், தமிழ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் ஆழ்ந்த புலமையுள்ளவராக இருந்த சுவாமி, மக்களின் உயர்வுக்காகப் பல நூல்களை எழுதினார். மலையாளத்தில் 30 நூல்கள் எழுதினார். திருக்குறளைத் தமிழிலிருந்தும், அய்சோவ ஸ்யோபனிஷத்தை சமஸ்கிருதத்திலிருந்தும் மலையாளத்துக்கு மொழிபெயர்த்தார். வடமொழியில் 12 நூல்கள் எழுதினார்.

அவருடைய நூல்களுக்கு நிகரான புகழ் பெற்றவை அவருடைய உரையாடல்கள். அவர் ஒரு கவிஞரும் கூட.

மதம் எதுவாக இருந்தாலும் மனிதன் நன்றாக இருக்க வேண்டும் என்று இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர் தந்த முழக்கம் இன்றும் காலப் பொருத்தம் உடையதாக இருக்கின்றது. வகுப்பு வாத சக்திகள் முண்டி எழுந்து கொண்டிருக்கும் இக்காலத்தில், அதற்கு எதிரான மக்கள் போராட்டத்தில் வலிமையான ஆயுதங்களாக அவருடைய வழிகாட்டல்களும் கருத்துகளும் அருமையாகப் பயன்படும்.

**–பொன்னீலன்**



**செயல்பாடுகள்**

- கேரளச் சமூக மறுமலர்ச்சியில் நாராயணகுருவின் பணிகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- நாராயணகுருவிற்குப் பின் இன்றுள்ள கேரளச் சமூகச்சூழல் மற்றும் இயக்கங்களின் பணிகள் பற்றிக் கலைந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

## கைலாஷ் சத்யார்த்தியின் 84 ஆயிரம் குழந்தைகள்

மத்தியப்பிரதேச மாநிலம் ஹர்பால்பூர் நகரின் அருகேயுள்ள போதி எனும் குக்கிராமத்தைச் சார்ந்த இரண்டு வயதுக் குழந்தைதான் லக்ஷ்மணசிங். அந்தக் குடும்பத்தின் சொத்தான ஓர் ஏக்கருக்கும் குறைவான நிலத்தில் அவர்கள் கோதுமை வளர்த்தார்கள். 1975ஆம் ஆண்டு பெய்த ஒரு பனிக்கட்டி மழையில் அந்தப் பயிர் முற்றிலும் அழிந்துபோனதால், லக்ஷ்மண் பெற்றோர் தில்லி நகருக்கு இடம்பெயர்ந்தனர். நிசாமுதீன் ரயில்நிலையத்தில் அவர்கள் வந்திறங்கியதும், கல்குவாரி ஒப்பந்தக்காரர் ஒருவரின் ஏஜென்ட் கண்களில் பட்டனர். அவர் அவர்களை ஃபரீதாபாத் எனும் ஊருக்கு அழைத்துச் சென்றார்.



அவர்களைப் பார்த்ததும் அந்த ஒப்பந்தக்காரர் லக்ஷமண் அப்பாவுக்கு மூவாயிரம் ரூபாயை முன்பணமாக எடுத்துக் கொடுத்தார். அவருடைய குவாரியில் கல் உடைத்து, லாரிகளில் ஏற்றுவதற்கு லக்ஷமண் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சேர்த்து வாரத்திற்கு ரூ.150-200 சம்பளம் கொடுத்தார். லக்ஷமணுக்கு ஐந்து வயதானதும் அவனும் கல் உடைத்து வாளிகளில் நிரப்ப ஆரம்பித்தான். ஒட்டுமொத்தக் குடும்பமும் காலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை வேலை செய்தார்கள். உணவு, இடைவேளை என்றெல்லாம் எதுவும் கிடையாது. குவாரிக்குள் போய்விட்டால், அங்கேதான் இருக்க வேண்டும்.

மற்ற கொத்தடிமைகள் போல லக்ஷ்மண் குடும்பமும் குவாரிக்கு அருகிலேயே ஒரு குடிசையில் வசித்தது. ஒப்பந்தக்காரரின் உணவகம் ஒன்றில் சாப்பிட்டார்கள். ஒவ்வொரு வேளையும் உணவு உண்டதும் அந்தத் தொகை கடன் கணக்கில் எழுதப்பட்டு விடும். அதேபோல மருத்துவரிடம் சென்றால் அந்தச் செலவும் கடன் கணக்கில் ஏறிவிடும். வெளியுலகோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் மாட்டிக்கொண்டு முழித்தனர் அவர்கள். இதற்கிடையே லக்ஷ்மணுக்கு இரண்டு தம்பிகளும் பிறந்துவிட்டார்கள். இவ்வளவு பெரிய குடும்பத்தோடு கிராமத்துக்குத் திரும்பிப் போகும் பேச்சுக்கே இடமில்லை. திரும்பிப்போவதற்கு அங்கே எதுவும் இருக்கவுமில்லை.

கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று கூறுவதுண்டு. இலங்கையின் வேந்தனே அவ்வளவு கலங்கினான் என்றால், கடன்பட்ட இந்தக் கொத்தடிமைகள் எவ்வளவு நிலைகுலைந்திருப்பார்கள். திக்கற்று நின்ற லக்ஷுமண் குடும்பத்துக்குத் தெய்வமாய் வந்தார் கைலாஷ். எட்டு, பத்து நண்பர்களுடன் 30 கி.மீ. பேருந்தில் பயணம் செய்து இரவு வேளைகளில் கைலாஷ் வருவார். முதலாளிகளுக்கும் அவர்களின் அடியாட்களுக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமாக ஆங்காங்கே கூட்டம் நடத்திக் கொத்தடிமைகளை யூனியன்களாக ஒருங்கிணைத்தார். குவாரிக்காரர்கள் இவர்கள்மீது தாக்குதல் நடத்தினர். உச்சநீதிமன்றம் சென்று வாதாடி, வெற்றிபெற்று, காவல்துறையின் உதவியுடன் கிட்டதட்ட இந்தித் திரைப்படங்களில் வருவதுபோல இந்த மக்களைக் காப்பாற்றினார் கைலாஷ்.

லக்ஷுமண் போன்ற சிறுவர்களைத் தன் வீட்டருகேயுள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார் கைலாஷ். ஆனால் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த அந்தக் குழந்தைகள் மிரண்டு போயிருந்தார்கள். எனவே அவர்களின் சிறப்புத் தேவைகளை மனதிற்கொண்டு சிறப்புப்பள்ளி களை நிறுவி, அந்தந்தப் பகுதி ஆசிரியர்களை நியமித்து, அவர் களைக் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.



கைலாஷின் குழந்தைமை பாதுகாப்பு இயக்கம் பல்வேறு போராட்டங் களை நடத்தியுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களைப் பாதுகாக்க 1998 ஆம் ஆண்டு உலக அளவிலான பேரணி நடத்தினார்கள். பதினான்கு வயதுக்குக் குறைந்த குழந்தைகளைப் பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று இந்தியாவில் சட்டத்திருத்தம் கொண்டுவந்தார்கள். குழந்தை களுக்கு அடிப்படைக் கல்வி உரிமை வழங்குவதற்காக 2001ஆம் ஆண்டு 180 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியோடு 15,000 கி.மீ. நடைப்பயணங்கள் நடத்தி அரசியல் சாசன மற்றும் சட்டத்திருத்தங்கள் கொண்டு வந்தார்கள். குழந்தைகளை வீட்டுவேலைகளில் அமர்த்துவதை எதிர்ப்பதற்காக உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், கல்வி மற்றும் சமூகநலத்துறை அதிகாரிகள், மக்களவை மற்றும்



மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு 6487 கடிதங்கள் எழுதினார்கள். நாடெங்கும் 320 கிராமங்களில் 16140 சுவரொட்டிகள் ஒட்டினார்கள். தில்லி மாநகரில் 225 குடியிருப்பாளர் நல அமைப்புகள் குழந்தைகளை வீட்டுவேலைகளில் அமர்த்தாமலிருக்கச் செய்தார்கள். வீதி நாடகங்கள், சுவரெழுத்துகள், மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் எனப் பற்பல உத்திகளைக் கையாண்டு குழந்தைகள் கடத்தலுக்கு எதிராகக் காணாமல்போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கு என்றெல்லாம் உழைத்தார்கள்.

கைலாஷ் 1954 சனவரி 11 அன்று மத்தியப்பிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்தில் பிறந்தார். அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்த அவர், விதிஷாவிலுள்ள பொறியியற் கல்லூரி ஒன்றில் மின்னியல் துறையில் பட்டம் பெற்றார். உயர் மின்னழுத்தம் குறித்து முதுகலைப்பட்டம் படித்து முடித்த கைலாஷ், போபால் நகரிலுள்ள ஒரு கல்லூரியில் ஓரிரு ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் 1980ஆம் ஆண்டு தனது ஆசிரியப்பணியை விட்டுவிட்டுப் பொதுச் சேவையில் இறங்கினார். தனது மனைவி, மகன், மருமகள், மகள் ஆகியோரோடு தில்லியில் வசிக்கும் கைலாஷ் அற்புதமாகச் சமைப்பார் என்கின்றனர் அவர் நண்பர்கள். ஆம். குழந்தைகளைப் போற்றும் புதிய சமூகத்தையும் சமைக்கிறார் கைலாஷ்.

**– சுப. உதயகுமாரன்**



**செயல்பாடுகள்**

- நோபல் பரிசுபெற்ற கைலாஷ் சத்யார்த்தியின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுங்கள்.
- குழந்தைகளின் நலனுக்காக அமைந்துள்ள அமைப்புகளின் சேவைகள் குறித்துச் சிறுகட்டுரை எழுதுங்கள்.
- மாற்றங்கள் வேண்டிய சமூகம் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியை உங்கள் பள்ளிமன்றத்தில் நடத்துங்கள்.

அண்டம் - உலகம்
அந்தி - மாலை நேரம்
இரப்பார் - இரந்து கேட்பவர்
இரலை - மான்
இழுக்கு - குற்றம்
உண்டி - உணவு
உந்திச்சுழிப்பு - தொப்பூழ்
உபாயம் - வழி
ஒப்படி - நிறைவேற்றுதல்
ஓலை - ஓலைச்சுவடி
ஓம்புதல் - பாதுகாத்தல்
கசடர் - குற்றம் உடையவர்
கழல் - காலில் அணியும் ஆபரணம்
கழனி - வயல்
கனல் - நெருப்பு
காணி - நில அளவை
காப்பு - பாதுகாப்பு
காலன் - எமன்
கானவன் - காட்டில் வசிப்பவன்
கூளம் - வைக்கோல்
கேளிர் - உறவினர்
கோடி - புத்தாடை
கோடியர் - திரைச்சீலையின் இரு பக்கமும் நிற்பவர்கள்
கோவலர் - ஆடு, மாடு மேய்ப்பவர்கள்
கோளாறு - தகராறு
சுகசேமம் - நலம்
சுடரான் - ஒளி பொருந்தியவன்
திமிலை - ஒரு தோல் கருவி
துப்புரவு - தூய்மை
பஞ்சபூதம் - ஐம்பூதம்
பரசி - பாய்ந்து
பிராயம் - வயது
பிழைப்பு - வேலை
புரோகிதர் - பூசை நடத்துபவர்
புகல் - அடைக்கலம்
மந்தி - பெண் குரங்கு
மரக்கால் - முகத்தல் அளவை
மருட்டு - ஏமாற்று
முழவுக்கண் - வாத்தியக் கருவியின் மையப் பகுதி
வெள்ளம் - தண்ணீர்
வெள்ளாமை - விவசாயம்
வேலி - நில அளவை
வையகம் - உலகம்